தென்மொழி
தனித் தமிழ் இலக்கியத் திங்களிதழ்
தமிழ்த் தொண்டர்க்கு...!
மட்டென்று செந்தமிழை எண்ணி, மதித்திலர்முன்
சட்டென்று தாவுக; தாழ்வைச் சரிசெய்க!
பட்டென்றே உண்மை பகர்ந்திடுக; பாடின்றேல்
வெட்டொன்று துண்டிரண்டாய்ப் பேசி, வெலவெலக்க
குட்டொன்று குட்டி, அவர் கூனை நிமிர்த்திடுக!
தட்டொன்றால் உள்ளம் விழிப்பார் தமையணைக்க!
சுட்டொன்றுப் போக்கில் சுழலும் மடவோரை
விட்டகன்று செல்க! விழலுக் கிறையற்க!
எட்டுணையும் ஒப்பா இடும்பை விளைப்பாரைக்
கட்டொன்றாய்க் கட்டிக் கடலில் எறிந்திடுக!
கட்டொன் றறியாத கன்னித் தமிழ் தாங்கும்
முட்டொன்றுப் பிற்க முனைந்து!
நளி
(கார்த்திகை)
தி. பி. 1995.

தென்மொழி

தனித் தமிழ் இலக்கியத் திங்களிதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 2 | கார்த்திகை தி.பி. 1995 (1964 நவம்பர்) | ஓலை 10

சனவரி 26-க்குப்பின்....!

வடநாட்டு இந்தி வெறியர்தம் செவிப்பறை அற்றுப் போகுமாறு ஆயிரமாயிர முறைகள் 'இந்தியைத் தென்னாடு-குறிப்பாகத் தமிழகம் ஏற்காது' என்று வலித்தும், மெலித்தும் கூறிப்பார்த்தும், இறுதியில் நேர்மையும், அறமுமற்ற அவர்தம் காட்டாட்சியின் கூட்டுப் பயனாலும், இங்குள்ள ஐந்தாம் படைத் தலைவர் தம் தலையசைப்பாலும் இந்தி தமிழக மண்ணில் நிலையாக வேரூன்றத் தொடங்கிவிட்டது. 'இந்தியை இந்நாட்டு எல்லைப்புற வாயிலில் கூட நுழையவிடோம்' என்று ஏக்கழுத்தம் பேசிய கையழுத்தக் காரத் தென்னகத் தலைவர் சிலரின் தலைகள் மேலும், நெஞ்சாங் குலைகள் மேலும் இந்தி கால்வைத்து மிதித்துக்கொண்டு வந்து தமிழகத்தில் வலிந்து குடியேறிவிட்டது. வருகின்ற சனவரி 20-ஆம்நாள் அதன் புதுமனைபுகுவிழா! ஆம் சட்டப்படி இந்தி, இந்தியாவின் ஆட்சிமொழி! இனி இந்தியாவிலுள்ள பிற மொழிகள் யாவும் அதன்முன் கைகட்டி வாய்பொத்தி ஏவல் செய்ய வேண்டியதுதான். தமிழனும் வடவனின் 'இந்திக்' கட்டளைக்குக் கட்டுப்பட்டு நடக்கத்தான் வேண்டும். அன்று சேரன் செங்குட்டுவன் வடவரசர் கனக விசயர்தம் தலைகளின் மேல் தம் ஆட்சி வலுவால் கண்ணகி படிமத்துக்குக் கல்லேற்றி

சிறப்பாசிரியர்: புலவ, பண்டித ஞா. தேவநேயப் பாவாணர்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

உறுப்பாசிரியர்: தங்கப்பா, மு. சாத்தையா, செம்பியன.

உரிமை, வெளியீடு: தாமரை, உலகமுதல்வி.

அச்சகம்: மித்திரா, கடலூர்-2.

வந்த கதையைப் படித்துக் கொண்டே, இன்றையத் தமிழன் தன் தலையில் கற்களை ஏற்றிக்கொண்டுபோய்த் தில்லியில் அவன் வழி முறையினர்க்கு மாளிகைகள் பல கட்டித்தரல் வேண்டும். அதற்காக இவன் இடுப்புத் துணியை வரிந்து கட்டிக்கொண்டு என்றுமே அணியமாகவும் உள்ளான். இவனைப் போன்ற சோற்றுக்கு மானந் துறந்த மக்களின் வரலாறுகள் எல்லாம் இப் படிப்பட்ட முடிவோடுதான் கல்லறையுள் புதைக்கப்படுகின்றன.

முக்கழகம், முத்தமிழ், மூவேந்தர் என்றெல்லாம் பேசிப் பேசியே தம் வாழ்வைக் குலைத்துக்கொண்ட தமிழர்கள் இனி முக்காடிட்டுக் கொண்டு மூலையில் முடங்கிக் கிடக்கவேண்டியது தான். மாநில அரசுகள் சட்டப்படி இனி இந்தி வளர்ச்சிக்கு முன்னையினும் முனைந்து நிற்றல் வேண்டும் என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டுவிட்டது. வடவரின் வாயசைவிற்காகக் காத்து நில்லாமல் அவர்தம் உள்ளக் குறிப்பை உணர்ந்து அவரின் உவப்பிற்காகவே தம் உடல், பொருள், ஆவி அத்தனையும் பேணி வருகின்ற வல்லடிமைகள்தாம் இங்குள்ள தமிழக ஆட்சி யாளர்கள். வழிப்போக்கன் கொள்ளைக்காரனை நம்புவதுபோல் அவர்களைத் தமிழர்கள் இதுவரை நம்பியிருந்தது போதும்; இனி யும் நம்ப வேண்டா! அவ்வாறு நம்பிப் போகின்றவர்களைப்பற்றி யும் நமக்குக் கவலை இல்லை. ஆனால் நல்லுணர்வு படைத்த, பல்லாயிரக் கணக்கான உண்மைத் தமிழ் உள்ளங்கள் இத் தமிழகத்தில் இருப்பது நமக்குத் தெரியும். அவர்களை நோக்கி ஒருசொல்: 'இனியாவது இந்தியைப் படியுங்கள்' என்று இரக்க வுரை பகரும் ஏமாளிகள் சிலர் உங்களை அணுகுவார்கள்; 'பார்ப் பனர்களைப் பாருங்கள்; எவன் வந்து எந்த மொழியைப் படி என்றாலும் படித்துக் கொள்ளுகின்றான்; அதனால்தான் அவன் மிகுவாக முன்னேறிப் போகின்றான்; நீங்களும் அவனைப்போல் முன்னேற வேண்டாமா? இந்திபடியுங்கள்' என்று நா நயமாகப் பேசுவர் கோமாளிகள் சிலர். 'சோறு வேண்டுமா? துணி வேண்டுமா? இந்தி படி' என்பர் சோம்பேறித் தலைவர் சிலர்; மானங்கெட்ட அவ்வடிமைகளின் முகத்தில் 'தூ'வெனத் துப்பி அவர்களை விட்டுப் புறம் போங்கள். அவர்தம் போலிச் செயல் களை வெறுத்தொதுக்குங்கள்.

தமிழர்தம் இறுதிப் படை, தன்மானப்படை ஆங்காங்கே திரண்டு வருவதை நாம் அறிவோம். நேர்மையும், விறலாண் மையும் கொண்ட அவ் விடுதலைப்படை நம் அடிமைத் தளைகளை அறுத்தெறியும் நாள் தொலைவில் இல்லை. அவ் வெற்றிப் படை யைக் களம் நோக்கிச் செலுத்தும் நாளை எதிர்பார்ப்போம். தமி ழர்தம் மானம், வாழ்வு, பண்பாடு, மொழி இவற்றைக் காத்துக் கொள்ளத் துடித்துக் கொண்டிருக்கும் அம் மறவக் கைகளொடு உங்கள் கைகளையும் கோர்த்துக் கொள்ளுங்கள். அவ்வெற்றித்

தோள்களோடு தோள் சேர்த்துக் கொள்ளுங்கள். அரசியல் வானில் ஆட்சிக் காற்று எப்பொழுதும் ஒருபுறமாகவே வீசிக் கொண்டிருப்பதில்லை. அது திசைமாறித் திசைமாறித்தான் வீசும். காற்று வீசுகின்ற போக்கில் தம் கொள்கைப் பாய்மரங்களைக் கட்டியிருக்கின்ற கட்சிக் கப்பல்களில் நீங்கள் ஏறுதல்வேண்டா. அத்தகைய கப்பல் தலைவர்களின் ஆரவாரப் பேச்சுகளை நீங்கள் மதித்தல் வேண்டா. குருசேவின் வீழ்ச்சி அவர்களுக்கும் உங்களுக்கும் ஒரு புதிய பாடம்! தமிழர்களே ஒன்று திரளுங்கள்......!

அரிசியும் அரசியலும்!

நாழியரிசிக்காக நாம் படுகின்ற பாட்டைச் சொல்லி முடியாது. நடுத்தர வளர்ச்சியுள்ளவர்களே ஒரு படியரிசிக்காக மூன்று மணி நேரம் வரிசையில் நிற்க வேண்டியுள்ளபொழுது, ஏழைகளைப்பற்றி நினைத்துப்பார்க்கவும் அச்சமாக இருக்கின்றது. ஐந்தாண்டுத் திட்டங்கள் பலவாருகப் பேசப்பெற்றும் எழுதப் பெற்றும் விளம்பரப் படுத்தப்பெற்றும் வருகின்றனவே தவிர, அவை உண்மையிலேயே செயல்படுமாயின், நமக்கு இத்தகைய உணவுப் பற்ருக்குறை வருதற்குக் காரணமே இல்லை. 'அவை செயல்பட்டுத்தான் வருகின்றன; அதனுல்தான் மக்களின் பொருள்நிலை-வாங்கும் திறம் வளர்ந்திருக்கின்றது' என்ருல், அப் பொருள் பெருக்கத்தாலும், வாங்கும் திறத்தாலும் யார்க்கு யாது பயன்? எல்லாரும் ஏதாவதொரு தொழில் செய்தே பிழைத்தல் வேண்டியுள்ளது. அத் தொழிலுக்கென அவர்களுக்குக் கொடுக்கப்பெறும் ஊதியம் அச்சடிக்கப்பெற்ற தாளாகவும் நாணயமாகவும் எவ்வளவாக இருந்தால்தான் என்ன? அவற்றைக்கொண்டு வாங்குவதற்கு உணவுப் பொருள்கள் கிடைத்தால்தானே அந்தப் பொருளியல் வளர்ச்சியால் நமக்குப் பயனுண்டு அல்லாக்கால் அப் பணப் பெருக்கத்தால் என்ன பயன்? பொருளியல் வல்லுநர்களின் ஆராய்ச்சிப் பெருமிதம், ஏழைகளின் எரிகின்ற வயிற்றுக்கு ஒரு கவளம் சோற்றை உண்டாக்கித் தருமா? தொட்டதெல்லாம் பொன்னுகுமாறு வேண்டிய அறிவிலியின் பாங்கில் நம் அரசியல் தலைவர்கள் அறிவுறுத்துவது வியப்பாக இருக்கின்றது. ஒரு கவளம் சோற்றுக்காக மக்கள் ஒரு நாள் முழுவதும் ஈட்டிய பணத்தைச் செலவழிக்க வேண்டியிருப்பதா பொருளியல் முன்னேற்றம்? 'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்' என்னும் அறிவுரை அரசினரின் காதுகளில் விழவில்லையா? இல்லை திருக்குறளையும் அவர் வடநாட்டினருக்கு அடகு வைத்து விட்டனரா? மக்கள் உணவுக்கு மன்ருடிக் கொண்டிருக்க மன்ருடிகளும், பூவராகன்களும் 'அரிசி கிடைக்கவில்லை என்பதெல்லாம் வெறும் கூச்சல்' என்று இங்கே ஊர்க்கு ஊர் பிதற்றிக் கொண்டு வருவதும், காமராசுகளும், பக்தவத்சலங்களும் தில்லி

யில்போய் 'அதெல்லாம் ஒன்றுமில்லை; தென்னாட்டில் அரிசி ஏராளமாகவிருக்கின்றது. எதிர்க்கட்சிகளெல்லாம் இந்நிலையைத் தங்கட்குக் கருவியாகப் பயன்படுத்திக்கொண்டு மக்களைக் குழப்பத்திற்குள்ளாக்கி வருகின்றது' என்று நெஞ்சாரப் பொய்பேசி வருவதும் மிகவும் வருந்தத்தக்கதும் கண்டிக்கத்தக்கதுமாகும்.

வெறும் அரசியலே பேசியும், கட்சி வளர்ச்சியையே கருதியும் பேராயக் கட்சிக்காரர்கள் ஆட்சியை நடத்திவிட முடியும் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றனர் போலும்! தேர்தலில் செலவழிக்கத் தங்கட்குப் போதுமான அளவு பணப் புழக்கம் வாய்த்திருப்பதையே ஒருவேளை இவர்கள் பொருளியல் முன்னேற்றம் என்று கருதிக் கொண்டிருக்கின்றனரோ என்னவோ? ஆயிரக்கணக்கான நிலங்களையும், தோப்பு துரவுகளையும், ஊர்திகளையும் மனைகளையும் தங்கட்குச் சொந்தமாக்கிக் கொண்டுள்ள பேராயக் கட்சி அமைச்சர்கள், செல்வர்கள் ஒவ்வொருவரும் இந்நாட்டில் பல்லாயிரக் கணக்கான ஏழைகளின் சோற்றைத்தான் நாளுக்கு நாள் தட்டிப் பறித்து உண்டு, அவர்களைப் பட்டினி போடுகின்றனர் என்பதை மக்கள் உணர்ந்து கொண்டு வருகின்றனர். அவர்கள் அடிவயிற்றில் பற்றி எரிந்து கொண்டிருக்கும் தீயை அணைக்க அவர்கள் முற்படவில்லையாயின் இவர்களின் அரசியலும், ஐந்தாண்டுத் திட்டங்களும் அத்தீயால் பொசுக்கப் பெறும் என்பதை அவர்கள் உணர்வார்களாக. ஒன்றுக்கும் உதவாத வெறும் போலி நாகரிகப் பொருள்களே கொட்டிக்கிடக்கும் நம் நகரக் கடைத் தெருக்களை வலம் வந்து, மக்களின் வாங்கும்திறம் உயர்ந்துவிட்டது என்று தமுக்கடிக்கும் இவ் வெற்றுவாய் அமைச்சர்களின் நிகரமை (Socialism) கொள்கை எத்தகைய போலியானது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டுகின்றோம். வேளாண்மைப் பொருள்களைப் புறக்கணித்து வேண்டாத ஆரவார முன்னேற்றங்களையே நாடிப் பறக்கும் அரசியல் தலைமை வண்டினங்கள் தம்மையும் தம் மக்களையும் இனியேனும் பேண முற்படுவார்களாக. உணவும், உரிமையும் தட்டிப் பறிக்கப்பெறும் இந் நிலைமையை வேருடன் கல்லி எறிய மக்களும் முனைந்து நிற்பார்களாக!

— பெருஞ்சித்திரன்.

இந்தி படித்தால்தான் ..

..தமிழர்களுக்கு அரசினர் வேலை கிடைக்கும் என்ற நிலை இந்நாட்டில் இருக்குமானால்,

..சோறு, உடை கிடைக்கும் என்ற கட்டாய நிலை இத் தமிழக மண்ணில் இருக்குமானால்,

...எதிர்காலத் தமிழ் மக்கள் வாழலாம் என்கிற கொடுநிலை இங்கு இருக்குமானால்,

மானமுள்ள தமிழர்களே! நீங்கள் சொல்லுங்கள்...

இது குடியரசு நாடா? அல்லது வல்லரசு நாடா?

இற்றைத் தமிழக நிலை!

இற்றை நாள் தமிழகத் திழிநிலை நினைக்கின்
எரியெனக் கனன்றிடும் நெஞ்சம்;
அற்றை நாள் நினைந்தே அனல்மெழு காகும்;
'ஐயகோ' 'ஓ'வெனக் கரையும்!
பற்றறத் துறந்து விலங்குவாழ் காடே
பதியென நண்ணினும் நண்ணும்!
குற்றுயிர் உடலிற் குடிபெயர்ந் தோடும்!
கொடு நிலை கூறவும் படுமோ?

அறலை கள்வர் அரசென அமர்ந்தார்;
அறிவிலார் அமைச்சென உயர்ந்தார்;
வீறிலா நெஞ்சினர் குடிநலம் காக்கும்
வியப்புறு படைஞரா நின்றார்!
கூறுகூ றுக மக்களைப் பகுத்தார்;
கோடியாங் குலங்களை வகுத்தார்!
சோறிலா மிகப்பலர் மாண்டிடச், சிலரோ
சூட்டுணா முப்பொழு துண்பார்!

வலையுறு மீன்போல் வாய்ந்ததோ ரியக்கம்
வாழ்வெனுஞ் சிறப்படைந் ததுவே!
குலைவுறு முளத்தார் இருவரும் கூடிக்
குடும்பமென் றமைந்துகொள் வாரே!
மலைவுறு தோற்றத் துயர்விலா உயிரை
மக்களென் றீன்றெடுத் துவப்பார்!
அலைவுறு நோக்கின் விலைமகள் முயக்கம்
அன்பெனத் திகழ்ந்துயர்ந் ததுவே!

துரை-மாணிக்கம்

இழிதகைக் கூளங் குப்பைகள் எழுந்தே
இலக்கிய மென உலா வருமே!
மொழியுயர் வறியா மூடர் எல் லாரும்.
மூதறி வாளரென் றுயர்ந்தார்.
பழிமிகு பேதையர் புன்மொழி யெல்லாம்
பாடலா உருவெடுத் தனவே!
கழிமடம் பெருகிய பூரியர் தமிழ்ஆய்
கணக்கரென் றுர்ப்பரிப் பாரே!

கட்குடி யுண்டார் களிப்பெழக் குதித்தல்
கலையினும் கூத்தினும் படுமே!
வெட்கமில் பெண்டிர் வெதிர்வெதிர்ப் புறுதல்
வியன்மிகு ஆடலென் பாரே!
ஒட்பமில் மாந்தர் உடுக்கையும், மிடுக்கும்
உயர்நா கரிகமென் றுரும்!
நுட்பமில் லாதார் புல்லுரை யெல்லாம்
நூல்வடி வெடுத்துயர் பெறுமே!

இரவினில் திருடிப் பகலினில் ஈதல்
ஈகையென் றேத்தவும் படுமே!
கரவுளம், பொய்ம்மொழி, கொடுவினை யாவும்
கவின்மிகு செல்வமா விளையும்!
வரவினுஞ் செலவினும் கொள்ளைகள் நிகழ்த்தும்
வாணிகர் எங்கணும் திகழ்வார்!
அரவினும் கொடியார் திருத்தமில் உரைகள்
அரசியல் கட்சிகள் ஆமே!

வாய்மையொன் றில்லாப் பொய்மைக ளெல்லாம்
வழக்காய் வார், உரு வெடுத்த!
தூய்மையில் தோயாப் போலிகள் முற்றுந்
துறவியர் துவருடை பூண்ட!
தாய்மையிங் கில்லை! பெண்மையிங் கில்லை!
தனித்திறல் ஆண்மையிங் கில்லை!
பேய்மைகள் யாவும் மக்களென் பெயரால்
பிறந்திவண் திரிவன கண்டீர்!

வேறென்ன சொல்வது?

ஊழல் பற்றிய செய்திகளைப் பேராயக் கட்சிக்காரர்கள் தம் தலைமையார்க்குத் தெரிவிப்பதற்கு முன்பு செய்தித்தாள்கட்குத் தெரிவித்து விடுகின்றனர்; இது தவறு.
— காமராசர்

அஃதாவது முன்பே எங்கட்கு அவற்றை அறிவிப்பார்களானால் அவை செய்தித்தாள்களில் வராமலேயே செய்து விடுவோமே!

முன்பு குறுகிய தொலைவு நடந்துசென்ற மக்கள், தற்பொழுது உந்திற் செல்ல இரண்டுமணி நேரமாயினும் காத்திருக்கின்றனர். பணம் இருப்பதால் உந்திற் செல்வதையே விரும்புகின்றனர்!
-திரு. மன்றாடியார்.

அமைச்சர்களைப் பார்க்கவும் சிலர் மணிக்கணக்காக, நாட்கணக்காகக் காத்திருக்க வேண்டியுள்ளதே, இதுவும் நாட்டு வளர்ச்சிக்கு அறிகுறிதானே?

இந்தி பேசாத மாகாணங்களில் இந்தி ஆசிரியர்கட்கு ஏற்படும் சம்பளச் செலவு முழுவதையும் நடுவணரசு ஏற்றுக் கொள்ளும். இந்திப் பயிற்சிக் கல்லூரிகட்கும் இந்தி மொழி வழிக் கல்வி நிலையங்கட்கும் ஆகும் செலவினையும் அவ்வாறே ஏற்றுக் கொள்ளும்.
— செய்தி

" தன்மானத் " தமிழர்கள் பயன்படுத்திக் கொள்வார்களாக!

புதுவைத் தேர்தலில் பேராயக் கட்சிக்கு எதிராகத் தேர்தலில் நின்றவரின் தொண்டர் இருவர் தாக்கப்பட்டனர். ஒருவர் காவல் நிலையத்தில் சென்று கூறியபொழுது கேட்பார் யாருமில்லை.
— செய்தி

வாழ்க 'காந்தி'யம்!

பெண்டிர் நடையழகு பயில மேற்குச் செருமனியில் பயிற்சிப் பள்ளி! -செய்தி

நம் அமைச்சர்களை அப்பள்ளியில் சேரச் சொல்லலாமே!

சென்னை ஆளுநர் 'நவபாசாணம்' சென்று 'நவக்கிரக பூசை' நடத்தினார்!

அதைவிட வேறு வேலை?

பொது மக்கள் தாமாக எண்ணிப் பார்த்தல் வேண்டும். அரசியற் கட்சிகளின் பேச்சில் மயங்குதல் கூடாது!
— திரு. அண்ணாதுரை

பொது மக்களை திரு. அண்ணாதுரை இன்னும் நம்புகின்றாரா?

'கறுப்புப் பணம்' என்ற திரைப் படத்தைக் கண்ணதாசன் எழுதி நடிக்கிறார்!
— செய்தி

யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையம். . . . !

உடல்நலத்துறை அமைச்சர் திருவாட்டி சுசிலா நய்யார் வீட்டுக்கு அளிக்கப்பட்ட பால் புட்டியில் ஈ இறந்து கிடந்தது!
— செய்தி

அந்த ஈயும் அந்தப் பாலைக் குடித்துத்தான் இறந்திருக்கும்!

கல்லூரிகளில் தமிழ் பயிற்றுமொழி ஆவதை மாணவர் விரும்பவில்லை என்பதைக் கோவை நிகழ்ச்சிகள் காட்டிவிட்டன"
— குடியரசுக் கட்சித் தலைவர் திரு. சிவராசு

மாணவர்கள் இதை மட்டுமா விரும்பவில்லை . . . . கல்வித் துறையில் அமைச்சர்கள் தலையிட்டுக் குழப்புவதையும் விரும்பவில்லை.

தமிழ்மொழிப் **பற்று** வேண்டும் ஆனால் மொழி **வெறி** கூடாது.
— திரு சிவராசு

பேராயக் கட்சியினருக்குக் கூட அரசியல் பற்று வேண்டும்; பதவி வெறிகூடாதே.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் நிலமில்லாத அனைவருக்கும் வீட்டு மனைகள் அளிக்க எண்ணம்
— திரு. காமராசர்

நிலம் அளவுக்கு மிஞ்சி வைத்திருக்கும் மன்றாடியார்களை என்ன செய்வீர்களோ?

அசாமில் புதிய அசாமிய ஆட்சிமொழிச் சட்டத்தின்படி, பிரம்மபுத்திரா மாவட்டத்தில் அசாம் மொழியும், கச்சார் மாவட்டத்தில் வங்காள மொழியும் ஆட்சி மொழிகளாக இருக்கும்.
— செய்தி.

மானமுள்ள மக்கள் . . . . !

திரு. இலால்பகதூர் சாத்திரி மழையில் குடைபிடிக்க மறுத்து நின்று சொற்பொழிவாற்றினர்.
— செய்தி

நோய் வந்தால் மருந்தும் உண்ணாரோ? காந்தி வழியில் நடப்பவர் என்பதை இதிலாவது கடைப்பிடித்தாரே!

மொழியைப் பொறுத்தவரை, உணர்ச்சி கூடாது; பயனே கருதல் வேண்டும்.
— சென்னை ஆளுநர்.

உணர்ச்சியின்றி மொழி எப்படி வரும்?

திருச்சியில் கோவில் ஒன்றில் இறையுருவப் படிமத்தைக் காணோம்! திருடு போய் விட்டது!
— செய்தி

இதைவிட 'மறைந்து' போய் விட்டது என்று செய்தி வெளியிட்டிருக்கலாமே!

சென்னையின் முன்னாள் காவல்துறை மேலாளர் மீதில் கையூட்டுக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.
— செய்தி

இந்நாள் மேலாளர்கள்பற்றி, இனி வருநாளில் குற்றம் சாற்றப்படலாம்!

(தொடர்ச்சி 17–ஆம் பக்கம்.)

என் அண்ணாமலைநகர் வாழ்க்கை

பணி செயற் படலம் - 2-ஆம் பகுதி (தொடர்ச்சி)

ஞா.தேவநேயப் பாவாணர், எம்.ஏ.

2. இந்திய இன மொழிப் பண்பாட்டுக் கலப்பு.

செய்தியின் உண்மை அடிப்படையில் இதுவாகும்: (வெவ்வேறு சூழலில்தோன்றிய) பல்வேறுவகைப் பண்பாடுகள் ஒன்றுகூடி ஒரே வாழ்நிலையில் வளர்வதால், பெரிதோ சிறிதோ ஒத்த பொருளாட்சி நிலைமையோடும் பொது வரலாற்றோடும் கூடிய, ஒரு சிறப்பு வகைப் பண்பாடு ஒரு குறிப்பிட்ட நில வெல்லைக்குள் தோன்றுகின்றது. இதைச் சுருக்கமாய்ச் சொன்னால், நாட்டினப் பண்பாடுகள் பல் நாட்டினப் பண்பாடுகளின் தொடர்பாலும் முரண்பாட்டாலும் ஒப்புரவாதலாலும் எழுகின்றன எனலாம். புதிய வுலகத்தில் இதுவே நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. இனப் பண்பாட்டுக் கலப்பிற்கு மிகப்பெரிய எடுத்துக் காட்டுக்களுள் ஒன்று இந்தியாவாற் காட்டப்படுகின்றது. அதன் பெருமைக்கும் முற்றுந் தழுவியற்கும், இற்றை நாளில் அமெரிக்காவில் நிகழ்ந்து கொண்டிருக்கும் இனப் பண்பாட்டுக் கலப்புக்கூட இணையன்று. இப் புலனத்தைப்பற்றி மீண்டும் ஒருமுறை பேசத் தேவையில்லை. நான் முற்கூறியபடி, இதைப் பற்றிய என் கருத்துக்களை வேறோரிடத்தில் தெரிவித்திருக்கின்றேன் நமக்குள்ள இந்துப் பண்பாடென்னும் இந்தியாவின் பாழ்மையான பண்பாடு, எண்ணுக்கு மெட்டாத காலத்திலேயே இந்தியாவிற்கு வந்து, அதன் மண்ணிற் பக்கம் பக்கமாய் வாழ்ந்த பல்வேறு மொழிபேசும் பல்வேறு இனத்தாரின் கூட்டு வேலை என்னும் பேருண்மை, இன்று நிலவுகின்றது. இருக்கக் கூடிய வகையில், கோல் இனத்தாரின் முன்னோராகிய நிசாதர் அல்லது ஆத்திரியரே இக்கலவைப் பண்பாட்டின் முற்கூறுகளை அமைத்தவராவர். அவர்க்கு முந்தி வந்தவரும் இந்திய நிலத்தினின்று மறைந்து போனவராகத் தெரிபவருமான நீக்கிரோவரை விட்டுவிடலாம். பின்பு, முதற்கண் நண்ணிலக் கடற்கரை வாணராயிருந்தவரும் கிரேக்க நாட்டிலும் அதைச் சேர்ந்த தீவுகளிலும் மேலைச் சின்ன ஆசியாவிலும், எல்லெனியமுன்னை ஆயேகிய நாகரித்தை அமைத்தவரொடு தொடர்புகொண்டவருமாகச் சிலரால் நம்பப்படுகின்ற (இதுவே என்கருத்தும்) திரவிட மொழியாளர் வந்தனர். அதன்பின், சீன-திபேத்திய மொழிகளைப்பேசும் கிராதர் அல்லது மங்கோலியர், இந்திய மாந்தனின் அமைப்பில் மூன்றும் பெருங்கூறாய் வந்தமைந்தனர். ஆயின், அவர்களின் செல்வாக்கு தெக்காணத்திற்குத் தெற்கே

சென்றதாகத் தெரியவில்லை. இறுதியாக, நம் ஆரியர் வந்து, இந்திய நாகரிகத்தை முற்றுவித்து, அதன் அமைப்பிற்குச் சமற்கிருதம் ஆகிய முதன்மையான வெளியீட்டுவாயிலைத் தந்துதவினர்கள். அவர்கள் இறைவனால் தெரிந்தெடுக்கப்பட்ட மக்களாக அல்லது ஆளும் இனமாக வந்து, தமக்கு முந்திய இனத்தாரையெல்லாம் மேற்கொண்டார்கள். ஆயின், கிரேக்கநாடு தன்னைச் சிறைபிடித்தவரைச் சிறைபிடித்த நிலைமை இந்தியாவிலும் ஏற்பட்டது. ஆரிய மொழி, நிசாத அல்லது ஆத்திரிய மொழிகளும் சீன–திபேத்திய மொழிகளும் திரவிட மொழிகளும், பேசிய மக்கள் பக்கம் பக்கமாக வாழ்ந்து கொண்டிருந்த வட இந்தியாவில், உள்ள மொழிக் குழப்பத்திலும் முரண்பாட்டிலும், ஒன்றுபடுத்தி யிணைக்கும் கருவி என ஆயிற்று. வட இந்தியாவில் ஆரிய முன்னை மக்களால் ஏற்கெனவே ஏற்பட்ட மொழிக் குழப்பத்தில், ஆரிய மொழிக்கு அதன் பெருவாய்ப்பிருந்தது. பெருந்திரளான வட இந்திய மக்கள் ஆரிய மொழியை ஏற்றுக்கொண்டு, அதைத் தங்கள் தேவைக்கேற்பச் சரிப்படுத்தும் நிலையில், அதைப் பெரிதும் மாற்றினார்கள் அதனால், அது வேதமொழியிலிருந்து இலக்கியச் சமற்கிருதமாகவும் அதே சமையத்திற் பழம் பிராகிருதங்களாகவும், அதன்பின் இற்றை மொழிகளாகிய புதிய இந்தாரிய மொழிகளாகவும் பெயர்ந்தது"

– பர். சட்டர்சி தலைமையுரை, (பக் 18, 19). இக் கருத்துக்களைக் காணின், அண்மையில் பேரா. நீலகண்ட (சாத்திரியார்) 'தமிழ் வரலாறும் பண்பாடும்' என்னும் நூலில், தமிழரைத் தாழ்த்திக் கூறியிருப்பது புதுமையாகத் தோன்றுது. ஏற்கெனவே 1952–ஆம் ஆண்டில் அவர் வெளியிட்ட 'நந்த மௌரியர் காலம்' (Age of the Nandas and Mauryos) என்னும் தொகுப்பு நூலில், பர். சட்டர்சி பர். இராகவனுடன் இணைந்தெழுதிய மொழியிலக்கியப் பகுதியில், இக் கருத்துக்களே கூறப்பட்டுள்ளன. 1955-இல் வெளிவந்த 'தென்னிந்திய வரலாறு (A History of South India) என்னும் (பேரா. நீலகண்ட சாத்திரியார் எழுதிய) நூலிலும், தமிழர் தாழ்த்தியே கூறப்பட்டுள்ளனர். ஆயினும் என்னைத் தவிர வேறொருவரும் எதிர்க்கவில்லை. மூவகைக் காப்பாருள் வந்த பின் காப்பாராகக்கூடத் தமிழர் இல்லை; வந்தபின் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றும் அளவினராகவே யுள்ளனர். அதுவும் விரல் விட்டெண்ணத்தக்க ஒரு சிலரே.

பர். சட்டர்சி தலைமையுரையில், தமிழுக்கு மிகக் கேடானதும் அவரையும் மிக இழிவு படுத்துவதுமான செய்தி எதுவெனின், ஸ்த்ரீ என்னும் வட சொல் தமிழில் 'தி' என்னும் பெண்பாலீறாகத் திரிந்தமைத்தது என்பதே.

பத்தாண்டிற்குமுன், இப் பொருள்பற்றிய கட்டுரை மதுரைக் கல்லூரி ஆண்டு மலரில் வெளிவந்ததாகச் சொல்லப்பட்டது.

நான் அதைச் 'செந்தமிழ்ச் செல்வி'யில் மறுத்தேன். அதற்கு எதிர் மறுப்பில்லை. ஆதலால், அதோடு அது நின்றுவிட்ட தென்று கருதினேன். ஆயின், பர். சட்டர்சி இந்தியச் சமற்கிருதக் குழுத்தலைவராய்த் தமிழ்நாடு வந்தபொழுது, அது மீண்டும் புத்துயிர் பெற்றெழுந்துவிட்டது.

தமிழிற் பெண்பால் காட்டும் ஈறு வடமொழி வருமுன் இல்லையாம். ஸ்த்ரீ என்னும் பெயர், வண்ணான், தட்டான் முதலிய பெயர்களோடு சேர்ந்து, வண்ணான் + ஸ்த்ரீ = வண்ணாத்தி, தட்டான் + ஸ்த்ரீ = தட்டாத்தி என்றானதாம். இதைத் தமிழ் பயிலும் கடை மாணவர்கூடக் கடிந்து சினப்பரே!

முருகன் ஆரியர் வருகைக்கு முற்பட்ட தூய தமிழ்த்தெய்வ மென்பது வெள்ளிடை மலையாய் விளங்கித் தோன்றவும், சுப்பிரமணியன் என்பதைத் தமிழர் முருகன் என்று மொழி பெயர்த்துக் கொண்டனரென்று பர். சட்டர்சி கூறியிருக்கின்றார். அதை ஒருவரும் எதிர்க்காததினாலேயே, அண்மையிற் பேரா. நீலகண்ட சாத்திரியார் முருகன் ஆரியத்தெய்வமென்று கூறமுனைந்திருக்கின்றார்.

ஸகஸ்ர என்பது ஆயிரம் என்றும், பிராமண என்பது பார்ப்பான் என்றும், கன்யகா என்பது கண்ணகி என்றும், ஸ்தூணா என்பது தூண் என்றும், லோக என்பது உலகம் என்றும், த்ரோணீ என்பது தோணி என்றும், ஸ்நேக என்பது நேயம் என்றும், திரிந்தனவென்றும்; விஷ்ணு, குமார, துர்கா என்பவற்றை, முறையே. மால் அல்லது மாயோன், முருகன் அல்லது சேயோன், கொற்றவை என்றும் திரிவர்க என்பதை முப்பால் என்றும், தர்ம, அர்த்த, காம, மோக்ஷ என்பவற்றை அறம் பொருள் இன்பம் வீடு என்றும், தமிழர் மொழி பெயர்த்துக் கொண்டனரென்றும், அவர் கிரேக்க நாட்டினின்று வந்தவ ரென்றும், கலவை மொழியாரும் கலவையினத்தாரும் கலவை நாகரிகருமாவர் என்றும்; கூறிய பின், தமிழ் என ஒரு மொழி உளதோ? தமிழன் என ஓர் இனவன் உளனோ? தமிழாசிரியரும் தமிழ் மாணவரும் தமிழன்பரும் கருதிக் காண்க.

பர். சட்டர்சியின் கட்டுரைப் படிகள் சில பெற்றுத் தமிழ்ப் பற்றுள்ள தமிழ்ப் புலவர் சிலரிடமும் தமிழன்பர் சிலரிடமும் காட்டினேன். அவருட் சிலர் வருந்தினர்; பலர் அதுவுமில்லை. மேற்கொண்டு சில படிகள் கேட்டபொழுது கிடைக்கவில்லை. அ. ம. ப க. க. பதிவாளரால் அது பரவுவது தடுக்கப்பட்ட தென்று தெரிந்தது. அதன்பின் நான் நேரிற் சென்று பதிவாளரிடம் கேட்டேன். அவர்கள், "வேண்டியவர் எனக்கு நேராக எழுதிப் பெற்றுக் கொள்ளட்டும்" என்று சொல்லிவிட்டார்கள்.

சிலமாதம் பொறுத்து, பர். சட்டர்சி அண்ணாமலைநகர்வந்து நான் தொகுக்கவிருந்த செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் போலிகையான, ஐம்பான் சொல் விளக்கச் சுவடியைப் பார்வையிட்டனர்.

எடுத்த அடியிலேயே, தமிழர் குமரிக் கண்டத்தினின்று வந்தவரென்னும் உண்மை வரலாற்றுக் கூற்றையும், அச்சன் என்பது அத்தன் என்னும் தென்சொல்லின் திரிபென்னும் சொல் வரலாற்றையும் அவர் ஒப்புக்கொள்ள மறுத்தனர். "நீ தன்னந் தனியாகப் போர் புரிகின்றாய்" (You are fighting a lonely fight) என்றார்.

புறநானூறு, கலித்தொகை, சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லார் உரை, இறையனார் அகப்பொருளுரை முதலியவற்றினின்று குமரி நாட்டுச் செய்திக்குச் சான்றுகாட்டி, பர். சாமிநதைர், பேரா. மு. இராகவையங்கார் முதலியோரும் முக்கழக வரலாற்றை ஒப்புக் கொண்டதாகவும் கூறினேன். ஆயினும், அவர் கருத்து மாறவில்லை. இதைப்பற்றி விரிவாக எழுதி அவருக்கனுப்ப வேண்டுமென்று மட்டும் சொன்னார்.

அத்தன் அத்தி என்பன முறையே தந்தையையும் தாயையும் குறிக்கும் தென் சொல்லென்றும்; அவை அச்சன் அச்சி என்று திரியுமென்றும்; தகரம் சகரமாகத் தமிழில் திரிவது இயல்பென்றும்; அப்பன் அம்மைஎன்பன கண்ணப்பன் கண்ணம்மை என்பவற்றில் வருவதுபோல், அத்தன் அத்தி; அச்சன் அச்சி, என்னும் தந்தை தாய் பெயரும் ஆண்பால் பெண்பாலீறாய் வருமென்றும்; வண்ணாத்தி தட்டாத்தி என்பவற்றில் அத்தி என்பதும், மருத்துவச்சி, வேட்டுவச்சி என்பவற்றில் அச்சிஎன்பதும், பெண்பாலீறென்றும்; கூறியபொழுது, இதுபோல் தகரம் சகரமாகத்திரியும் வேறொரு சொல் சொல் என்றார் பர். சட்டர்சி. நான், நத்து--நச்சு என்னும் திரிபைச் சென்னைப் ப. க. தமிழ் அகரமுதலியில் எடுத்துக் காட்டினேன். அவர் "ஒரு மரம் தோப்பாகாது" ("One swallow cannot make a summer") என்றார். நான் இன்னுமுளதென்று காட்டப் புகுமுன் "எனக்கு நேரமாயிற்று. எல்லாவற்றையும் பற்றி விரிவாக யெழுதி எனக்கு நேரே காளிக்கோட்டத்திற்கனுப்பு" என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார்.

அடுத்து, தெலுங்கிற்குத் திரு மகாதேவ(சாத்திரியா)ரும் (எம். ஏ.), கன்னடத்திற்குத் திரு. பதுமநாபனும் (எம். ஏ.) விரிவுரையாளராக அமர்த்தப் பெற்றனர்.

(அடுத்து வருவன: துறைமாற்றுப் படலம், நிலைமை தெரி படலம், நீக்கப் படலம் என்னும் மூன்றும் அதோடு இக் கட்டுரைத் தொடர் முடிவுறும்.)

வரலாறு

மக்கள் தலைவன் மிராபோ

[MIRABEAU]

பெ. இராசாராமன், எம். ஏ.

உலக வரலாற்றில் ஒளிமிக்க படலமாகவும், புதியதொரு குடியாட்சிக் காலத்தை உருவாக்கிய தலையாய நிகழ்ச்சியாகவும் விளங்குவது பிரஞ்சுப் புரட்சி. அந்நாட்டின் அரசியல் வானில் இருள் முகில் சூழ்ந்த நேரத்தில் இடியேறு (Thunderbolt) எனத் தோன்றிற்று இக் கிளர்ச்சி. பிரஞ்சு குமுகாயத்தில் காலத்தினால் ஏற்பட்ட கசடுகளைப் போக்கியும், தன்னுரிமை (Liberty) ஒப்புமை (Equality) உடன் பிறப்புப் பற்றுடைமை (Fraternity) ஆகிய அரும்பெருங் கொள்கைகளை மாந்த குலத்திற்கு அளித்தும் உய்வித்தப் புகழ் இப் புரட்சிக்கு உண்டு. குமுகாயத்தின் அடித்தளத்தில் மிதித்தமிழ்த்தப்பட்ட மக்கள், மாந்தர் தம் வரலாற்றிலேயே முதன் முதலில், சிறப்புச் சலுகைகளுக்கு உறைவிடமாய் விளங்கிய ஆட்சியை (Regime of Privilege) எதிர்த்துக் குரல் எழுப்பிய பெருமை பிரான்சு மக்களைச் சாரும். மக்கள் இயற்கையிலேயே கிளர்ச்சிகளில் ஈடுபடுவதில் ஆர்வமுள்ளவர்களா என்ன? இல்லை. இறந்த காலம் இருளடைந்துபோய், நிகழ் காலமும் கொடுமைமிக்கதாக விளங்கி, எதிர் காலத்தில் நம்பிக்கைக் கதிர்களையே காண வியலாவிட்டால், தங்களை ஆண்டு கொண்டிருக்கும் அமைப்பினை மக்கள் மாற்ற முற்படுவார்கள். அத்தகைய மாற்றத்தைத் தான் புரட்சி என்று நாம் சொல்கிறோம். முறைகேடான அரசியல் நடத்துபவர்களுக்கு எதிராக ஆர்த்தெழ மக்களுக்கு உரிமை உண்டு என்பதைச் செயல் முறைக்குக் கொண்டுவந்தவர்கள் பிரான்சு நாட்டு மக்கள். மக்களின் அடிப்படை உரிமைகளாகிய வாழ்க்கை (Life), தன்னுரிமை (Liberty), இன்பம் விழைதல் (Pursuit of happiness), இவை பறிபோனால் அவர்கள் அரசினை எதிர்த்துப் புரட்சி செய்யலாம், என்பதை அவர்கள் அறிந்திருந்தனர்.

"All men are created equal.........endowed by the Creator certain rights; that among these are life, liberty and the pursuit of happiness......that whenever any form of Government becomes destructive of these ends it is the right of the people to alter or abolish it." அறுவை மருத்துவன் தனது கத்தியை மிகவும் கவனத்துடன் கடைசி

நேரத்தில், வேறு எம்முறையும் பயனளிக்கா நிலையில் பயன்படுத்துதல்போல், மக்களும் புரட்சி என்ற ஆற்றல் வாய்ந்த கருவியைப் பயன்படுத்துதல் வேண்டும். அங்ஙனமே இரக்கமிலா ஆட்சி கடுகி ஒழியவும், அருள் நயத்த நல்வழியினர் ஆளவும் கிளர்ந்து எழுந்தனர் பாரீசு நகர மக்கள்.

கி. பி 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிரான்சு நாட்டினை ஆட்சி புரிந்த பதினாறாம் உலூயி (Louis XVI) 'நாடொறும் நாடிமுறை செய்யா மன்னவன்'. தன் பட்டத்தரசி, மேரி அன்டாயினே (Marie Antoinette)வின் காதற் கயிற்றில் ஆடும் பம்பரம்போல் ஆனான். மக்கள் மன்றம் என்ற ஒன்று இருந்தபொழுதிலும் மன்னன் அதைப் புறக்கணித்தான். "இடிப்பாரை இல்லாத ஏமரா மன்ன"னானான் உலூயி. மக்களின் உரிமைகள் பறிபோயின. ஆட்சித்துறை அலங்கோல நிலையை அடைந்தது. அரசனின் அரவணைப்பின்கீழ் செல்வாக்குப் பெற்றவர்கள் மக்களை மாக்களென நடத்தினர் எண்ணிறந்த கொடுமைகளுக்கு ஆட்பட்டனர் மக்கள். வரிச் சுமைகளின் கொடுமை மூன்றாம்நிலை மக்களை (Third Estate) வாட்டி வதைத்தது. புனிதப் போர்வையில் உலவிய சமய குரவர்கள் பச்சைக் குருதியை உறிஞ்சும் அட்டைகளாயினர். நாடு காக்கவேண்டிய காவலனோ களியாட்டத்திலும், விலைமகளிர் கூட்டத்திலும் நாட்களைக் கழித்தான். பேயாட்சியின் பிடியிலே சிக்கித் தவித்தனர் மக்கள்.

இந்நிலையில் நம்பிக்கை தளர்ந்த மக்களுக்கு நம்பிக்கையின் காவலனாய்த் தோன்றினான் மிராபோ. மேன்மைக் குடியிலே 1749 மார்ச்சு 9ஆம் நாள் மார்க்குவிச்(Marquis) என்பார்க்குப் பிறந்தவனென்னினும் உழைத்துழைத்து உருக் குலைந்துபோன மக்களின் நலனுக்காகத் தன்னை உட்படுத்திக் கொண்ட வாகை முதல்வன். இரக்கமற்ற கொடியவனுக்கு மகனாய்ப் பிறந்தாலும் அவனின் அன்புடை நெஞ்சமும் அருளொழுகு கண்ணும் மக்களை அவன்பால் ஈர்த்தன. தோலாத வெற்றியும் திடமான மனமுமுடைய மறவன். இயற்கையறிவும் (Instincts) நுண்மாண் நுழை புலனும் (Insight) வாய்க்கப்பெற்ற நல்லறிஞன். அவன் ஒரு தனிச் சிறப்புடையோன் (Eccentric) எனினும் கட்டுப்பாடாகச்செயலாற்றுபவன் புரட்சிக்கோர்த் தேர்ப்பாகன்! அவனோர் அஞ்சாத அரிமா! உரிமைக்குத் தந்தை. அந் நாட்டினைப் பாழ்படுத்தும் அருளிலா ஆட்சியைக் கவிழ்க்கும் போர் முரசு! 'பொருள் கருவி காலம் வினையிடனோடு ஐந்தும்' இருள் தீர எண்ணிச் செயலாற்றுகின்ற பெருஞ் செயற் பண்பாளன் (Statesman). அவன் ஒரு முறை தன் தந்தையாலேயே ஏமாற்றப்பட்டுச் சிறைக் கூடத்திற்கு அனுப்பப்பட்டவன் என்பதை அறியுங்கால் எத்தகை நெஞ்சுரம் பெற்றவனாக இருந்திருக்க வேண்டுமென்பது விளங்குகிறதன்றோ!

இளைஞனாக இருந்தபொழுது நாடுகள் பலவற்றைச் சுற்றிப், பெறற்கரிய பட்டறிவைப் பெற்றான். ஒரு முறை அவன் இங்கிலாந்து நாட்டிற்குச் சென்றிருந்த பொழுது, அங்குள்ள அமைப்புக்குட்பட்ட முடியரசையும் (Constitutional monarchy), இயங்கிவந்த பாராளுமன்ற ஆட்சி முறையையும் கண்டு அவற்றில் ஒரு வகை நாட்டத்தை ஏற்படுத்திக் கொண்டான். அன்றிலிருந்தே அத்தகையதோர் அமைப்பினைத் தனது நாட்டிலும் அமைக்கவேண்டும் என்றவேட்கை அவன்பால் உருவாயிற்று. அவன் 1789–ஆம் ஆண்டு பொதுப் பேரவை (Third Estate) யின் உறுப்பினனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். அவனின் சீரிய தன்னாண்மை (Personality) விரைவில் அவனை முன்னிலைக்குக் கொண்டு வந்தது. அன்றைய பிரான்சு நாட்டின் மக்களவை (States General) மூன்று பிரிவுகளைக் கொண்ட அமைப்பாக விருந்தது. அன்றிருந்த அரசியல் நெறிப்படி வகுப்பு நிலைப் பகராண்மை (Class representation) கொடுக்கபட்டிருந்தது. மேலும் ஒவ்வொரு பிரிவும் தனியாக அமர்ந்து நாட்டின் நடவடிக்கைகளைக் கவனித்தல் வேண்டும். குமுகாய நிகரமைக்குத் (Social equality) தன்னை ஈடுபடுத்திக் கொண்ட தலைவனாகையால், மிராபோ வகுப்பு நிலைப் பகராண்மை முறையை வன்மையாகக் கண்டிக்கத் தொடங்கினான். மக்களும் அவனுக்குப் பேராதரவு நல்கினர். நாட்டின் நாயகனான உலூயி, பழைய முறைமையைப் பின்பற்றி ஒவ்வொரு பிரிவு மக்களையும் தனியாக அமரும்படி பணித்திருந்தான். பொதுப் பேரவையின் உறுப்பினர்கள் அரண்மனைக்கு அருகிலிருந்த வரிப்பந்து விளையாடும் அரங்கத்தில் (Tennis Court) கூடி அரசனின் ஆணையை எதிர்த்து ஒற்றுமையுடன் உரிமைக் குரல் எழுப்பினர். மன்னன் மக்களின்வேண்டுதலுக்குச் செவிமடுக்கும்வரை தானும் பொதுப் பேரவை உறுப்பினர்களும், வரிப்பந்து அரங்கத்தை விட்டு அகல்வதில்லை என்று சூளுரை எடுத்துக்கொண்டான் மிராபோ. வேறு வழியின்றிச் செய்வதறியாது மன்னனும் மக்கள் தலைவனின் கோரிக்கையை ஏற்று, இதுகாறும் பின்பற்றப்பட்ட வகுப்பு நிலைப் பகராண்மையை ஒழித்து, பொதுப் பேரவையை நாடு முழுமைக்கும் ஏற்ற தேசியக் கூட்டவை ஆக்கினான் (National Assembly). இத்தகைய மாற்றம் மிராபோவின் அரிய தலைமையினாலும், மக்களின் ஒத்துழைப்பாலும் ஏற்பட்டது. பிரான்சு நாட்டின் வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய நிகழ்ச்சியாக இது மிளிர்கிறது.

மிராபோ ஒரு தணிவுக் கொள்கையன். ஆனால் தான் சார்ந்திருந்த சகோபின் (Jacobin) கட்சியோ வலிவுக்கொள்கையைக் கொண்டது. ஆங்கிலப் பாராளுமன்ற ஆட்சி முறையில் அசைக்க முடியாத நம்பிக்கைக் கொண்ட அவன் இறுதியில் தனது கட்சியை விட்டே விலகினான். பிரான்சு நாட்டின் தேசி

யக் கூட்டவை (National Assembly) இங்கிலாந்து நாட்டின் பொதுப் பேரவை (House of commons) போன்றும், பதினாறும் உலூயி, அப்பொழுது இங்கிலாந்து நாட்டினை ஆண்ட மூன்றாம் சியார்சு (George III) போல அமைப்புக்குட்பட்ட முடியரச னாகவும், முதலமைச்சனாக யிருந்த பிட் (Pitt)டைப் போன்றும் மிராபோ சிறப்பு மிக்க ஓர் அமைச்சனாகவும் விளங்குதல் வேண்டும் எனக் கனவு கண்டான். மக்களின் உரு நிழலாகத் திகழும் கூட்டவையும், மன்னனும் இணைந்து சென்றால் நாட்டில் செயற்கரிய செயல்களைச் செய்து பெரும் பொருள் குவித்து வளங்குன்றா வண்மை நாடாகச் செய்யமுடியும் என்பது அவன் எண்ணம்.

ஆனால் மக்கள் அவை அவன் கூறிய திட்டத்தை ஏற்க மறுத்தது. சகோபின்கள் (Jacobins) அவனைச் செய்நன்றி கொன்றவன் (Traitor) என இழித்துரைத்தனர் மிராபோ தனக்கு ஏற்பட்ட மீளாக் கடனைத் தீர்க்க மன்னனிடம் பெரும் பொருள்பெற்றதே அவன்பால் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை தளர்ந்ததற்குக் காரணம். இந்த உண்மையைச் சிறுபிள்ளைத் தனத்தால் (Childish display)தெரிவித்துவிட்டான். அன்றேல் தேசிய மன்றத்தை அவன் திறம்பட நடத்திச் சென்றிருக்கக் கூடும். மக்கள் அவனை நம்பக் கூடாதென்றே மன்னன் இத் தகைய சூழ்ச்சியினைச் செய்தான். தொடக்கத்தில் ஏற்பட்ட அத்துணைக் கிளர்ச்சிகளுக்கும் மிராபோதான் காரணமாக இருந் தான் என்பதை அரசனின் நினைவிலிருந்து அகற்றமுடியவில்லை. அவன்தான் பாராளுமன்ற ஆட்சியின் ஆணி வேர்; முடியாட்சி யின் தூண் என்பதை அன்றிருந்த சூழ்நிலையில் யாரும் உணர்ந் தாரில்லர். மன்னனுக்கும் மக்களுக்கும், மாமன்றத்தின் மூலமாக ஒரு தொடர்பினை உண்டாக்கி ஒருவர் மற்றொருவரைச் சார்ந் திருக்கவேண்டும் என்ற அவனின் முயற்சி தோற்றுவிட்டது. ஏமாற்றமடைந்த உள்ளத்தோடு அவன் சாவதற்குமுன் எதிர் காலம் எவ்வாறு இருக்கும் என்று முன்கூட்டியே சொல்கிறான்.

I carry in my heart the death dirge of the monarchy, the dead remains of it will now be the spoil of the factions. "முடியாட்சியின் இழவுப் பண்ணை என் நெஞ்சத்தில் ஏற்றிச் செல்லுகிறேன். அதன் உயிர் நீங்கிய உடல் உட் பகையை வளர்க்கும்." அத் தலைவன் பிரான்சு மக்களின் உள் ளத்தில் நிலைபெற்ற இடத்தைத் தனக்கென உருவாக்கிவிட்டு 1791-ஆம் ஆண்டு ஏப்ரல் 2-ஆம் நாள் தன் 42-ஆவது அக வையில் இந்த உலக வாழ்க்கையை நீத்தான். பிரான்சு நாடும் ஒரு வழிகாட்டியை இழந்தது.

— * —

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை வைத்து, 1967 ஆம் ஆண்டுத் தேர்தலில் பேராயக் கட்சியை விரட்டியடிப்போம்.

– திரு. அண்ணாதுரை

ஊதியமில்லாமல் ஆற்றோடு போகலாமா ...?

மேல்நாட்டினரின் புதிய ஆடை முறையைப் பின்பற்றி **மார்பகத்தை** மூடாத ஆடையை மலாசியாவில் பெண்டிர் அணிந்தால் மூன்றுமாதச் சிறை.

– செய்தி

எதற்கு அதை மூட வேண்டும்? நாகரிகம்(!) தெரியாதவர்களாக இருக்கின்றார்களே.. !

கருச் சிதைவைச் சட்டப்படி ஒப்புவதாயின் இந்தியக் குற்றச் சட்டத்தை மாற்றல் நேரும். மற்றும் இம்முறை, தவருக நடப்பவர்கட்கும் தப்பித்துக்கொள்ளப் பயன்படும்.

– மக்கள் தொகை ஆய்வு மருத்துவர் திரு. அகர்வாலா

தவருக நடப்பவர்களெல்லாரும் இப்பொழுது தப்பித்துக் கொள்ளாமலா இருக்கின்றனர் . . . ?

தமிழகத்தில் கல்லூரிப் பயிற்றுமொழியாகத் தமிழினைத் தேர்ந்தெடுக்காமல் விழிப்புணர்வோடு இருக்கும் தமிழக மாணவர்கட்கு திரு. தேசுமுக்கு பாராட்டு

– செய்தி

அடிமையின் குடுமி நன்ருக, நீளமாக இருக்கின்றது என்கின்ருர் தேசுமுக்கு!

திரைப்பட நடிக நடிகையர் வீட்டில் அரசினர் ஆய்ந்து கள்ளப்பணம் பல இலக்கங்களைக் கைப்பற்றினர்!

– செய்தி

இவை முற்றும் பேராயக் கட்சியினர் கொடுத்தவை தாமே! எப்படிக் கள்ளப் பணமாகும்...?

எனக்கு அடியோடு இந்தி தெரியாது.

– திரு. டி. டி. கே.

மேலோடு தெரியுமாக்கும்!

அடுத்த ஆண்டு அரிசி நெருக்கடி இராது. –திரு சுப்பிரமணியம் நம்பிக்கை

யாருக்கு?....
அமைச்சர் அவர்களுக்கா?

கையூட்டு ஒழிப்புக்கு வழிகாட்டல் வேண்டும். – மக்களவையில் பேச்சு.

அதற்கு 'என்ன' தருகின்றீர்கள் . . . ?

சேலம் உருக்காலை கட்டாயம் வரும். இதில் எனக்கு நம்பிக்கை உள்ளது!

– பக்தவத்சலம்.

அதாவது அதை ஏற்படுத்தும் வரையில் நான் பதவியை விட்டு விலக மாட்டேன்!

தாய்மொழி வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கப்படும் அதேபொழுதில், நாட்டில் நம் எல்லாரையும் இணைக்கும் ஓர் இணைப்பு மொழி ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு வேண்டும் என்பதை மக்கள் உணர வேண்டும்.

– திரு. சாக்ளா.

பிறரை அரசியல்தெரியாத காட்டுமிராண்டிகள் என்றும் தம்மை பெரிய அரசியல் வல்லுநர் என்றும் சாக்ளா கருதிவிட்டார் போலும்!

அரிசிக் கடை முன்பு மிகக் கூட்டம்! மிதிபட்ட சிறுமி இருவிரல்களை இழந்தாள்
– செய்தி

அவ்வளவுதானே! உயிர்க் கொன்றும் ஊறுபாடில்லையே!

இந்தித் திணிப்புடன் உணவு நெருக் கடியையும் தேர்தல் கொள்கையாக்கு வோம்.
– அண்ணுதுரை

கழுதை தேய்ந்து கட் டெறும்பாகி, அதுவுந் தேய்ந்து சிற்றெறும்பாகி, அதுவும் காற்றேடு பறந்ததாம்!

புதுவை அரசில் இந்தியை எதிர்ப்பவர் களை அடக்கி ஒடுக்குவோம் – புதுவை முதலமைச்சர் திரு. வீ. வேங்கடசுப்பு

ஏன்; இந்தி உங்கள் 'அப்பன்'மொழியோ?

இந்தியை ஆட்சிமொழி ஆக்குவதில் பொறுமை வேண்டும்.
- தலைமையமைச்சர் நேரு

தலை மொட்டையடிக்கப் படும்பொழுது தேவையானது அதுதான்!

மருத்துவ மனையில் ஒருவர் தற்கொலை செய்து கொண்டார்.
– செய்தி

அங்கு நடக்கின்ற கொடு மைகளைவிட அது மேலென்று அவர் கருதியிருக்கலாம்...!

இந்திய அரசினர் அலுவலர் அங்கு எங்கட்குக்கூறிய உறுதிமொழிகள் வேறு: இங்கு நாங்கள் நடத்தப்படும் முறை வேறு: ஏமாற்றப்பட்டோம். மீண்டும் பர்மா செல்லவே விழைகின்றேம்.
– பர்மாத் தமிழர்

'தாராளமாய்ப் போங்க ளேன்; துணைக்கு நாங்களும் வருகின்றேம்' என்கிறர் சென்னைத் தமிழர் ஒருவர்.

கல்லூரியில் பாடங்களைத் தமிழில் கற்பித்தால் மாணவர்களுக்குத் தீமையே விளையும்.
– பக்தவத்சலம்

அரிய மூளையின் அருமை யான கண்டுபிடிப்பு..!

அரிசிக்கடைகளில் அமைச்சர் மன்றுடி யார் புகுந்து விற்பனை, இருப்பு இவற்றை ஆய்ந்தார்.
– செய்தி

ஒருவேளை தம் நிலங்களில் விளைந்த அரிசியை விற்பனைக் குக் கொண்டுவருவதற்கான நேரம் பார்த்திருக்கலாம்!

உணவுத் தேவையில் ஒவ்வொரு மாநிலமும் தன்னிறைவு பெறச் செய்வது நடக்கக் கூடியதில்லை...!
– சி. சுப்பிரமணியம்

தட்டிக்கழிப்பதில் சுப்பிர மணியத்திற்கீடு சுப்பிரமணி யமே...!

அண்மையில் தன்னுரிமை (சுதந்திரம்) பெற்ற மாளவி நாட்டில் கலகம். ஆளும் கட்சிக் கட்டிடத்துக்குத் தீ! அமைச் சர்களைத் தெருத் தெருவாக ஓட ஓட விரட்டினர் மக்கள்...! அமைச்சரின் இயங்கி கொளுத்தப்பட்டது. – செய்தி

நம் அமைச்சர்கள் (!) கவ னிப்பார்களாக!

எதிர்க் கட்சிகளிடம் கொள்கை இல்லை. – அமைச்சர்: வேங்கடராமன்.

உங்களிடம் உள்ள கொள்கை என்னவோ?

எழுச்சி எட்டு!

புதுவை – முதுகண்ணன்.

அறந்தரும் நெஞ்சம் அழிந்த வடக்கர் அறிவுறவே
மறந்தரும் மானம் நிலைபெற இன்றே மடயரிந்தி
புறந்தரும் வண்ணம் புலியெனச் சீறிப் புறப்படுக;
திறந்தரும் நந்தம் இளைஞர் படைகள் திரண்டெழுந்தே!

படைக்கும் தமிழில் பரிந்திந்தி நஞ்சைப் பதமுடனே,
அடைக்கும் வடவர்க் கடிமைசெய் நெஞ்சரை ஆர்த்தெழுந்தே,
புடைக்கும் நரம்புகள் புன்மை யுறாமல் புகுமுகவாய்
உடைக்கும் படியெழுந் தூன்றுக, மானம் உணர்வுறவே!

காட்டிக் கொடுக்கும் கயவர்கள்; மானம் கடுகுமிலார்;
ஆட்டிப் படைக்க அமைந்திடும் பாவை அனையவரை
ஈட்டி எடுத்தே எறிந்துயிர் ஏந்துக; இன்றமிழ்த்தாய்
ஊட்டி வளர்த்த உணர்வுப்பால் அன்னார் உணர்ந்திடவே!

எண்தோய்த்த பைந்தமிழ் ஏய்ந்தசீர் தேய்க்க எழுவடக்கர்
விண்தோய்த்த மீப்புகழ் மெய்ம்மையும் வீழ்த்த விளைப்பரிந்தி;
கண்தேய்த்து வையகம் காண்தர இன்றே கவின்தமிழின்
பண்தோய்த்த ஆட்சி படைப்பாய்; தமிழா படைதிரண்டே!

சீரகத் தூறும் செழுந்தமிழ் மாண்பினைத் தேர்ந்தறியாக்
காரகத் தூறும் களைகளை, இந்திக் கழுகுகளை,
ஊரகத் தூன்றி உலவ விடாமல் ஒழித்திடுவீர்;
பாரகத் தூன்றிய பைந்தமிழ் காக்கும் படைதிரண்டே!

மீனும் உழுவையும் வில்லும் பொறித்தே மிடுக்கிலங்க,
வானும் தொடும்பேர் பனிசேர் வரையில் வயங்குதமிழ்
மானம் தொடுத்த மறத்தை விளக்க வரைந்தகொடி
ஈனும் பெருமை இழவா தெழுமின் இருநிலத்தே!

சோற்றுத் துருத்திகள் சூழும் கொடுமைத் துடுக்கடக்கக்
கூற்றும் நடுங்கும் கொலைவாள் உயர்த்திக் குறைதவிர்மின்!
போற்றும் தமிழ்த்தாய் பொலிந்திட ஆட்சிப் புகழ்விளங்க
ஆற்றும் கடமை அறிமின்; எழுமின்; அதிர்வுறவே!

மிஞ்சப்பார்ப் பாரிந்தி மேலென்பார்; நம்மை மிதித்திடுவார்!
நெஞ்சைப்பார் தொட்டே; நிறுப்பார்; அளப்பார்; நிறையுமிலார்;
நஞ்சைப்பார் கண்ணில்! நயப்பார்; நரியவர்; நாணுமிலார்;
கெஞ்சப்பார்க் காதே; தமிழா, கிளர்ந்தழி கீழ்களையே! *

இந்தி எதிர்ப்பு:

அன்னைத் தமிழின் இன்னல் களைய
ஆற்றல் கொடுக்க வா!—இந்தி
ஆட்டம் அடக்க வா!—நம்
முன்னைப் பெருமை இன்ன சிறக்க
மொய்ம்பு பெருக வா!—செயல்
முனைய விரைந்து வா!

எங்கள் கழகப் பொங்கு தமிழின்
ஏற்றம் பெருக்க வா!—இந்தி
ஏதம் அறுக்க வா!—துறை
எங்கும் பரவும் கங்குல் வெறியை
ஏருய்த் தடுக்க வா!—தமிழ்
என்றும் ஒலிக்க வா!

நல்லார் வெறுக்கும் பொல்லா அரவின்
நஞ்சை விலக்க வா!—உரிமை
நாட்டம் ஒளிர வா!—இந்தி
அல்லல் தகர்த்து மல்லல் செறிந்த
ஆட்சி நடத்த வா!—தமிழ்
ஆற்றல் பரப்ப வா!

சட்டப் பெயரால் கொட்டும் வெறியைச்
சாய்க்க நிமிர்ந்துவா!—அறச்
சாட்டை சுழற்றி வா!—இந்தித்
திட்ட மழியக் கொட்டி முரசம்
தீமை யொழிக்க வா!—இயற்கைத்
தீர்ப்பை வழங்க வா!

மாட்சி அழிக்கும் ஆட்சித் திமிரை
மாற்றக் கிளர்ந்து வா!—இந்தி
மாசைக் கழுவ வா!—தமிழ்க்
காட்சி எங்கும் நீட்சி விளங்கக்
காலப் பணிக்கு வா!—தமிழ்
காத்துக் களிக்க வா!

ஆவி நிகர்த்து மேவு தமிழில்
ஆட்சி நிறுத்த வா!-வாழ்(வு)
ஆக்கம் புரிய வா!-இந்தி
தாவுஞ் செயலைச் சாவு வரினும்
தாக்கித் தகர்க்க வா!-தமிழ்த்
தாயைப் புரக்கவா!

–காரை-இறையடியான்.

சேற்றுப் புழுக்களாய்ச் சூடு சொரணையற்று
வேற்று மொழிக்கடியில் வீழ்ந்தோரே!— சோற்றுக்குத்
தாழ்வுற்றே மானம் துறந்தீரோ? நீடுழி
வாழ்கவே உங்கள் வயிறு.

–அபிரை முகமதி. கலைமுகிலன்.

கொழுநனொடு தந்தை குவிசுற்றம் மாய்ந்தும்
''எழுவாய் மகனே நீ'' என்று — குழல்முடித்துக்
கூர்வேல் கொடுத்துக் கொடுங்களம்செல் என்றறைந்த
ஆர்வத்தீர் வாரீர் அடர்ந்து.

–கே. பூங்காவனம், திருக்கோவலூர்.

துயிரிடைப் பட்ட தமிழா — உன்றன்
தூய் மொழி காக்க எழுவாய்!
பயில்மொழி தமிழென ஆர்ப்பாய்!-உலகின்
பற்பல கலைகள் சேர்ப்பாய்!
அயல்மொழி இந்தியைக் கொண்டே-வடவர்
அழித்திட முனைவார் தமிழை!
மயலினை நீக்கி விரைவாய்!-உன்னை
மாநிலம் பழித்திடு முன்னே!

–தமிழடியான், நெற்குப்பை.

தென்னாட்டார் தமைநத்தி வடக்கு நாட்டார்
தியங்குமுடல் வளர்த்தார்கள் மானம் கெட்டே!
எந்நாட்டு வரலாறும் இதைத்தான் கூறும்!
எவன்சொல்வான் 'இல்லை'.என? துணிச்சல் உண்டா?
இந்நாட்டு மறத்தோளை மலைகள் காட்டும்!
எழில்மிகுந்த பனிமலையோ உணரா விட்டால்
தென்னாட்டார் பனிமலைதோய் மறஞ்சேர் தோள்கள்
தெரிவிக்கும் வடவருக்குப் புதிய பாடம்!

–கடலூர், இராமையன்.

தமிழுணர்வு:

நெட்டிமையார் பைந்தமிழ நெஞ்சை யீர்த்துக்
கட்டிளையார் கைவண்ணங் காட்டி வானை
முட்டியெழு முத்தமிழர் மாடம் இங்கே
குட்டியுடன் கழுதைமேய் கோலங் காண்மின்!

துடிக்கின்ற துடிப்பெல்லாந் தொன்ற மிழ்ச்சீர்
எடுக்கின்ற அப்பணிக்கே என்று வாழும்
மிடுக்கற்ற வாழ்வேற்ற மேலோர் வாழ்வை
அடுக்கடுக்காய் இடர்சேர்த்தே அழித்தல் நன்றோ?

இடுக்கணதன் ஈரமிலாப் படையெ டுப்பைத்
தடுப்பதற்கோர் வழிதருக தமிழ நாட்டீர்!
தடுப்பதற்கோர் வழிதரநாம் தவறி விட்டால்
நடுக்குற்று நானிலத்தில் அழிவோம் நாமே!

—மு. நருஅவன், செட்டிகுளம்.

மூத்த மொழியடா செந்தமிழ்!—பாக்கள்
யாத்த புலவரும் கரைகண்டுணராத (மூத்த)

கூத்திசை இயற்றமிழ்மூவகை—என
நாற்றிசை எங்கணும் நற்புக ழெய்திட்ட (மூத்த)

வேற்றுக் கலைவந் தழிப்பினும்—வட
வீணர்க ளிடர்செய் திழிப்பினும்—வாடைக்
காற்றுவந் தெழிலினைக் குலைப்பினும்—நறுங்
கற்கண்டுச் சுவையுட னிளமையும் மாறாத (மூத்த)

பன்மொழி வந்து கலப்பினும்—பசும்
பைந்தமிழ் சொல்லைச் சிதைப்பினும்—இரு
கண்ணொளி யற்றவர் செய்திடும்-இழி
காட்டுச்செயலுக்கும் கட்டுக் குலையாத (மூத்த)

புத்தமிழ் தூட்டும் இலக்கியம்—மொழி
பாகு படுத்தும் இலக்கணம்—உளப்
பித்த மகற்றுந் திருக்குறள்—இன்ன
பற்பல நூலினை இப்புவிப் களித்திட்ட (மூத்த)

—பெருவை-சதாசிவம்.

சுற்றம் நலவாழ்வு தொட்டணைத்த மக்கள்,மண்
முற்றும் துறந்திடினும் முன்சென்று-பெற்றுன்னை
ஊட்டி வளர்த்தே உயிர்காக்கும் உன்னருமை
நாட்டின் மொழிவாழ நாடு.

-புதுவை-மாணிக்கம், சிங்கை-2.

நாட்டின்கண் மக்கள் நலமாக வாழ்ந்திடவே
வீட்டு நலத்தை விலக்கிடுவோம்-நாட்டும்
உறவால் குமுகாயம் ஓங்கிடவே செய்து
திறமாக வாழ்வோம் தெரிந்து.

—அமிழ்தன், பொறையாறு.

தேனமிழ்தத் தமிழ்மறுப்பான்;
தெவிட்டா சுவைமறப்பான்;
போனகதை மிகவிரிப்பான் போக்கின்றி—நாம்
போகும்வழி தப்பென்பான் நாக்கின்றி!

தமிழ்பேச வெறுத்திடுவான்;
தமிழர்தமை ஒறுத்திடுவான்;
அமிழ்தென்றல் சிரித்திடுவான் நரிக்குள்ளன்—நல்
அன்பென்றல் இளித்திடுவான் வெறிக்கள்ளன்!

வாய்புதைத்துக் கைகட்டி
வாழ்பவரே தமிழரென்பான்;
நாய்போன்று நடுவீதி சுற்றிடுவான்—தன்
பேய்த்தனத்தால் அறிவினையே விற்றிடுவான்!

– பொ. பழனியப்பன், எல். எம். ஈ.

காதல்:

அரும்பாத மொட்டாய்நீ இருந்த போழ்தும்
அன்பாலே நாமிருவர் ஒன்றாய்க் கூடிக்
கரும்பாகக் குறும்பாகப் பேசிப் பேசிக்
களித்ததெலாம் அதற்குள்நீ மறந்தா விட்டாய்?
விரும்பாத காதலெனின் அன்றே யன்றோ
வீட்டார்கள் நமைவிலக்கி இருத்தல் வேண்டும்?
இரும்பாக நெஞ்சத்தை ஆக்கிக் கொண்டே
இருக்கின்றேன்; துயர்க்கடலில் தோய்கின் றேனே?

—உதையை-மு. வீரையன்.

பெண்ணுக் கெதற்குப் பெருங்கல்வி என்றுநீர்
எண்ணுவீர் அத்தான் இதுகேட்பீர்! - கண்ணுந்
தமிழணங்கைத் தாக்கத் தலைதூக்கும் இந்தி
உமிழ்மொழியை ஓட்டுதற்கன் றோ!

இருமனம் ஒன்றி யிருக்கின்ற நம்மைத்
திருமணந்தான் சேர்க்கும் அறிவேன் - பெருமனத்தீர்!
கற்று முடித்தவுடன் கைப்பிடிப்பீர் மற்றதன்பின்
பெற்றமொழி காப்போம் பிணைந்து

மணக்கோலங் கண்டு மறுநொடியே இந்திப்
பிணக்கோலங் கண்டு பெயர்ந்தே - இணக்கமெல்லாம்!
இந்த உறுதியை நீர் ஏற்றிடுவீர் அத்தான்நம்
செந்தமிழ் மேலாணை செய்து.

செந்தமிழை இந்திமொழி சீர்கெடுக்க வந்ததென்றால்
நந்தமிழர் என்ன நடைப்பிணமா? - முந்தைநிலை
காண்பதற்கே யானும் கலைபயில்கின் றேனத்தான்
மாண்பிதுவே மாணிழை யார்க்கு

ஒப்பரிய இந்த உயர்பணிக்குப் பெண்கல்வி
தப்பிலையே அத்தான் தவறாமல் - செப்பிடுவீர்!
கல்வி முடித்துக் கடிமணமும் கொள்வோம் பின்
செல்வோம் களத்திற்குச் சேர்ந்து.

— பொய்கை — கோ. சோ. செயபால்.

பொது :

கல்விச் சுனையைக் கலைவாழும் தேன்கூட்டை
இல்லத் தொளிரும் எழில்விளக்கை - நல்லார்வாழ்
நாடு மறக்குமா? நாவாரப் போற்றிக்கொண்
டாடுவராம் ஆசிரியர் நாள்!

ஆசிரியர் நாளா? அடடே வியப்பன்றோ!
பேசுவரோ சென்ற பெருமையெலாம்? — பேசும்
பொழுது விளைத்திலையில் போடுமோ சோறு
முழுநாளும் உண்ணு தவர்க்கு?

- மகிழ்நன், பொறையாறு.

இராசகோபால். பி. எசி.

தென்னகத்தில் சீமை இலுப்பை (சப்போட்டா) வளம்

தோற்றுவாய்: தென் மாகடலில் மறைந்தழிந்த குமரி மாநிலத்தின் அழியாத நிலப்பரப்பே இன்றைய தென்னாடு. அழிந்த குமரியின் செல்வக்குமரியே நாம் வாழும் தென்னகம். இச் செல்வக்குமரி பழவிளைவிற்கு ஒரு சின்ன உலகம். சின்ன உருவில் பல சிறப்புகளுக்குரிய அவ்வெழிற்கன்னி எண்ணற்ற கனிப் பயிர்களுக்கும், பழங்களின் வகைகளுக்கும் வளர்ப்புப் பண்ணையுமாவாள். அத்திருவிடத்தின் எல்லைக்குள் நிலவும் வெப்ப தட்பமும், பரந்து கிடக்கும் மண் வகைகளும், பல கனிகளுக்கும் வளரும் வாய்ப்பளித்து அவ் வளநாட்டைப் பழமுதிர் சோலையாக்கி விட்டன. அண்மைக் காலம்வரை தென்னாட்டின் பழவளம் அத்துறை போகிய ஆய்வாளர்களுக்கு மட்டுமே அழகு முகம் காட்டி வந்தது. அச் சிறப்பு பலரால் இப்பொழுது உணரப்பெற்று வருகின்றது. தென்னகத்தில் விளையும் நல்லபல பழங்களுள் சப்போட்டாவும் ஒன்றாகும்.

சுவையும், சாரமும் மிகுந்த இக்கனிப் பயிரின் பிறந்தகம் நடு அமெரிக்க நாடுகளில் ஒன்றான மெக்சிகோ என அறிவியல் ஆய்வாளர்கள் இயம்புகின்றனர். இலங்கை நாட்டிற்கு இச் சப்போட்டா 1802-ஆம் ஆண்டு கொண்டுவரப் பெற்று வளர்க்கப் பெற்றது. ஆனால் அம் முயற்சி வெற்றி பெறவில்லை. தென்னாட்டிற்குக் கொண்டுவரப் பெற்ற காலம் அறியப்பெறவில்லை. பயிரியல் முறைப்படி இப் பயிர் ஏக்ரசு சப்போட்டா (Achrus Zapotoh.) என அழைக்கப்படுகின்றது. சப்போட்டா போன்ற சில கனிகள் பல குடும்பத்தைச் சார்ந்தவையாயினும் 'சப்போட்டா' என்றே பெயரிடப்பெற்று அழைக்கப்படுகின்றன. வெள்ளைச் சப்போட்டா (ரூடேசியே குடும்பம்). கருஞ் சப்போட்டா (எபினேசியே குடும்பம்) அத்தோடு மஞ்சள் சப்போட்டா, பச்சை சப்போட்டா ஆகியவையும் உண்டு. பிற்பகுதியில் சொல்லப்பட்டவை சப்போட்டேசியே குடும்பத்தைச் சார்ந்தவை. பழுப்பு நிறமான கனிகளைக் கொண்ட ஏகரசு சப்போட்டா என்னும் தனிகமே (Species) சப்போட்டா என்ற பெயருக்கு உரியதாகும். இது தமிழில் **சீமை இலுப்பை** என்று அழைக்கப் பெறுகின்றது.

காணப்படும் பகுதிகள்:– 'சப்போட்டா' வெப்பப் பகுதிகளில் (Tropical regions) வளரும் பயிராகும். ஆயினும் மற்ற பகுதிகளிலும் இக் கனிப்பயிர் வளர்க்கப்படுகின்றது. இந்தியத்

துணைக்கண்டத்தில் பெரும்பாலும் சமவெளிப் பகுதிகளில் வளர்கின்றது. தென்னகத்தில் தமிழ்நாடு, ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் இப்பயிர் விளைகின்றது. எனினும் தென்னாட்டில் இப் பழப் பயிர் விளைவாகும் பரப்பு உறுதியாக அறியப்படவில்லை. ஆனால் ஏறத்தாழ 500 ஏகர்களுக்குமேல் இருக்கலாம் எனத் தெரிய வருகின்றது.

வெப்பதட்பம் (Climate): சப்போட்டா வெப்பப் பகுதிகளுக்குரிய பழப்பயிராகும். பல்வேறுபட்ட வெப்பதட்ப நிலைகளிலும், கடல் மட்டத்திலிருந்து 4000 அடி உயரம் வரை பல விடங்களிலும் பயிராகின்றது. ஆயினும் சப்போட்டா கடல் மட்டத்திலிருந்து 1500 அடி உயரம் வரை சிறப்பாக வளர்கின்றது. குளிர்ப் பகுதிகளில் சப்போட்டா நன்முறையில் வளர்வதில்லை. ஏனெனில் இது மிகுதியான குளிரையோ, பனிப் புயலையோ தாங்க இயலாத பயிராகும். தென்னாட்டின் பெரும் பகுதிகள் வெப்பப் பகுதிகளாகையால் (Tropical belt) இங்குச் சப்போட்டா வளரும் வாய்ப்பு மிகுதியாகும்.

மண் (Soil):- சப்போட்டா பழப் பயிர் மணல் கலந்த இருபொறை மண்ணில் (Sandy loam) சிறப்பாக வளரும் எனக் கருதப் படுகின்றது. நன்முறையில் பராமரிக்கப்படும் தோட்டங்களில் பல்வேறுபட்ட மண் அமைப்பிலும் நற்பலனை அளிக்கின்றது. பொதுவாக மற்ற பழப்பயிர்களுக்குத் தேவையான மண் அமைப்புப்போல் அதாவது தரை மட்டத்திலிருந்து, கடினப் பாறைகள் ஏதும் ஆறு அடி ஆழம் வரை இல்லாது ஒரே சீரான மண் அமைப்பு தேவையாகும். குறைந்த ஆழத்தில் பாறைகள் இருப்பின் வேர் வளர்ச்சியும் மரத்தின் வளர்ச்சியும் தடைப்படுகின்றன.

சப்போட்டா வகைகள் (Varities):- சப்போட்டா பயிரில் சில வகைகள் உள்ளன. கனிகள் அளவிலும், உருவிலும், சுவையிலும் வேறுபடுகின்றன.

1. உருண்டை வடிவமான கனிகளைக் கொண்டவை:- மரப் (Cricket) பந்துபோல் உருண்டையானதும், பெரிய அளவும் உள்ள கனிகளைத் தரக்கூடிய வகையாகும்.

2. முட்டை வடிவான கனிகளைக்கொண்டவை:- துவாரப்புடி (Dwarapudi), கல்கத்தா (Calcutta), வாவிவலசா (Vavivalasa), கிர்த பர்த்தி (Kirta barti), பாதாமி (Badami), பாலா (Pala) போன்ற வகைகள் முட்டை வடிவுள்ள கனிகளைத் தருகின்றன.

பயிர்ப் பெருக்கம் (Propagation):-

அ விதை வழிப்பெருக்கம் (Seed propagation):- பழங்களில் கிடைக்கும் விதைகளின் மூலமாக கன்றுகளை வளர்த்து, நட்டு மரமாக்கலாம், இம்முறையில் ஒருவகைக்குரிய தனிப் பண்புகள் (Varital Character) மாறுபட வாய்ப்புகள் உள்ளன. இயற்கையில் ஏற்படும் பிறபூந்துகள் சேர்க்கை (Cross pollination) இதற்குரிய காரணமாகும்.

ஆ. விதையிலா இனப்பெருக்கம். (Sexual propagation:- தோட்டக்கலையில் ஒட்டு (Grafting, குருத்தொட்டு (Budding), பதியம் (Layering) வெட்டுத் துண்டுகள் (Cuttings) இளம் தண்டுகள் (Salt wood Cuttings), முதிர் தண்டுகள் (Hard wood Cuttings) முதிரா இளம் தண்டுகள் (Semi Hard wood Cuttings) வேர்த் துண்டுகள் Root Cuttings) இலைத் துண்டுகள் (Leaf Cuttings) ஆகியவற்றின் வாயிலாகப் பயிர்ப் பெருக்கம் செய்யப்படுகின்றது. ஆனல் ஒவ்வொரு பயிருக்கும் குறிப்பிட்ட ஒருசில முறைகளே வெற்றியாக முடிகின்றன.

சப்போட்டா ஒட்டுமுறையில் பெருக்கப் பெறுகின்றது. 'பாலா' என்னும் காட்டுச் சப்போட்டாவை (Marilkara hekandra) வேர்மூலமாகப் (Root Stock) பயன்படுத்தி அதன்பால் சப்போட்ட ஒட்டப்படுகின்றது. பதியன் முறையிலும் சப்போட்டாவின் நடவுக்குரிய கன்றுகள் பெறப்படுகின்றன. தற்பொழுது உள்வளைவு (Inarching) ஒட்டுமுறை நடைமுறைக்கு வந்துள்ளது. இம்முறைக்கு சப்போட்டாக் கன்றும், பலாக் கன்றும் வேர் மூலங்களாகப் (Root Stock) பயன்படுத்தப் படுகின்றன. நடவுக்குரிய நல்ல கன்றுகள் அரசினர் பழப் பண்ணைகளிலும் தனியார் நாற்றங்கால்களிலும் விற்கப்படுகின்றன.

நடவு (Planting) :- இப்பயிரை சூன் திங்கள் முதல் சனவரி திங்கள் வரை உள்ள காலத்தில் நடலாம். சுமார் 30 முதல் 35 அடி இடைவெளியில் கன்றுகளை நடவேண்டும். மண் வளத்திற்குத் தகுந்தாற்போல் இந்த இடைவெளி வேறுபடும். நல்ல வளமற்ற மண்ணில் 20 அடி இடைவெளி தூரமே போதுமானதாகும்.

குழிகள் நான்கடி ஆழமும் நான்கடி அகலமும் உள்ளவையாகத் தோண்டப்பட வேண்டும். குழிகள் ஒரு மாதத்திற்கு முன்பேவெட்டப்பட்டு மழைக்காலம்வரை ஆறவிடல்வேண்டும் ஒரு குழிக்கு எட்டு இராத்தல் மேனி வெட்டப்பட்ட மண்ணுடன் தொழு எருவும் கலக்கச் செய்தல் வேண்டும். எலும்புத்

தூளைக் குழியின் அடிப்பாகத்தில் தூவ வேண்டும். எலும்புத் தூள் கிடைக்காவிடில் எலும்புகளையே போடலாம். எருவுடன் கலக்கப்பெற்ற மண்ணைக்கொண்டு குழிகளை நிரப்பல்வேண்டும். நிரப்பிய குழிகளில் நீர்பாய்ச்சி அவற்றில் உள்ள மண் அமுங்கும்படி செய்ய வேண்டும். பின்பு தொட்டிகளில் உள்ள கன்றுகளை சேதமின்றி வெளியில் எடுத்துக் குழியின் நடுவில் சிறிதளவு தோண்டி அவற்றை நடவேண்டும். நடப்பட்ட கன்று களைச் சுற்றி நன்ருக மண்ணை அமுக்கி, பாங்காக நீர்விட்டு வளர்க்க வேண்டும். இளம் செடிகள் கதிர் ஒளியாலும், வெப்பத் தாலும் கருகிவிடாமல் காக்கும் பொருட்டு, நிழல் ஏற்படுத்த வேண்டும். தழைகளைக் குழிகளில் நடுவதன் மூலமாகவோ, சிறு பந்தலிட்டோ நிழல் தரவேண்டும். இளங் கன்றுகளை இயற்கை யின் இன்னல் களிலிருந்தும், மற்ற அழிவுகளிலிருந்தும் எச்சரிக்கையுடன் காப்பது இன்றியமையாததாகும்.

நீர் பாய்ச்சல் (Irrigation) :- இத்துறையில் முறையான ஆய்வுகள் நடைபெருமையால் எவரும் பொதுவான பரிந்துரை ஏதும் தர இயலாது. மண்ணுக்கும், மண் வளத்திற்கும், வெப்ப தட்ப சூழ்நிலைகளுக்கும் தகுந்தவாறு பழக்கத்தையே அடிப் படையாகக் கொண்டு நீர்பாய்ச்சல் மேற்கொள்வது சிறப்பு. எனினும் மழையில்லாத வறண்ட காலங்களிலும் கன்றுகளின் இளம்பருவத்திலும் போதிய நீர் பாய்ச்சுதல் அளிப்பது நல மாகும்.

எரு விடுதல் (Manuring):- சப்போட்டாவிற்கு பசுந் தாள் எரு, ஆட்டு எரு, மீன் எரு (Fish manure) ஆகியவை அளிக்கப்படுகின்றன. சிற்சிலவிடங்களில் ஆட்டு எருவோடு எலும்புத்தூள், பிண்ணுக்குகள் முதலிய எருவகைகளும் பயன் படுத்தப்படுகின்றன. பெரும்பாலும் பழ மரங்களுக்கு உரமிடும் வழக்கம் கிடையாது. எனினும் ஒரு மரத்திற்கு ஆண்டொன் றுக்கு தொழு உரம் 150 இராத்தல், ஆமணக்குப் பிண்ணுக்கு 15 இராத்தல், எலும்புத்தூள் 5 இராத்தல் ஆகியவற்றை உர மாக அளிக்கலாம்.

பயிர்க் காப்பு (Plant protection)

பூச்சிகள் (Insects):- இலைமடக்குப் பூச்சி (Leafwebber) இது பசுமை நிறங்கொண்ட புழுவாகும். இப் புழு நுனிக்கிளை களில் உள்ள இலைகளைத் தாக்கி இலைகளில் உள்ள பச்சை யத்தை (Chlorophyll) நீக்கி விடுகின்றது. இதனுல் பூப்பு (Flowring) சீர்கெடுகின்றது. சில காலங்களில் மொட்டுகளையும் தொளைத்துப் பேரிழப்புகளை ஏற்படுத்துகின்றது

இதற்குத் தடுப்பு முறையாக அழிவுதரும் புழுக்களைச் சேக ரித்து அழித்துவிடுதல் வேண்டும். பி. எச். சி. (B. H. C.)

டீ. டீ. டி (D. D. T.) என்ற பூச்சிக் கொல்லியின் மூலம் இப் பூச்சியைக் கட்டுப்படுத்தலாம். சில இடங்களில் கம்பளிப் பூச்சிகள் தாக்குதலால் மரத்திற்கு அழிவுகள் ஏற்படுகின்றன. தீப்பந்தத்தைப் பயன்படுத்தி இப் பூச்சிகளைத் தடுக்கலாம். மீன் எண்ணெய் சோப்(Fish oil rosin soap)பினைத் தெளித்தும் அவற்றை அழிக்கலாம்.

நோய்கள் (Diseases) :-

இலைப்புள்ளி நோய் (Leafspot) இலைகளில் பழுப்பு நிற முள்ள வட்ட வடிவமான சிறியபுள்ளிகள் விழுதல் இந்நோயின் அறிகுறியாகும். இவை மிகுதியாகத் தோன்றினால் நாளடைவில் இலைகள் உதிர்ந்துவிடும். இந்த நோயைத் தடுக்க ஒரு விழுக் காடு 'போர்டோ'க் கலவையைத் தெளிக்கலாம்.

கரும்படை நோய் (Sooty mould) :- இலைகள், பழங்கள் முதலானவற்றில் கரும் பூச்சுக் காணப்படும். இலை களின் மேற்பாகம் இத்தகு பூச்சால் மூடப்படுவதால் கதிரொளி தடைப்படுகின்றது. ஆதலால் ஒளிச்சேர்க்கை (Photosynthesis) தடைப்படுகின்றது. இதனால் இந் நோய் தாக்கப்பட்ட மரங்கள் வளங்குன்றிக் காணப்படுகின்றன. இதனைத் தடுக்க, நோய்பரவக் காரணமாகஉள்ள செதிள் பூச்சிகளையும், அசுவினி களையும் அழிக்க வேண்டும். மீன் எண்ணெய் சோப்பையும் (Fish oil rosin soap), மாவுப் பசையையும் [starch] சேர்த்துத் தெளித்தால், கரைசல் காய்ந்ததும், சுருங்கிய பூசனப் படிவங்கள் பெயர்ந்து உதிர்ந்து விடுகின்றன.

விளைவு:- கன்று நட்ட நான்கு முதல் ஆறு ஆண்டுகளில் மரங்கள் பலன் தருகின்றன. பதியம் [Layering], ஒட்டு [Grafting] ஆகிய முறைகளில் வளர்க்கப்பட்ட மரங்கள் நான்கு ஆண்டுகளிலும், விதைவழி வளர்க்கப்பட்டவை ஆறு ஆண்டு களிலும் காய்க்கத் தொடங்கிய காலமுதல் ஏறத்தாழ 30 ஆண்டுக் காலம்வரை கனிகள் தருவதாகச் சொல்லப்படு கின்றது. 'சப்போட்டா' பழத்திற்குரிய காலம் பிப்ரவரி முதல் சூன் வரை, செப்டம்பர் முதல் அக்டோபர் வரை ஆக இரண்டு பருவங்கள். ஆண்டொன்றுக்கு, மரத்திற்கு ஏறத்தாழ 500 கனி கள் கிடைப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

சிறப்பும் பயனும்: மற்ற கனிகளைப்போல் இக்கனி பல வகை ஊட்டங்களையும், சாரவுணவுகளையும் கொண்டிலங்குகின் றது. சர்க்கரைப் பொருட்கள், புரதம் (Protein), மாலிக் அமிலம் (Malic Acid) போன்ற இயைபுப் (Chemical substances) பொருட்கள் இருப்பதாகப் பழத்தின் ஆய்வுக்கூறுபாடு(Analysis)

அறிவிக்கின்றது. இவற்றோடு சாம்புரம் (Potassium), சுண்ணம் (Calcium), மக்னீசியம் (Maganesium), எரியம் (Phosphorus), கந்தகம் (Sulphur), குளோரைடு (Chloride) ஆகிய தனிமங்கள் (Minerals) உள்ளன. இவை உடல் வளர்ச்சிக்கும், நலத்திற்கும் ஊட்டமளிக்க வல்லவை.

இறுதிவாய்:— குறைந்த செலவில் விளையும் இக் கனியின் சுவை உண்பார்க்கு மட்டுமே விளங்கும். உண்ட பின்பு எண்ணும் பொழுதெல்லாம் இனிக்கும். பழவளம் என்னும் செல்வ வளம் செழிக்கும் செல்வத் திருவிடத்தில் மற்ற பழங்களைப்போல் சப்போட்டாவையும் வேளாண்மை செய்து பழ விளைவை மிகுதியாக்கல் வேண்டும். அதனுல் நாட்டு மக்களின் உடல்வளம் பெருகும். நாட்டின் செல்வ வளம் செழிக்கும். *

தென்மொழி கடலூர் - 2

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய விதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு.	கொழும்பு.	வெளிநாடு.
தனி இதழ்	50 காசு	60 காசு	75 காசு
ஆண்டுக் கட்டணம்.	6 உருபா.	7-25 உருபா.	9 உருபா

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்.

அட்டை நான்காம் பக்கம்.	(இரு வண்ணம்)	100 உருபா.
,, ,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா.
உள்ளே முழுப் பக்கம்.		50 உருபா.
,, அரைப் பக்கம்.		25 உருபா.

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

பாட்டெழுதும் அன்பர்கள் கவனிக்க.

1. பாடல்கள் தனித்தமிழிலேயே இருத்தல் வேண்டும்.
2. அன்பர்கள் ஒரே வகைத் தலைப்புகளில் எழுதாமல் இயற்கை, வரலாறு, அறிவியல், குமுகாயச் சீர்திருத்தம்பற்றிய தலைப்புகளிலும் எழுத வேண்டுகின்றோம்.
3. பாடல்கள் தொடர்பாக மடல் எழுத இயலாது.
4. விடுத்த மூன்று திங்கட்குள் பாடல்கள் வெளிவரவில்லையாயின் அவை தள்ளப்பட்டன என்று கொள்க.

கொலைப்படை வேண்டும்...!

பாவேந்தர் பாரதிதாசன்

(அவர் நினைவாக)

—○—

பீரிட் டடிக்கும் உடற்குருதி கண்டால்
சோரா திருந்திடப் பழகு—வரும்
போர்மறவ னுக்கிதே அழகு!

[பீரிட்டடிக்கும் உடற் குருதி]

நேரிட்ட போரிலே உன்விழுப் புண்ணில்,
நின்பகை நடுமார்பில் நீசெய்த புண்ணில்

[பீரிட்டடிக்கும் உடற் குருதி]

மீன் உண்ணத் தான்வேண்டும் தேடு!—நீ
மிக உண்ணத் தான்வேண்டும் ஆடு!
நான்உண்ட துண்டு புலிக்கறியி னோடு
நல்ல கர டிக்கறியை! உயர்வென்று பாடு!

[பீரிட்டடிக்கும் உடற் குருதி]

ஊன்வாங்க வேண்டா; உயிரோடு வாங்கி
உடம்பு துடித்திடக் கத்தியைத் தாங்கித்
தேன்வாங்கக் கூடழிப் பான்போல ஓங்கித்
திறம்செய்க; உயிரினிற் கண்ணோட்டம் நீங்கி

[பீரிட்டடிக்கும் உடற் குருதி]

வடபாங்கில் முன்னாளில் தமிழரை வென்றார்
வந்திட்ட ஆரியர் உடும்பையும் தின்றார்!
இடம்பெற்ற பின்சைவம் மிகநல்ல தென்றார்;
இன்று தேவைப்படல் கொலைப்படை அன்றோ?

[பீரிட்டடிக்கும் உடற் குருதி]

எண்ணாயிரம் தமிழ் மக்களைக் கழுவால்
இழித்த குருதியைத் தேன்என்றான் விழியால்!
பண்ணைப் பழகடா பச்சைப் படுகொலை!
பைந்தமி ழர்க்கெலாம் உயிரடா விடுதலை!

[பீரிட்டடிக்கும் உடற் குருதி]

வை. சீனிவாசன்,
இளங்கலை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

அணுவின் அமைப்பு

மாருத விளங்கியல் பண்புகளும் (Physical properties), மாருத வேதியல் பண்புகளும் (Chemical properties), நிலைத்த அணுநிறையும் (Atomic Weight), நிலைத்த அணுவெண்ணும் (Atomic number) பெற்ற ஒரு பருப்பொருளே தனிமம் (Element) எனப்படும். தனிமங்கள் திண்மம் (Solid), நீர்மம் [Liquid], வளிமம் [gas] என்னும் மூவகை வடிவிலும் காணப்படும். பண்டைக்காலத்தில் தனிமங்கள் ஐந்தே என்றும், அவை தீ, நீர், நிலம், வான், வெளி ஆகியவை என்றும் நம்பினர். அறிவியல் விரிவால், இக்கால் தொன்னூற்றிரண்டிற்கும் மேற்பட்ட தனிமங்களைக் கண்டுள்ளனர். எனினும் இவை அவ்வைந்தனுள் அடங்குமென்பது வெள்ளிடை மலை.

தனிமங்கள் எவற்ருல் ஆனவை யென்று ஆராய முற்பட்ட மாந்தர் அவை சிறு துகள்களால் ஆனவை என்று பண்டைக் காலத்தில் நம்பினர். எல்லாப் பொருள்களும் அடிப்படையில் அணுக்களாலானவை என்று தெமாக்கிரித்தசு போன்ருேர் கூறினர். தால்தன் [Dalton] என்பார் ஒரு பொருளை [Matter] மிகவுஞ் சிதைத்துப் பிரித்துக்கொண்டே சென்ருல், பிரிக்க முடியாத சிறு துகளாகக் கண்ணுக்குப் புலனுகாவண்ணம் உள்ள இறுதிநிலைத் தும்பே அணு [Atom] என்றும், அணு நிறையுடையது என்றும், அதைப் பிரித்தலுஞ் சிதைத்தலும் இயலா என்றும், அதனினுஞ் சிறிய துகளும் இல்லை யென்றும், எல்லா வகைத் தனிமங்களும் அணுக்களால் ஆனவை யென்றும், அணுக்கள் கலவையில் [Compound] பங்கு கொள்கின்றன என்றும் தம் அணுக்கொள்கையை வெளியிட்டார்

பத்தொன்பதாம் நூற்ருண்டில், இராண்டுகன் [Rontgen] என்பார் குறைவழுத்தமுடைய வளியொன்றைக் குழலொன்றிற் செலுத்தி, மின்னத்தைப் [Electricity] பாய்ச்சுங்கால், எதிர் முனைக் கோடுகள் [Cathode Rays] தோன்றுவதைக் கண்டார். இவற்றின் தன்மை அறியப்படாததால் புதிர்க்கதிர் [X-rays] எனப் பெயரிட்டனர். காந்த வயலின் [Magnetic Field] தன்மையால் இவை எதிர்மின்னம் [Negative electricity] பொதிந்த துகள்கள் என்று கண்டு இசுடோனி என்பார் எதிர்மின்னி [Electron] எனப் பெயரிட்டனர். எதிர்மின்னியின் நிறை $0 \cdot 9107 \times 10^{7}$ கிராம். எல்லா வகை அணுக்களும் மின் பொதுமையைப் [Electrical Neutrality] பெற்றிருப்பதனுலும்

அணுக்களில் எதிர்மின்னிகள் இருப்பதாலும், இவற்றை ஈடு செய்யும் அளவிற்கு ஒத்த மின்னேற்றமுள்ள [Positive Electricity] எதிர்மின்னிகள் [Protons] இருப்பதைக் கண்டனர். மேலும் மின்னேற்பு இல்லாத [Chargeless] துகளான பொது மின்னியையும் [Neutron] கண்டனர்.

	துகள்கள் [Particles]	நிறை [Weight]	மின்னேற்றம் [Electric charge]
1)	எதிர்மின்னி	நீரக அணுநிறையின் $\frac{1}{1836}$ பாகம்.	ஓரலகு நேர்மின்னம்
2)	நேர்மின்னி	ஓரலகு; நீரக அணு நிறைக்குச் சமம்.	ஓரலகு நேர்மின்னம்
3)	பொதுமின்னி	ஓரலகு; நேர்மின்னிக்குச் சமம்.	இல்லை.

எதிர்மின்னிகளின் அமைப்பே [Electronic Configuration] தனிமங்களின் விளங்கியல், வேதியல் பண்புகளுக்குத் தலையாய கரணியமாகும். மோசிலி என்பார் பல வேறு தனிமங்கள் தரும் புதிர்க்கதிர் நிறமாலையை [Spectrum] விரிவாய் ஆய்ந்து அணுவெண்ணின் [Atomic Number] சிறப்பை எடுத்தோதினர். அறிதோறும் அறியாமையைக் கண்ட அறிவியற் புலவர்கள் மேன்மேலும் ஆர்வங்காட்டி ஆராயத் தொடங்கினர். எல்லாருஞ் சார்புநிலை உண்மைகளை அல்லது உண்மைப் போலிகளையே எடுத்துக்கூறுகின்றனர். உருதர்போர்டு [Ruther Ford] என்பார் 'அ'-கதிர் [Alpharays] ஆராய்ச்சியின் பயனுய்த்தம் அணுக்கொள்கையைப் பின்வருமாறு எடுத்துரைத்தார்.

1. அணுவின் பெரும்பாகம் வெற்றிடம்.
2. அணுவின் நடுவில், அணுவின் நிறை பொதிந்த நேர்மின் சுமையுள்ள [நேர்மின்னிகள்] உட்கரு [Nucleus] அமைந்துளது. அதைச் சுற்றிலும் வெளியே எதிர்மின்னிகள் தத்தம் அளவில் மாறு உந்தத்துடன் [Momentum] இயங்கிக் கொண்டுள்ளன.
3. நேர் மின்னிகளும் எதிர் மின்னிகளும் எண்ணிக்கையாலும் மின்னேற்றத்தாலும் நிகரானவை.
4. உட்கருவின் அகமுக ஆற்றல் [Attractive force] எதிர் மின்னிகளின் புறமுக ஆற்றலால் [Centrifugal force] ஈடு செய்யப் படுகின்றது.

எதிர்மின்னியும் எதிர்மின்னியும் ஒன்றையொன்று விலக்கும் தன்மையன. அவ்வாறே நேர்மின்னியும் நேர்மின்னியும் ஒன்றையொன்று விலக்கும் தன்மையன. எதிர்மின்னியும் நேர் மின்னியும் ஒன்றையொன்று ஈர்க்கும் தன்மையன. ஆகலான் உட்கருவிற்கும் எதிர்மின்னிகளுக்கும் இடையில் அகமுக ஆற்றல் தோன்றுகிறது. எதிர்மின்னிகள் மிக மிகக் குறைந்த நிறையைப் பெற்றிருப்பதால் அவை இயங்கும். இயங்கி உட் கருவில் சென்று விழாமற்றடுக்கப் புறமுக ஆற்றல் தோன்று கிறது.

உருதுர் போர்டின் மாணுக்கர் நீலுசுபோர் [Neils Bohr] தமது அணுக்கொள்கையை, மின்காந்த நிறமாலையை [Electro magnetic Spectrum] விளக்கியும், பகுதிக் கதிர்ப்புக்கொள்கை யின் [Quantum theory of Radiation] துணைக் கொண்டும் வெளியிட்டார். அணுநிற மாலையையும் [Atomic spectrum], எதிர் மின்னிகளின் அமைப்பு பற்றியும் நன்கு விளக்கியது இவர் கொள்கை. உட்கருவிற்கு வெளியே, குறிப்பிட்ட பாதைகளில் எதிர்மின்னிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்றும், அப் பாதைகள் முற்பகுதிப் பாதைகள் [Principal quantum shells] என்றும், அப் பாதைகளை முற்பகுதி எண்ணல் [Principal quantum number] குறிக்கலாமென்றும் கூறினர் உட்கரு விற்கு அடுத்துள்ள பாதையை "ஒன்று" என்றும், இரண்டாம் பாதையை "இரண்டு" என்றுங் குறித்தார். அப் பாதைகளின் எதிர்மின்னிகள் கொள்திறனை [Capacity of holding Electrons] 2 எ² என்ற சுருக்கத்தால் [Formula] குறித்தார். அங்கே 'எ' [எண்] என்பது 'முற்பகுதி எண்'ணைக் குறிக்கும். முதலாம் பாதை இரண்டு எதிர்மின்னிகளையும், இரண்டாம் பாதை எட்டு எதிர் மின்னிகளையும், மூன்றும் பாதை பதினெட்டு எதிர்மின்னி களையும், நான்காம் பாதை முப்பத்திரண்டு எதிர்மின்னிகளையும் கொள்ளும்.

அணு பரிதி மண்டிலத்தை ஒத்துளது. உட்கரு பரிதி போலும், எதிர் மின்னிகள் கோள்கள் போலும் அமைந்துள ஒரெதிர்மின்னி, மிகையான ஆற்றல் அளிக்குங்கால், ஆற்றலை யேற்றுத் தன்னிடத்திலிருந்து [Ground state], அடுத்த பாதைக்குத் [Excited state] தாண்டுகிறது. அவ்வாற்றல் அளிக்கப்பட்டுக் கொண்டே இருந்தால், அப் புது பாதையில் தங்கி, ஆற்றல் நின்றவுடன் தன்னிலைக்குத் தாண்டுகிறது. இவ் வாறு தன்னிலைக்குத் தாண்டுங்கால், எதிர் மின்னிகள் ஏற்ற ஆற்றல் கதிர்வீச்சாய் [Radiation] மாறி வெளியேற்றப் படு கிறது. இவ்வாறு வெளியேறும் ஆற்றல் பகுக்கப்பட்டு [Quantisation of Energy] கதிர் வீச்சாகிறது. இந் நிகழ்ச்சிக்கு எதிர் மின்னிகளின் இடப் பெயர்ச்சி [Electronic transition]

என்று பெயர். இன்ன நிகழ்ச்சிகள் ஒவ்வொரு தனிமமும் காட்டு வதால் அணுநிற மாலையைக் கண்டறிய முடிகின்றது. இவ்வணு நிரமாலைகள் மின்காந்த நிற மாலையில் கோடுகளாகக் [Lines] குறிக்கப்பெறும்.

சாமர்பெலுடு [Somerfeld] என்னும் வேறோர் அறிவியற் புலவர் எதிர் மின்னிகளின் சிற்றிடப் பெயர்ச்சியைக் [Small electronic transition] கண்டறிந்தார். ஆகலான் 'முற்பகுதிப் பாதை'களும் தம்மகத்தே சிறிய பாதைகளைப் பெற்றுளவென்றும் அவை பிற்பகுதிப் பாதைகள் [Subsidiary quantum shells] என்றும், 'பிற்பகுதி எண்'களைக் [Subsidiary quantum number] கொண்டவையென்றும், அப்பாதைகளின் எதிர் மின்னிகள் கொள்திறனை 0-த்திலிருந்து எ-1 என்றும் குறித்தார். அங்கே 'எ' [எண்] முற்பகுதி எண்ணைக் குறிக்கும். நேர்மின்னிகளும், பொதுமின்னிகளுஞ் சேர்ந்து அணுக்கருவை அமைக்கின்றன. அணுவின் முழு நிறை கருவில் [nucleus] செறிந்துளது. ஆற்றலும் அங்குத்தான் புதைந்துளது. அணுவைச் சிதைத்தலும் இயலும். அங்ஙனஞ் சிதைத்தால் எழும் ஆற்றலை, ஐனுசுடீன் [Einstein] என்பார் ஆ = நி × ஒ^2 [$E = mc^2$] என்ற சுருக்கத்தால் குறித்தார். 'ஆ' என்பது ஆற்றலையும் [Energy] 'நி' என்பது நிறையையும் [mass] 'ஒ' என்பது ஒளியின் ஒரு நொடி விரைவையும்(Velocity of light per second)குறிக்கும். இவ்வாற்றல் ஆக்கத் துறைக்கும். அணுக் குண்டிற்கும், நீரகக் குண்டிற்கும் பயன்படும். அணுவுலையில் [Atomic reactor] அணுவின் ஆற்றலைக் கட்டுப்படுத்திப் பயன்படுத்துகின்றனர். இவ்வாறமைந்துள்ள அணுவின் அமைப்பு அனைவர்க்கும் வியப்பை உண்டுபண்ணுகிறது. அறிதோறும் அறிதோறும் புலப்படுவது அறியாமையே! ஆற்றலே பொருள் என்றும் பொருளே ஆற்றல் என்றும் இன்று விளக்குகின்றனர்! ※

கட்டுரையாளர்கள் கவனிக்க.

1. தனித்தமிழில், உயர்ந்த குறிக்கோள் கொண்டு தெளிவாக எழுதப் பெற்ற கட்டுரைகளே வெளியீட்டுக்கு எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன.

2. கட்டுரை எவரால் எழுதப்பட்டது என்பதை விட, கட்டுரை என்ன கருத்துப் பற்றி எழுதப்பெற்றது என்பதையே 'தென்மொழி' நோக்குகின்றது.

3. தமிழுக்குப் புதிதான துறைகளைப் பற்றியும், தனித்தமிழில் எழுத முடியாது என்ற கருத்தினை முறியடிக்குமாறும் எழுதப் பெறும் கட்டுரைகள் முதலிடம் பெறுகின்றன. — ஆசிரியர்.

பேசும் ஓவியங்கள் (பாடல்கள்)

எழுதியவர் : த. கோவேந்தன்

கிடைக்குமிடம் : ''முன்னேற்றப் பதிப்பாளர்கள்''
5. புது அங்காடித் தெரு,
காரைக்குடி. இராமநாதபுரம் மாவட்டம்.

விலை : உருபா. 1-00

இக்காலப் பாடல் நூல்களைப் பற்றிப் பலமுறை கூறப் பெற்றுள்ளது. புதிதாகக் கூறுதற்கு இப்பாடல்களில் எதுவுமில்லை. பாடல் எழுத வேண்டுமே என்பதற்காக, எழுச்சியற்ற வேளைகளிலும் தமக்குரிய அல்லாத உணர்வுகளை வைத்துப் பொய்மையாக எழுதப்பட்டவையாகத் தெரியவில்லை இப்பாடல்கள். ஆனால் அவ்வுணர்வுகள் உள்ளத்தோடு முடங்கி விடுவனவாயின் எப்படியும் இருக்கலாம். பாடலாக உருவெடுத்து, இலக்கியமாகவும் நிலைக்க வேண்டுமெனின், ஒழுங்குபடுத்தப் பெற்று வெளியிடப் பெறலே முறையாகும். அவ்வொழுங்கினை இப்பாடல்களிற் காண முடியவில்லை. பாடல்கள் சிறவாமற் போனமைக்கு இதுவே காரணம். புலவனுக்குரிய கருவி சொற்கள். அவை உள்ளத் துணர்வை வெளியிடற்கேற்ற திட்பமும் நுட்பமும் செறிந்து கூரியனவாக இருத்தல் வேண்டுமேயல்லாமல், உணர்வைத் தெளிவுபடுத்தாமல் மறைக்கும் மழுங்கல் தன்மை வாய்ந்தனவாக இருத்தல் கூடாது.

''மூளுமனக் கனவிரண்டும்
மொழியில் ஆடிப்பாடி – நமில்
முத்துமுத்தாய் காதல் அலை
முழங்கியதே கோடி..''

'மொழி மிழற்றி அயரும் உலா
முட்டுமனத் தின்பம்'

'பொழி ஒட்டத்தின்பினர் காதலின் மன
உயிர் உருக்கிய வண்ணம்'

பொன்னில் உறையும் மின்னொளி போல்
புகழ்நிறைந்தது — மறைப்
புதிர் விரைந்தது
பேசாதகன்றனள் பள்ளி முகம் —

இவற்றுக் கெல்லாம் என்ன பொருள்? இச் சொற்கள் எவ் வகையிலாவது ஆசிரியரின் உணர்வையோ கருத்தையோ வெளிப்படுத்துகின்றனவா?

''கலை மானுய்ப்பறப்ப தென்னவோ?''
—கலைமான் பறக்குமா?

''வனப்பும் பயிர்ப்பும் இயங்கிடுநின்
வன்னக்கலையின் இடை தோன்றும்''

வனப்பும் பயிர்ப்பும் இயங்கிடுமா? பயிர்ப்பு, பருப்பொருளா? வன்னக்கலை என்ருல் என்ன? ''கன்னிப் பெயல் இசை; தென்றல் காற்றின் தேன், ''நிறச் செழி மணம்'' 'தேங்கு ஓவியம்' இவற்றுக்கெல்லாம் பொருள் தெரியவில்லை. மிகுதியான வண்ணத்தைக் குழைத்துப் பூசினுல் வரைய வந்த உருவம் தெரியாது; அஃது ஓவியமும் ஆகாது. 'செஞ்சொல் இசை மழைத் தேனலையில்', ''வண்ணப் பாடல் சிற்பம்'' ''பேசிடும் பொற்சிலை கற்பனைக் காவியம் பின்னி வளர்ந்திடும் ஓவியமாய்'' 'உணர்ச்சிப் புயல்வடிவாய் இதழ் தென்றல் கமழ்முத்தம்' 'முத்தமிடும் பண்மணம்' 'நல்லன்புத்தேன் — அருவிப்பண் பொங்கி வழியும் புதையற்கா' என்றெல்லாம் சொற்களைக் கூட்டிக்குழப்பி வாரி இறைத்து விட்டிருக்கின்ருர்...... அனைத்துமாகச் சேர்ந்து பாட்டுணர்வை அமுக்கிப் பிடித்து மூச்சுத் திணற வைத்துக் கொலையே புரிந்துவிடுகின்றன. காவியம், ஓவியம், கலை, சிற்பம், கனவு, இவையெல்லாம் உரிய பொருளைக் குறிக்க வராமல் நூல் முழுவதும் அள்ளித் தெளிக்கப்பட்டுள்ளன. எந்த உணர்வையும் எழுப்பாமல் வெற்றென நிற்கின்றன. 'நீரருவி', 'புனல்வெளம்', 'காதலன்பு', 'நட்பின் உறவு' 'மகிழ்வின் இன்பம்', 'மகிழ்ந் தினித்தல்', 'ஊற்றலைகள்' இவை போன்ற சொற்ருெடர்கள் வெற்ருரவாரமாகநின்று, சுவைக் குறைவுக்குக் காரணமாகின்றன. ஒரே பிதற்றல்!

'கற்கண்டு' என்ற சொல்லைக் 'கல்கண்டு'என்று பிழையாக எழுதுவதைப் பொருமல், மறைவாக எள்ளிக் கடியும் ஆசிரியர், தம்நூல் முழுவதும் இத்தகு பிழையான ஆட்சிகளையும், தமிழில் இடையில் வந்து புணர்ந்த வட சொற்களையும் எவ்வகையில் பொருத்தமானவை என்று கருதுகின்ருரோ தெரியவில்லை. இவர் கையாளும் வட சொற்களோ மிகப் பழகிக் கலந்தவை என்று சொல்லத் தக்கவைகூட அல்ல. இதோ: அனுபவம், ஆசை,

இதயம், கரம், கவிதை, காவியம், கானலயம், கூந்தல், கோபம் சிந்தனை, சிலை, சீவன், சீவியம், சோகம், ஞானி, நதி, நயனம், பாசம், பாவம், பானு, போகம், மந்த மாருதம், மாருதம், மேகம் மோகம், மானநிலை, விநோதன்...... இவ் வட சொற்களைக் கையாளாமல் உணர்வை வெளிப்படுத்தவே முடியாதா? இவை யெலாம் தமிழைக் கெடுத்துக்கொண்டு இருக்கையில் 'கல்கண்டு' மட்டுந்தானு கெடுத்துவிட்டது?

ஆங்காங்கு ஒற்றுப்பிழைகளும், இலக்கண, மரபு, எண்ணப் பிழைகளும் ஒருசில உள. தாறுமாறான சொல்லாட்சியும், பாடல்களில் ஒழுங்கு பெற்ற ஓசை நயம் இன்மையுமே அடிப்படைப் பெருங்குறையாகும். பயிரை வேரிலேயே பற்றி விடும் புழுக்கள்போலப் பாட்டுணர்வை இவை அரித்துத் தின்று விட்டு, எஞ்சிய வற்றைத்தான் படிப்பார்க்கு அளிக்கின்றன.

ஆசிரியர் ஒருசில நல்ல உவமைகளைக் கையாள்கின்றார்.

''விண்கதிர்கள் பலவிருக்க வேண்டிடாது ஞாயிற்
றொண் கதிர்க்கே மகிழ்மரைபோல்''

''கலையுணர்வு பலர்க் கிருந்தும், கற்பனைப் பொற்சிறகு
புலவன் மொழிக் கிணைவுறல்போல்''

பலமொழிகள் கற்றிருந்தும் பழகுதாயின் மொழியால்
நலனுகரும்... உளம்போல்...

புலவன் தொட்ட பொருளனைத்தும்
புகழ்பெறல் போலே''

என்பன நன்று 'காதல்' குடும்ப விளக்கு, வெண்ணிலா, ஆகிய பாடல்களின், அடிப்படை உணர்வுகள் கருமுகில் திரள் களிடையே உடுக்கள் ஒளிபோல் வெளிப்படுகின்றன. புலவன் ஒருவனின் உணர்வு ஆழமும் செப்பமும் பொதுத் தன்மையும் அடைதல் வேண்டும். அவன்தான் தனிப்பட்ட முறையில் நுகர்ந்த காதல் உணர்வு, பாடல்களைப் படிப்பவர்க்கும், அவர வர்க்குரிய பொதுவான உணர்வுகளை அசைப்பதாக அமைதல் வேண்டும். பாடல் எழுதியவரின் தனிப்பட்ட உணர்வுகள்தாம் இவை என்று விலகி நின்று காணும்படி அமைதல் கூடாது. தனியுணர்வைப் பொதுவுணர்வாக ஆக்கித் தருவதே அவனின் வேலை. ஆசிரியரின் நடைபற்றி இன்னொரு சொல். தன்னடையாளம் (Mannerisms) மிகுதியாக இல்லாத பாடல்களே உயர்ந்த பாடல்களாக முடியும். தமக்கே உரியன என்று வைத்துக் கொண்டிருக்கும் பொருளற்ற சொற்றொடர்களையும், இலக்கண மீறுதல்களையும் விதிவிலக்குகளையும் ஆசிரியர் கைவிட்டுவிட்டுப் பொது நிலையில் உணர்ந்த நல்லுணர்வை உள்ளபடியே தெளிவாக எழுதினாலல்லால், வருங்கால இலக்கிய உலகில் அவர்க்கு இடம் இராது.

ஆங்கில மொழியாக்கம்

விவேக சிந்தாமணி.

ஒப்புடன் முகமலர்ந்தே உபசரித் துண்மை பேசி
உப்பில்லாக் கூழிட்டாலும் உண்பதே அமிழ்தமாகும்.
முப்பழ மொடுபால், அன்னம் முகங்கடுத் திடுவராயின்
கப்பிய பசியி னோடு கடும்பசி ஆகுந் தானே!

If entertained with a cordial face and sincere words
E'en saltless gruel served is nectar sweet;
But fruits, milk and rice served with a sour face
Allay the hunger not;but leave one hungrier than before.

கதிர்பெறு செந்நெல் வாடக் கார்க்குலம் கண்டு சென்று
குதி திரைக் கடலிற் பெய்யும் கொள்கைபோல் குவலயத்தே
மதி தனம் படைத்த பேர்கள் வாடினோர் முகத்தைப் பாரார்;
நிதி மிகப் படைத்தோர்க் கீவார்; நிலையிலார்க் கீய மாட்டார்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

இந் நூலின் முன்னுரையாளர்க்கு ஒரு சொல். எதற்காக வீண் பாராட்டுரைகளை வெற்றுச் சொற்களால் அள்ளி வழங்கல் வேண்டும்? தமிழில் ஒரு முன்னுரை உள்ளபொழுது, ஆங்கிலத்தில் பாராட்டுரை எதற்கு? நூலாசிரியர்க்காக அதனை எழுதியுள்ளதாகத் தெரியவில்லை. தம் மொழி நடையைத் தாமே பார்த்து மகிழ்ந்து கொள்வதற்காகவே எழுதப்பட்டதுபோல் தோன்றுகின்றது. நடையோ, வெறுஞ் சொற்குப்பை. பொய்மையானது. இடைக் காலத்தில் தரம் குறைந்த ஆங்கிலப் புலவர் நடை அது. உண்மை ஆங்கிலப் புலவர் எவரேனும் இந் நடையைப் பாராட்டினால், நம் தவற்றுக்காகத் திரு. வி. ஆர். எம். அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள நாம் அணியமாயிருக்கின்றோம்.

—கல்லாடன்.

The paddy crop is withering, but the rain clouds pass
[it by
And into the surging oceans pour; e'en so on earth
The wealthy people pity not the suffering folk
But make gifts to the richer; never to the destitutes.

அரவினை ஆட்டுவாரும் அருங்களி றூட்டு வாரும்
இரவினில் தனிப் போ வாரும் ஏரிநீர் நீந்து வாரும்
விரை செறி குழலினாளை வேசியை விரும்பு வாரும்
அரசனைப் பகைத்திட் டாரும் ஆருயிர் இழப்பர் தாமே.

Those who charm the snakes
And those attending elephants
Those who tread the lonely path at night
And those who swim the lakes
Those who lust for whores with scented locks of hair
And those who make the king their foe
Will lose their dear lives in Vain.

தண்டா மரையின் உடன்பிறந்தும் தண்டேன் நுகரா மண்டுகம்;
வண்டோ கானத் திடையிருந்து வந்தே கமல மதுவுண்ணும்.
பண்டே பழகி யிருந்தாலும் அறியார் புல்லர் நல்லாரைக்
கண்டே களித்தங் குறவாடித் தம்மிற் கலப்பர் கற்றாரே!

Though born with the lotus cool, the frog its honey
taste not;
'Tis the bee that comes from the woods to enjoy it;
Though acquainted for ages with good men, the vulgar
know them not
Only the learned come, their company enjoy and
mingle souls.

ம.இலெ.தங்கப்பா

இலக்கணவியல்:

"சின்" ஓர் அசைநிலையா? அன்று?

வித்துவான் மோ. இசரயேல். எம். ஏ; டிப் (செர்மன்);
தமிழ் ஆய்வுத்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்

இலக்கண நூற்கள்: தொல்காப்பியனார் "சின்" முன்னிலையில் வழங்கும் அசைநிலை எனக் கூறிப், பின்னர் அது தன்மை படர்க்கை ஆகிய இடங்களிலும் வழங்கும் (தொ. சொ 264, 265) என்கிறார். நன்னூலார் "சின்" மூவிடங்களுக்கும் பொதுவான அசைநிலை (நன். 441) என்கிறார். உரையாசிரியர்கள் பூண்டிசின் (அகம். 7), வென்றிசின்யானே (நற். 61), அறிந்திசினோரே (குறு. 18), என்றிசின் (ஆங். 73) என்பனபோன்ற எடுத்துக்காட்டுகளைத் தருகின்றனர். இலக்கண நூலார் இதனை விகுதி என்று கூறிற்றிலர் என்பதும் கவனித்தற் குரித்து.

"சின்" வடிவம்: மேற்கூறிய எடுத்துக் காட்டுகளைப் பகுத்துப் பார்ப்போம். பூண்டு-இசின், வென்று-இசின், அறிந்து-இசின், என்று-இசின். இவற்றில் "சின்" என்னும் உறுப்பிற்கு முன்னர் 'இ' என்னும் ஒலியன் (Phoneme) இருத்தலைக் காணலாம். கழக இலக்கியங்களில் சின் வழங்கும் எல்லா இடங்களிலும். இந்த இகரம் வருகின்றது. எனவேதான் நச்சினார்க்கினியர் "சின்" அசைநிலையின் சரியான வடிவம் இசின் என்று குறிப்பிடுகிறார். பண்டாரகர் சுவாமிநாதர் அவர்களும் அங்ஙனமே குறிக்கின்றனர். எனவே "சின்" தவறான பிரிப்பினால் (Metanalysis) ஏற்பட்ட வடிவமே ஆகும். அதன் ஒழுங்கான வடிவம் "இசின்" ஆகும்.

கழக இலக்கியங்களில் "இசின்":

கழக இலக்கியங்களில் இசின் என்னும் வடிவம் (Form) பல இடங்களில் வழங்குவதைக் காணலாம். பண்டாரகர். சதாசிவம் அவர்கள் இசின் கழக இலக்கியங்களில் வழங்கும் இடங்களைக் கணக்கிட்டும், அவற்றின் இயல்பை மதிப்பிட்டும் ஒரு கட்டுரை வரைந்துள்ளார்[1]. அவர் கருத்துப்படி கழக இலக்கியங்களில் இசின் மூவிடங்களிலும் வழங்குகின்றது. அது செய்தி (Indicative) ஏவல் (Imperative) ஆகிய இரண்டு வகையான வினைவுகளிலும் இணைக்கப்பட்டுள்ளது. அவற்றை ஆயின், முன்னிலையில் "இசின்" பெற்று வருகின்ற வினை பெரும்பாலும் ஏவல் ஒருமையை உணர்த்தும். ஏனைய இரு

1 Dr. Sathasivam, A. The Suffix "Cin" in Cankam Tamil. – Tamil Culture Vol VII 140-149 (1959)

இடங்களிலும் "இசின்" பெற்று வரும் வினைகள் இறந்த காலத்தில் மட்டும் வழங்குகின்றன இதனால் முன்னிலை இறந்த கால வினையில் "இசின்" வழங்காது என்பதற்கில்லை. அவ்வாறும் சில வழக்குகள் கழக இலக்கியங்களில் உள.

"இசின்" பாகுபாடு: எனவே "இசின்" என்னும் வடிவம் அது வழங்கும் வினைகளையொட்டி இருவகைப்படும்; 1. ஏவலில் வழங்கும் "இசின்". இது முன்னிலையில் மட்டும் ஒருமை எண்ணில் வழங்கும். 2 இறந்த கால வினையில் வழங்கும் "இசின். இது பெரும்பாலும் தன்மை, படர்க்கை இடங்களிலும், சில இடங்களில் முன்னிலையிலும் வழங்கும். இவ்விரு வகையான வினைகளில் வழங்கும் "இசின் என்ற சொல்லின் பழமையை ஆய்வதே இக் கட்டுரையின் நோக்கம்.

1. ஏவலில்வழங்கும் "இசின்": பண்டாரகர். சதாசிவம் அவர்கள் கண்டிசின் (ஐங் 105) கேட்டிசின் (மதுரைக் காஞ்சி. 208), ஆன்றிசின் (நற். 128), வந்திசின் (புறம். 125) என்பன முன்னிலையில் ஏவலாக வரும் எனக் குறிப்பிடுகிறார். இப்பொழுது இவற்றில் ஒன்றான 'வந்திசின்' என்ற சொல்லின் தொடக்க நிலையைப் பார்ப்போம்

வந்திசின் < வந்தீசின் < வந்தீசென் < வந்தீசேன்

< வந்தீகேன் < வந்து — ஈ(கு) — ஏன் < வந்து — ஈ — கு — ஏன்

தெளிவு தரும் பிற வழக்குகள்:

கேளும் — ஏன்
> கேள் — ம் — ஏன்
> கேண்ம் — ஏன்
> கேண்மின்

கேண்மின், சென்மின் போன்ற ஏவல் வினைகள் கழக இலக்கியங்களில் பல உள்ளன. அவை கேளும், செல்லும் என்னும் ஏவல் வினையுடன் "ஏன்" என்னும் விகுதி இணைக்கப்பட்ட வடிவங்கள் எனக் கருதுவதில் தவறில்லை [2]. தற்கால வழக்குகளிலும், "வா" என்பதற்குப் பதிலாக "வாயேன்"; "வாரும்" என்பதற்குப் பதில் "வாருமேன்"; "வாருங்கள்" என்பதற்குப் பதிலாக "வாருங்களேன்" என்பன போன்றவை காணப்படு

2. பர். மு வரதராசன் மொழியியற் கட்டுரைகள் (1954) பக் 249

கின்றன. இவற்றுடன் இணைக்கும் வினாக்குறி ஏவலை அன்போடு தெரிவிக்கப் பயன்படுகிறது. இவையே போன்று வந்தீகு என் பதனோடு "ஏன்" என்னும் வினாக்குறி இணைக்கப்பட்டு முதன் முதல் வழங்கிப் பின்னர் ஏன் > என் > இன் என்னும் மாற் றத்தை அடைந்திருக்கலாம்.

ஈ (கு)-வரலாறு: 'ஈ' என்பது வினையடிச் சொல்லேயாகும் (Verbal root). ஆனால் இங்குத் துணைவினையாடியாகப் பயன் படுகிறது. இங்கு நன்னூலார் இருந்து, இட்டு போன்ற பிற துணைவினைகளையும் அசைநிலை எனக் கூறியுள்ளார் (நன். 441) என்பது கவனிக்கும் தன்மையது. எனவே, வேறுபடப் பிரித்து ஈ(கு) என்னும் துணைவினையின் சிதைந்த வடிவாம் "சின்"னை யும் அசை நிலையுள் அடக்கினர் என்பதில் வியப்பில்லை.-கு- ஆ(கு), வே(கு) என்னும் சொற்களில் காணப்படுகின்றது போன்ற சொல்லுருபு (Formative suffix). ஈ, கு, ஆகியவை முறையே ஒப்புமையாக்கத்தாலும் (analogy) அண்ணவினமாத லாலும் (Palatalzation) திரிந்து இசு என்னும் வடிவை அடைந் திருக்கலாம்

1. ஒப்புமையாக்கம்: ஈ > இ ஆனது எவ்வாறு? பொது வாகத் துணைவினைகள் யாவும் குறிய உயிருடன் தொடங்குகின் றன. எ-டு அருள், இரு, விடு, இடு. இவை வழக்கில் வந்தருள் எழுந்திரு, விட்டுவிடு, தந்திடு என்றவாறாக அமைகின்றன. அவற்றின் ஒப்புமையாக்கத்தால் 'ஈ' என்னும் துணைவினையடிச் சொல் 'இ' எனக் குறுகி இருக்கலாம்.

2. அண்ணவினமாதல்: (ஈ)கு > (ஈ)சு ஆனது எவ் வாறு? குகரத்திற்கு முன்னர் அண்ணவின ஈகாரம் உள்ளதால், அதன் ஆற்றல் குகரத்தை அண்ணவின சுகரம் ஆக்கிற்று. இவ்வாறு மெய்கள் உயிரின் ஆற்றலால் அண்ணவினமாதலைப் பிற பல இடங்களிலும் காணலாம்.

எ-டு அடித்தான் > அடிச்சான்
கடிக்கும் > கடிச்சும்

2. இறந்தகால வினையில்வரும் "இசின்": இது மூவிடங் களிலும் வழங்குகின்றது. இங்கும் துணைவினை யடிச் சொல் ஈகாரம் உள்ளது. எனவே "இசின்" என்பதை 'ஈ' என்னும் வேர்ச்சொல் அடியாகப் பிறந்த துணைவினை எனக் கருதலாம். "இசின்" இறந்த கால வினைகளில் வழங்குகின்றமைக்கு, என் றிசின் (நற். 61), ஆய்ந்திசின் (குறு. 262), வலித்திசின் (அகம் 30), சென்றிசின் (நற். 394), பெற்றிசின் (புறம். 11) போன்ற பலவற்றை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

ஏவலில் காணப்படும் "இசின்" -இலிருந்து இங்கு வழங்கும் வேறுபாடுடையதாகவே இருந்திருக்க வேண்டும். அடிச் சொல் சொல்லுருபு முதலியவையும், அவை அடைந்துள்ள மாற்றங்களும் இரண்டிற்கும் பொதுவானவையேயாகும். "ஏன்" என்னும் வினாக்குறி இறந்தகால வினையில் வரத் தேவை இல்லை. எனவே இறந்த வினைகளில் வரும் துணைச் சொல்லில் இறந்த காலக்குறி உளதா என ஆய்தலே தகுதி உடைத்து. "இசின்" என்ற வடிவை இசு - இன் எனப் பிரிக்கலாம். "இன்" அருளினான், ஓடினான் போன்ற பல வினைகளில் இறந்தகாலக் குறியாக வருதல்பற்றி இங்கு உள்ள "இன்" உருபனையும் (Morpheme) இறந்த காலக் குறியாகக் கருதுதலே சிறப்புடைத்து.

மயக்கம் (ஏன் > இன்):

முதல்முதல் ஏவற்சொற்கள் "ஏன்" என்னும் வினாக்குறி பெற்றும், இறந்த வினைகள் "இன்" என்னும் இறந்த காலக்குறியேற்றும் வழங்கி இருக்கலாம். இரண்டு வடிவங்களிலும் (இ. சேன், இசின் மிகச் சிறிய வேறுபாடுதான் காணப்படுதலின் காலப்போக்கில், மக்கள் இரண்டையும் ஒன்றாகக் கருதி வழக்கில் மிகுதியாகப் பயின்று வந்த இறந்த காலக்குறியே ஏவலில் வழங்கிய சொற்களிலும் இருக்கும் வடிவமாக மயக்கம் அடைந்திருக்கலாம். மேலும் ஏன் > என் > இன் என மாற்றம் அடைந்த வடிவம் பெற்ற கேண்மின், சென்மின் போன்ற ஏவல் வினைகளும் இவ்வாறான மயக்கத்திற்குக் காரணமாக இருந்திருக்கலாம்.

ஏவல் வினை	இறந்த கால வினை
வந்து - ஈ[கு] - ஏன்	வந்து - ஈ[கு] - இன்
வந்தீகேன்	வந்தீகின்
வந்திசேன்	வந்திசின்
வந்திசென்	
வந்திசின்	

இதுகாறும் கூறியவற்றால் ஏவல் வினையின்கண் வழங்கும் "இசின்" இல் உள்ள இறுதி உருபன் [morpheme] வேறு; இறந்தகால வினையில் வழங்கும் "இசின்" -இன் இறுதி உருபன் வேறு என்பது தெளிவு; காலப்போக்கில் அவை இரண்டும் ஒரு வடிவத்தை அடைந்துவிட்டன.

ஒப்பிலக்கணச் சான்று:

திராவிட மொழிகள் பன்னிரண்டு என்று கூறிப்போந்தார் பண்டாரகர் கால்டுவெல் அவர்கள். ஆனால் இன்றுபதினெட்டுக்

குக் கூடுதலான திராவிடமொழிகள் உள்ளதாக மேலைநாட்டு அறிஞர்கள் கணக்கிட்டுக் கூறுகின்றனர்[3]. மத்திய திராவிட மொழிகளில் ஒன்ருகிய ''கோண்டா' மொழியில் ''இசின்'' என்னும் வடிவம் இறந்த காலக்குறியீடாக வழங்குகின்றதாகத் தெரிகிறது. ஒரு மொழியில் சொல் வடிவங்களை நன்கு உணர்ந்து கொள்ள அதன் இனத்தைச் சேர்ந்த பிறமொழிகளை நோக்குதல் பெரும் பயன் விளைக்கும் என்பது ஆய்வாளர் கண்ட உண்மை. எனவே, இறந்த கால வினைகளில் உள்ள இசின் வடிவம் முழுதும் இறந்த காலக் குறியாகத்தான் ஆளப்பட்டிருக்குமோ என்று ஐயுற இடம் உண்டு. அங்ஙனம் கழகக் காலத்தில் வழங்கிய ''இசின்'' இறந்த காலக் குறியீடு என்பது ஒப்புக் கொள்ளப் படுவதாயின், அங்குத் துணைவினை இல்லை என்பதும், ''இசின்''முன் நிற்கும்,-ந்த்-,-த்-,-ற்-,-ட்-போன்ற வடிவங்கள் பொருளற்ற வெற்றுருவங்கள் என்பதும், அந்த ''இசின்'' வழக் கிறந்துபோன காலக் குறியீடு என்றும் அறிதல் வேண்டும். இக் கருத்து இன்னும் பல ஆராய்ச்சிகளால் முடிவு செய்யப்பட வேண்டியதேயாகும்.

முடிவு: இறுதியாக ''சின்'' ஓர் அசைநிலை அன்று என்பதும், அதன் வடிவம் ''இசின்'' ஆகும் என்பதும், அஃது 'ஈ' என்னும் வேர்ச் சொல்லினின்று தோன்றிய துணை வினையே என்பதும், ஏவலில் அஃது ''ஏன்'' என்னும் விகுதிக் குறியைப் பெற்றுள்ளது என்பதும் இவண் விளக்கப்பட்டுள்ளன. அவ்வடிவம் அடைந்துள்ள மாற்றங்கள் (ஈ > இ; கு > சு; ஏ > எ > இ) ஒப்புமையாக்கத்தாலும், அண்ணவினமாதலாலும், பிற மயக்கங்களாலும் ஏற்பட்டவையே. ஒப்பிலக்கணச் சான்று, இறந்த கால வினைகளில் காணும் ''இசின்'' முழுமையும் இறந்த காலக் குறியீடாகக் கருத இடம் அளிக்கிறது.

---

3. a) Prof Burrow, and Prof. Emeneau, M. B. } A Dravidian Etymological Dictionary (1961.)
   b) Dr. Andronov, M. S. Dravidian Languages, Archir Orientalni Vol. 31. 177-183 (1963.)

முகவர்கள் கவனத்திற்கு.

- ஒவ்வோர் ஆங்கில மாதமும் 5-ஆம் நாளைக்குள் முந்தைய மாதப் பட்டியல் தொகையைக் கட்டாயம் விடுத்துவிடவும்.
- படிகள் சரி பார்த்தே விடுக்கப் பெறுவதால், இடையில் ஏற்படும் குறைபாடுகளுக்கு அலுவலகம் பொறுப்பாகாது.
- தேவையான மிகுதிப் படிகட்கு முன்கூட்டியே எழுதவும்.

—அமைச்சர்.

நாட்டு நிலை

நாட்டில் முரண்பட்ட பல்வேறு நோக்குகளும் போக்குகளும் முறையான பண்புக்கு மாறுபட்ட வகையில் மிகுவதும், அவற்றைச் செயற்படுத்திப் பொது நன்மைக்கு ஊறுவிளைக்கும் வகையில் சிலர் வாழ்வதும் நாட்டுக்கு எதிரானது என அரசும் மக்களும் உணர்தல்வேண்டும். தன்னுடைய வளம், வாழ்வு என்பதை மட்டுமே கருத்தில் குறிக்கோளாகக் கொண்டு எண்ணி, பேசிச், செயல் புரிபவர் தொகை நாட்டில் மிகப் பெருகிவருகிறது. இந்நிலை வளர்ந்தால், நாட்டுக்குள் உட்பகையும், உள்நாட்டுக் குழப்பமும் உண்டாகிப் பெரும் பூசலும் பேரிடுக்கணும் விளையும். விரைவுப் புகைவண்டிகளில் தென்திசை நோக்கிச் செலவு செய்பவர்களுள் பலர், சென்னையில் பகற் பொழுதிலேயே அமரிடங்களில் தம் தம் படுக்கையை அகலமாக விரித்துத் தலையணைமீது தலைசாய்த்து இருகண்மூடிப் பொய்யே உறங்கும் ‘அறிதுயில்’ நிலையினைப் பார்க்கின்றோம். இனைய மடவரின் தற்குறித் தன்மையை என்னென்பது! மக்கள் திரள் மிகுதியாக உள்ளேஏறி, நிற்கவும் அல்லலுறுங் காலை, மதிப்பிற்குரிய ஐயா, கால் நீட்டிக் கண்மூடி உறங்கவிழையும் உள்ளத்தைக் கொலையிற் கொடிய உள்ளம் என்பதில் யாது பிழை? இதுபோல் ‘பிறர் எக்கேடு கெடினும் என்? என் நலனும் இன்பமுமே உலகில் நனிசீரியது’ என வெறித்து வாழ்வார் மலிந்து வருதல் நாட்டை மீண்டும் அடிமையளறில் ஆழ்த்தும் என்பதில் ஐயம் இன்று.

இற்றைஞான்று அரசியலாளர் பலரும், வணிகரும், ஆலை முதல்வர்களும், பிறதுறை முதலாளிகளும் தம் முன்னேற்றமொன்றையன்றிப் பொதுமக்கள் நலமோ, நல்வாழ்வோ பற்றி அணுத்துணையும் கவலைப்படுவதே இல்லை. நாட்டில் விலையேற்றம் மிகுதற்குப் பொருளியல் நோக்கிப் பல காரணங்கள் கூறப்படும். அவற்றின் உண்மைகளும் பொருந்துவதே. ஆயின் செல்வர்பாற் செம்மனமின்மைபற்றியே நாம் மிகுதியும் எண்ணவேண்டும். தம்பொருள் மிகுதற் பொருட்டு ஏதும் செய்வது என்ற இலக்கணம் நாட்கடைப்பிடியாக உள்ளது. இந்நிலையை இந்நாட்டுக் குடியாட்சி மாற்றுதற் காற்றுதெனின் அதுபோற்றுதற்குரிய தொரு நிலையன்று. இவ்வண்ணம் செல்வர் செம்மாப்பு மிகைவழிச் செல்லுமேல் இந்நாட்டுள் புரட்சிமூண்டு நில மேல் வரம்புச் சட்டம் போல் செல்வமேல் வரம்புச் சட்டம் ஒன்றும் வரவேண்டிய நிலையும் அமையும். குறித்த தொகைக்கு மேல் ஒருவர் பாற் செல்வம் மிகின், அம் மிகைப்பொருள் நாட்டுப்

பொதுவுடைமை என்று கொள்ளப்படும் என்ற சட்டவரைவு மிக இன்றியமையாதது. வாணிகம் செய்வார் தம்போற் பிறரையும் நினைக்கும் நல்லறவுணர் வினராதல் வேண்டும். அவர்கள் அந்நிலைக்கு நல்லுணர் வெய்தாமற் போனால், அனைத்துப் பொருட்களையும் கூட்டுறவு விற்பனை நிலையங்களை மிகுவித்து விற்பதற்கு அரசு உடனே ஆணையிடுதல் ஒன்றே அறநெறியின் பாற்படும். ஆண்டு ஊழல் புரிபவர் உளரேல் அவர்க்குக் 'கொலை யொறுப்பு' வழங்கவும் சட்ட விரிவு வேண்டும். மன் பதைக்குத் துன்பஞ்செய் மக்கட் பிறப்பு இறப்பதே சாலஅமையும் சிறப்புறும் அறப்பணி என்பேன்.

பொருளாவல் எல்லைப்பட வில்லையேல், பொருள் மிகுதல் எல்லைப்படல் வேண்டுவதே முறை. பல கோடிமக்கள் உணுப் பொருள் கிட்டாமற் புலம்புவதும், கடையினர் வாங்கச் செல்வோரை எள்ளி நகையாடல்போல 'இல்லை' என மறுப்புரைத்து மலையச் செய்வதும், மிகு ஏழையர் ஓரளவு பொருளீட்டி, அதற்கு அரிசிபோலும் இன்றியமையாப் பொருள் தானும் வாங்க ஆற்றுமல் ஆற்றுமைப்பட்டு அலமரும் அவலநிலை நீடிக்குமேல், மக்கள் குடியாட்சி முறைமீதும் வெறுப்பேற்பட்டு முரணுவர் என்பது உணர வேண்டுவதொன்றும். செல்வர் சிலரை அரசு அடக்கியாளத் தவறுவதால் பல நடுநிலைக் குடியினரும் பல்கோடி ஏழையரும் பெரும்பாடு படுகின்றனர். ஆட்சித் தகுதியிலிருப்பார் 'கொள்ளை யூதியம்' பெறமுயலும் வணிகர், பங்கு வணிகர், முதலாளியர், இடையோடி வணிகர் முதலியோரை ஆளமுடியாவிடில், அவர்கள் ஏன் ஆட்சித்தகுதியிலிருத்தல் வேண்டும்? அவர்கட்கு ஏன் படையும் காவலரும்? சட்டமும் வழக்கு மன்றும் ஏன்? இத்துணை ஆற்றல்களும் ஆட்படைகளும் கயமையை, குறைபாட்டை அறப்பகையை அழிக்க முடியாவிட்டால் அவற்றுல் என்ன பயன்? ஆட்சியினர் முதலாளியர், செல்வர்களின் கைப்பாவையாக இயங்குதல் கூடாது. குறிப்பிட்ட சிலருக்கு அடங்கி ஒடுங்கி, அவர்கள் நலனென்றுக்கே பாடுபடும் அரசியலாளர்கள் குடியாட்சியில் இருக்கக் கூடாது. சிறுபான்மையோர் நலனையும் காத்து ஓம்ப வேண்டுவது குடியாட்சியின் கடமை என்பர்; பெரும்பான்மையோர் நலனையே காத்தோம்பாவிட்டால், குடியாட்சி என்பதே பொருளற்றதாகிவிடும். நாட்டின் பொருளியல் வளர்ச்சிக்கு ஊறுதேடுபவர்கள், நாட்டுச் செல்வரும், முதலாளியரும் தந்நல வெறியரும், அரசியல் முதலைகளுமே என்பதை உணரும்பொழுது பெருந் துன்பம் விளைகிறது திருத்த முனைந்து இனையரின் தீய போக்கை மாற்ற வேண்டியது அரசின் கடமையாகும். அதற்கவர்கள் உடன்படாது மீறினுல், ஒறுத்து அடக்க வேண்டியது மிகமிக இன்றியமையாத தொன்றாம். உணவுப் பொருட்களைக் கூட்டுறவு விற்பனைக் கழகங்கள் மட்டுமே நேரிடையாக வாங்கி

விடவேண்டும் என்றும், தனியார் வாங்குதல் கூடாதென்றும் தடை போட்டால் வணிகர்தம் கொட்டம் அடங்கும்; செருக்கு ஒழியும். இதனை உடனடியாகச் செயற்படுத்தவும் வேண்டும்.

'செல்வம் முடங்கிவிட்டது; முடங்கிவிட்டது' என மேடையில் கூச்சலிடுவது மடமை சான்றது செல்வம் முடங்கும்படி விட்டதே குறை கூறுவதற்குரியது. அதிலும் வளர்ந்து வரும் நாட்டில், செல்வ முடக்கம் எத்துணை யளவு கேடு பயக்கும் என்பதை யாரே அறியார்? செல்வத்தைத் தொழிலில், வாணிகத்தில் பயன்படுத்த முனைபவரைத் தகையும் வகையில் அரசின் போக்குகளும், சட்டங்களும், ஆணையர்களும் உள்ள உண்மையையும் இவண் சுட்டிக்காட்டவே வேண்டும். செல்வம் செல்வர்க்கே சேரும் வாய்ப்பு மிகுதியாக உள்ளது. அந்நிலையை மாற்ற மனம் இசைவது அரிதே. ஆகவே மிகைப் பொருளை அரசு வரியாகத் திரட்டாமல் தொழிற்கூடப் பங்குகளில் கூட்டுறவு முறையில், அரசின் மேற்பார்வையில் அமைத்து, அச் செல்வத்தைப் பயன்படுத்த வேண்டும். மேலை நாடுகளில் அமைந்துள்ள பல்வகைத் தொழில்கள் நம் நாட்டில் தொடங்கப் பெறுமலிருக்கிறது. அவற்றைத் தொடங்க அரசு ஒத்துழைக்க வேண்டும். பொதுவாக நாட்டுமக்களுக்கு அறவுணர்வும், பொதுநல உணர்வும் மிகல் வேண்டும். அந்தப் பொதுநல உளப்பான்மை வளராவிட்டால் தீங்குகள் மலியும்; கொடுமைகள் விளையும். பழமையாக நம் நாட்டில் ஊடு வளர்ந்து வந்த நல்ல நம்பிக்கைகளும், நல்ல கொள்கைகளும், அறங்களும், ஒழுக்கங்களும் சீர்கெட்டுச் சிதைந்து வருகின்றன. இது மிக மிகக் கேடானது. இதனால் தனிப்பட்டவருக்கு மட்டுமின்றி நாட்டுக்கும் பெருந்தீங்கே விளையும்.

காசும், ஆணையும், விளம்பரமும்தாம் வாழ்வு நோக்கம் என்றமுடிவுக்கு இளைஞர்கள் வரும்படி பெரியவர்கள் நடப்பதும், அறிவுறுத்துவதும் கயமையாகும். அரசு அறத்தை வளர்ப்பதிலும், தாமே அறத்தை நன்குக் கடைப்பிடித் தொழுகுவதில் முன்நிற்க வேண்டும். அரசுத் துறையினரும், அரசியல் கட்சிகளும் அறந்தழுவிய நேர்மை நடப்பில் தலைப்படல் வேண்டும். அரசியல் வாழ்வு என்றாலே முறை பிறழ்ந்த வாழ்வுதான் என நம்பிப் பேசிவரும் மக்களின் மனநிலையை இளந் தலைமுறையினர் மாற்றல் வேண்டும். ஒரு நாட்டு இளைஞர் மன்பதை நேர்மையில் நம்பிக்கை இழப்பது அந் நாடு படுகுழியில் வீழ்வதற்கு அணியமாவதையே குறிக்கும். இளைஞர்களுக்கு முன்னோடிகளாக, வழிகாட்டிகளாக அமைபவர்களும் நேர்மையின் காவலராகத் திகழல் வேண்டும். ''எப்படியாவது வல்லவனாக வாழ்க; எப்படியாவது வாழ்வில் முன்னேறுக'' என்ற அறிவுரை அண்மைக்

காலத்தில் பேராசிரியர்கள், அறிஞர்கள், நூலாசிரியர்களாலும் கூறப்பட்டு வருவது பாராட்டக் கூடிய கருத்தன்று.

பெரியவர்களே இளைஞர்களை இவ்வாறு வளரும்படி அறிவுறுத்தினுல் வருங்கால நாட்டு மக்கள் எவ்வாறு நன்மையை நம்பிப் போற்றுவர்? இன்றைய நிலையைவிட இழிந்த நிலையில் நாளைய வாழ்வு நிலை அமைந்துவிடாதா? பண்டைக் காலத்தை விடத் தற்காலத்தில் உணர்வுச் சிதைவு மிகுதியாக உள்ளது. பல சிக்கல்களுக்கு இந்த உணர்வுச் சிதைவே காரணமாம். உணர்வுத் தெளிவும் உணர்வுச்செறிவும் குன்றி வருவதே அறக் கழிவுக்கு இன்றியமையாத காரணம். ஆகவே உணர்வுச் சிதறல் உண்டாக்கும் புற, அகத் துறைகளையும் 'சட்ட முரண்' செயல்களாக ஆக்கல் வேண்டும். 'உலகத்தோடு ஒட்டிச் செல்ல வேண்டும்' என்ற அறிவுரை கூறுபவர்கள் ஒப்பற்ற தந்நல வெறிபிடித்த கயவர்களாகவே இருக்கக்கூடும். உலகத்தோடு ஒட்ட ஒழுகுவதிலும் சில எல்லையை வகுத்துக் கொள்ளவே வேண்டும். நம் பண்பு, மரபு, வாழ்வு, ஒழுகலாறு தனித்தன்மையன. இவற்றுக்கு இசைவதை ஏற்பதே மெய்யறிவு ஆகும். நமக்காகாதவற்றைப் புறக்கணிப்பதே சீர்மை. அரசியல், பொருளியல் துறையிலும் 'முற்போக்கு' என்ற பெயரால் 'போலச் செய்தலே' அமைகிறது. இதனுல் முரண்பட்ட அரசியல் சூழலும், பொருளியல் சிக்கல்களும் விளைந்துவிட்டன. இதையுணராமல் விளைவுகளைப்பற்றி மட்டுமே விரித்துப் பேசி இடர்ப்படுவது பிழைசெறி பிழையாம். தமிழ்ப் புலவர்களும், தமிழ்ப் பேராசிரியர்களும், தமிழ்ச் சான்ருேர்களும் இற்றைநாள் அரசியல் வாழ்விலும், பொருளியல் வாழ்விலும் துணிந்து பேராண்மையோடு ஈடுபட்டு அரசியலாளர்க்கும், அரசியற் கட்சிகளுக்கும் அறிவுரை நல்கி வழிகாட்டியராக வேண்டும். பண்டையரசர்கட்கு அறிவுரை கூறி செவியறிவுறுத்தியவர்கள் புலவர் பெருமக்களே என்பதை மறக்க முடியுமா? புலவர்கள் அரசியலினின்றும் விலகியதுதான் நாட்டில் பெருஞ் சீர்கேடுகளும், மறமும் செழித்ததற்கு அடிப்படையாம். ஆகவே தமிழ்ப் புலவர் பெருமக்கள் அரசியல் வழிகாட்டிகளாக, நாட்டின் நெறியாளர்களாகத், தலைவர்களுக்குத் தலைவர்களாக ஆகல் வேண்டும். அந்நிலை உருவாகி நிலைபெற்ருல்தான் நன்மை விளையும்.

ஆள்வோரை ஆள்வோராகத் தமிழறிஞர் ஆனுல், ஆட்சி சிறக்கும்; மாட்சி நிலவும். 'புலவர்கள் அரசியல் பேசுகிருர்கள்; இது தவறு. புலவர்கள் அரசியலில் ஈடுபடலாமா?' எனச் சிலமடவர் பிதற்றுவதைக் கேட்கிருேம். இவ்வாறு கூறுபவர்கள்மட்டும் அரசியலில் ஈடுபடலாமா? இவர்களுக்கு மட்டும் அரசியல் பாட்டன் சொத்தாகுமா? புலவர்கள் அரசியலைவிட்டு விலகியதே

தவறு என்பேன். புலவர்கள் கோழையராக மாறினதால்தான் உலக நலன் சிதைந்தது. ஆகவே நாட்டு நன்மைக்காக, மக்கள் செம்மைக்காகப் புலவர்கள் ஆட்சிப்பொறுப்பிலும் அரசியலிலும் ஈடுபாடுகொண்டு முழு வாழ்வுத் தொண்டாக மேற்கொள்ளல் வேண்டும் என்பேன். அரசியலை மக்களுணர்வுக் கண்ணோட்டத்தினின்று புலவர்கள் திறனாய்ந்து பேசியும் எழுதியும் பணியாற்றல் வேண்டும். அறநெறிவழாமல் ஆட்சியையும் நாட்டையும் தமிழையும், பண்பாட்டையும் காக்க ஆவன செய்ய அனைத்து மக்களுக்கும் சிறப்பான பொறுப்புண்டு; ஆயின் புலவர்களுக்கு மிக இன்றியமையா உரிமைக் கடமை இஃது என்பேன். நாடு, கேடுமிக்கக் காடு ஆகக்கூடாது. மக்கள் வாழ்வு;வாழ்வாக அமைதல்வேண்டும். அரசு நேர்மைக் கோவிலாக– அற உருவாகத் திகழல் வேண்டும் தமிழிளைஞர் இது குறித்து ஆவன செய்ய எழுவாராக!

போலி விற்பனையாளர்கள்

—:❁:—

மலேயா, சிங்கப்பூர் முதலிய பகுதிகளுக்கு திரு. சா சுப்பையா அவர்களையே நம் தென்மொழி விற்பனையாளராக ஏற்படுத்தியுள்ளோம். அவர்க்கு எதிராக திரு. சிவகுரு என்பார் சென்னையிலிருந்து கொண்டு, தென்மொழி இதழ்களைக் கடைக் கொன்றாகப் பெற்று மொத்தமாகச் சேர்த்து மலை நாட்டில் உள்ள தம் துணை முகவர் (Sub Agent) ஒருவர்க்கு மாதந்தொறும் விடுத்து வருவதாகவும், அப் படிகளை அத் துணை முகவர், திரு. சுப்பையாவின் வாடிக்கைக்காரர்களிடம் நாம் குறிப்பிட்ட விலையினும் குறைத்து விலைபோக்கி நம் முகவரின் விற்பனையைக் கெடுப்பதாகவும் அறிகின்றோம். நம் அலுவலகக் கட்டுப்பாட்டு முறைகளின்படி முன்பணம் கட்டாது ஒருவர் தம்மை முகவர் என்று கூறிக்கொள்வதும், அலுவலகத்தால் அமர்த்தப் பெற்ற முகவரின் விற்பனைக்குக் கேடு விளைப்பதும், இதழ்களைக் குறித்த விலைக்குக் குறைத்து விற்பதும் குற்றங்களாகும். முறை மாறிப் போகும் அத் தமிழ்ப் பண்பு திரிந்தார் இனியும் அவ்வாறு நடப்பாராகில், அவர்மேல் கண்டிப்பாக வழக்கு மன்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கின்றோம். அத்தகைய போலி விற்பனையாளர்க்குத் துணை நிற்க வேண்டா எனத் தென்மொழி அன்பர்களையும் வேண்டிக் கொள்கின்றோம். —ஆசிரியர்.

மலேயா விற்பனையாளர் முகவரி:-

S. S. SUPPIAH

A. 47. Kuala Kangsar Road, IPOH, PERAK. MALAYSIA.

துணி வெளுக்கின்றாள்...!

இரா. இளவரசு எம். ஏ.

துணி வெளுக்கின்றாள் – ஆகா!
தொப்புத் தொப்பென்றே துப்புரவாகத்
துணி வெளுக்கின்றாள்!

சிற்றலை ஆடை தென்றலில் நெளியச்
சேல்கெண்டை மீன்கள் துள்ளித்திரிய
நற்றமிழ்ப் பெண்ணாய் நடக்கும் சிற்றோடையில் (துணி)

நிலவுக் கீற்றும் நெற்றி வெயர்க்க
நீண்ட கருங்குழல் கொண்டை குலையக்
குலவும் மார்பெழில் குலுங்கக் குலுங்க (துணி)

மலர்க்கைக் கித்துணை வலிவோ? கால்கள்
மரத்துப் போகாவோ? இடைநோ காதோ?
பல நாள் அழுக்கைப் பிழிந்து பளீரெனத் (துணி)

கேணிக் கருகிலே பேசிய கிண்டலும்
கெண்டைக் குறும்பு விழியினாற் கொன்றதும்
நாணி நடந்த நடப்பும் அறியாள்போல் (துணி)

போலிக் குலவெறிப் புரட்டினைப் போக்கிப்
பொதுமைக் குறள்நெறி போற்றிக் கழுத்தினில்
தாலியைக் கட்டும் தலைவனைப் பாராது (துணி)

கனிஇதழ்ப் புன்னகை காட்டினா லென்னாம்?
கடைவிழி பாய்ச்சின் கண்ணா பறிபோம்?
எனநினைத் திருக்குமென் நெஞ்சம் புண்ணாகத் (துணி)

துணியா துவைக்கிறாள்? தூண்டிற் கயலாய்
துடிக்குமென் நெஞ்சைத் துவைக்கிறாள்; இங்கே
மணியிரண் டாக மடிபவன் பாராமல். (துணி)

பக்கத்துக் கல்லில் படீர்படீரென்று
பாவையின் தந்தை பழநி வெளுப்பதால்
வக்கணைக் காரியென் வரவறி யாள்போல் (துணி)

தொடர்ச்சி 5

நாடகம் போர் மறவனும் காதலும்.

சியார்சு பெர்னார்டு சா.

தமிழில்: 'வழுதி'.

அவன்: [அதனை அடையாளம் கண்டுகொண்டு, அதிர்ச்சியுடன்:] நான் மிகவும் வருந்துகின்றேன். [அவளை ஏறிட்டு நோக்கி] தெரிந்தும் என்னை இந்தநிலைக் காளாக்கியது முறை தானா? [மீண்டும் புகைப் படத்தைப் பார்க்கிறான்] இஃது அந்த "தான் குவிக்சாத்து" தான். ஐயமில்லை. (வந்த சிரிப்பை அடக்கிக் கொள்கின்றான்]

இரெய்னா: [வெடுக்கென] ஏன் சிரிக்கிறீர்?

அவன்: [மன்னிப்பு வேண்டும் குரலில், ஆயினும் கிளுகிளுப்புடன்] நான் சிரிக்கவில்லையே... சிரிக்க வேண்டுமென்று நினைக்கவில்லை. இருந்தாலும்... கோமாளித்தனமாக மாட்டிக் கொண்டு, பெரிய மறச்செயல் என்று கற்பனை செய்து கொண்டதை எண்ணும் பொழுதுதான்... [சிரிப்பை அடக்கமுடியாமல் திணறுகிறான்].

இரெய்னா: [கடுகடுப்பாக] அந்தப் படத்தை இப்படிக் கொடுத்துவிடும்...

அவன்: [உண்மையாகவே கழிவிரக்கத்துடன்] இதோ மன்னித்துக்கொள். [படத்தைக் கொடுக்கின்றான். அவள் அதனை அவன் பார்க்கும்படி முத்தமிட்டுவிட்டு, அவனைத் துடுக்குத்தனமாக உற்றுப் பார்க்கிறாள். பின்பு படத்தை இருந்த இடத்தில் வைக்கச் செல்கிறாள். அவன் அவளைப் பின்தொடர்ந்து கெஞ்சும் குரலில்] நான் நினைத்தது ஒருவேளை தவறாக இருக்கலாம்... ...ஆமாம், தவறுதான்; எங்களிடம் வெடிமருந்து இல்லாமையை எப்படியோ தெரிந்து கொண்டு, அதுதான் தாக்குவதற்குச் சரியான வேளை என்று...

இரெய்னா: அதாவது, அவர் பாசாங்குக்காரர்......... ...கோழை என்று கூறுகிறீர்... சிறிது முன்பாக இவ்வாறு சொல்லத் துணியவில்லை......

அவன்: [குறும்புத்தனமாக, சலிப்பைக் காட்டும் முகக் குறிப்புடன்] என்ன செய்வது! உனக்கு இதையெல்லாம்

எப்படி விளக்குவது, பெருமாட்டி! போர்த் தொழில் நுணுக்கம் தெரிந்திருந்தால்தான் உனக்கு நான் சொல்வது புரியும். அது வரை நான் என்ன சொல்லியும் பயனில்லை. [இருக்கையை நோக்கித் திரும்புகின்ருன். தொலைவில் இரண்டு வேட்டொலிகள் கிளம்புகின்றன. ஏதடா புதிய தொல்லை என்று அவன் முகம் மாறுகின்றது]

இரெய்னு: [அவன் அவற்றை உன்னிப்பாய்க் கேட்பதைக் கவனித்து, கடுத்தமாக,] எனக்கு அது தெரியாமலிருக்குமளவு உமக்கு நல்லதுதான்.

அவன்: [திரும்பி] எப்படி?

இரெய்னு: எப்படியா? நீர் எங்கள் பகைவர். என் கையில் மாட்டிக் கொண்டிருக்கிறீர். நான் தொழில் நுணுக்கமறிந்த போர் மறத்தியாயிருந்தால் இப்பொழுது என்ன நடந்திருக்கும்?

அவன்: மெய்தான்; மெய்தான். நீ சொல்வதெல்லாம் சரி. நீ எனக்கு எவ்வளவோ நன்மை செய்திருக்கிருய். நீ தந்த அந்த மூன்று கோக்கட்டி நெய் நொறுவைகளையும் நான் சாகுமட்டும் மறவேன். அதைப் போர் நுணுக்கம் என்று கூற முடியாதுதான். ஆனால் அது தெய்வத்தன்மையானது.

இரெய்னு: [ஈடுபாடற்ற குரலில்] நன்றி. இருக்கட்டும். இப்பொழுது போர்த் திறம் வாய்ந்த ஒரு செயலை நான் செய்யப் போகிறேன். என் வருங்காலக் கணவரைப் பற்றி இவ்வளவையும் கூறிவிட்டு நீர் இனியும் இங்கே தங்க முடியாது. நான் தட்டொட்டியில் போய், நீர் தெருவில் இறங்கிச் செல்வதற்குத் தோதான நேரம்தானு என்று பார்க்கப் போகிறேன்... (பலகணி நோக்கித் திரும்புகின்ருள்)

அவன்: (கலங்கி நிலை குலைந்து) நீர்த்தூம்பு வழியாகவா! நில்! பொறு! என்னல் முடியாது...! முடியவே முடியாது! அதை நினைத்தாலே தலை சுழல்கிறது. சாவுக்கு அஞ்சி அப்பொழுது அதில் விரைந்து ஏறிவிட்டேன். ஆனால், இப்பொழுது . ! (இருக்கையில் சாய்கிருன்) பயனில்லை இனித்தாங்கமுடியாது. ... நான் தோற்றுப் போய்விட்டேன். நீ குரலெழுப்பிவிடு. (தலையிற் கைவைத்துக் கொண்டு சோர்ந்து உட்கார்ந்து விடுகிருன்.)

இரெய்னு: (இரக்கத்தால் ..... சினம் மாறி) மனந்தளர வேண்டா...... (தாய்மை உணர்வோடு அவனருகில் குனிந்து அவனைத் தேற்றுகின்ருள். அவன் தலையை அசைக்கின்ருள்) நீர் மிகவும் தாழ்வான போர் மறவராயிருக்கிறீரே! ..... வெறும் இனிப்பு நொறுவைப் போர் மறவரே! ஊக்கமாயிரும் .. மாட்டிக் கொள்வதைவிட, கீழே இறங்குவது எளிது ,. தெரிகிறதா?

அவன்: (கனவு மயக்கத்தோடு, அவள் குரலால் தாலாட்டப்பெற்று) இல்லை மாட்டிக் கொண்டால்... கிடைப்பது சாவு தானே சாவு என்பது உறக்கம்...ஆகா, உறக்கம், உறக்கம், உறக்கம். தொல்லையில்லாத உறக்கம்!... தூம்பு வழியாக இறங்குவதென்றால்... முயற்சி தேவை—எண்ணம் தேவை... வேண்டாம். சாவே பத்து மடங்குமேல்.

இரெய்னு: (மெல்ல, வியப்புடன், அவன் உற்ற களைப்பினை உணர்ந்து) அவ்வளவு உறக்கமா?

அவன்: நான் படையில் சேர்ந்தது முதல் இரண்டு மணி நேரம் கூட அமைதியாக உறங்கியதே இல்லை. கடந்த நாற்பத்தெட்டுமணி நேரமாகக் கண்களை மூடவேயில்லை...

இரெய்னு: (என்ன செய்வதென்று தெரியாமல்) இப்பொழுது உம்மை நான் என்ன செய்வது?

அவன்: (அவள் சலிப்படைவது கண்டு, சற்று விழிப்புற்றுத் தள்ளாடிக் கொண்டு) ஆமாம்...ஆமாம்.. நான் ஏதாவது செய்தாக வேண்டும்... (உடலைக் குலுக்கி நிமிர்த்திவிடுகிறான்... புதிய தெம்புடனும் துணிவுடனும் பேச முயல்கிறான்)... உறக்கமோ உறக்கம் இல்லையோ, பசியோ, பசியில்லையோ, களைப்போ களைப்பில்லையோ, ஒரு செயலைச்செய்தாக வேண்டும் என்றநிலை ஏற்பட்டால் அதை எப்பொழுதும் செய்துவிடலாம்... சரி.. அந்தத் தூம்பு வழியாக இறங்கியே ஆக வேண்டும்... [தன் நெஞ்சில் தட்டிக் கொள்கிறான்]... காதில் விழுகிறதா... இனிப்பு நொறுவைப்போர் மறவனே!... [பலகணியை நோக்கித் திரும்புகின்றான்]

இரெய்னு: [கவலையோடு] நீர் கீழே விழுந்துவிட்டால்?...

அவன்: கற்களே பஞ்சணையாகக்கருதி உறங்கிவிடுவேன். வணக்கம். [பலகணியருகில் சென்று கதவில் கை வைக்கின்றான் தெருவில் கடுமையான வேட்டொலி கிளம்புகின்றது.]

இரெய்னு: [ஓடிச்சென்று] நில்லும்! [அவனைப் பிடித்து இழுத்துப் பின்னுக்குத் தள்ளுகின்றாள்]... உம்மைக் கொன்று விடுவார்கள்.

அவன்: (தன்னைப் பற்றிய அக்கறையில்லாமல், ஆனால் அவள் பேச்சுக்குச் செவி சாய்த்து)..... கவலைப்படாதே!...... இதெல்லாம் ஒவ்வொருநாளும் எனக்கு நிகழ்வதுதான்...வந்தது வரட்டும் (முடிவாக) சொல்வதைக் கேள். மெழுகுத் திரியை அணை...நான் கதவைத் திறக்கும் பொழுது வெளிச்சம் என்மேல்

பட்டுவிடக் கூடாதல்லவா! என்ன செய்தாலும் சரி; பலகணி அருகில் நில்லாதே... என்னைப் பார்த்துவிட்டால் சுடாமல் விட மாட்டார்கள்.

இரெய்னு: அவனருகில் நெருங்கி, (அவனை விடாமல்) எப்படியும் பார்த்து விடுவார்கள்... நிலவெரிக்கின்றது. எப்படித் தான் இப்படி ஏனோ தானோவென்று நடந்து கொள்ளுகிறீரோ... உண்மையைச் சொல்லும் நான் உம்மைக் காப்பாற்ற வேண்டும் என்று நீர் விரும்புகிறீர்... இல்லையா?

அவன்: உண்மையாகவே நான் தொல்லை கொடுக்க விரும்பவில்லை. (அவள் பொறுமை யிழந்து, அவனைப் பற்றி உலுக்குகின்றாள்) நான் ஏனோதானோ என்று இல்லை, பெரு மாட்டி... உறுதியாக இல்லை... ஆனால்... என்ன செய்வது?

இரெய்னு: அந்தப் பலகணியைவிட்டு இந்தப்புறம் வாரும் ... (அவனைப் பிடித்து இழுத்து அறை நடுவில் விடுகின்றாள். அவள் அவனை விட்டவுடனே, அவன் மீண்டும் பலகணியை நோக்கித் திரும்புகின்றான். அவனைப் பிடித்துத் தன்னை நோக் கித் திருப்பி) அருள் கூர்ந்து! அசைவற்று நிற்கவைத்துக் கூறு கிறாள்: (அவன் சிறக்க நிலையில் நிற்கின்றான். மீண்டும் களைப்பு அவனைப் பற்றிக் கொள்கின்றது. அவனை விட்டுவிட்டு, காப் பாணையோடு பேசுகின்றாள்.) எங்கள் விருந்தோம்பும் பண்பினை நீர் நம்பும்... நீர் இருப்பது யார் வீடு என்று உமக்கு இன்னும் தெரியாது போலும் நான் பெட்காஃப் குடும்பத்தினளாக்கும்?

அவன்: ...என்ன? என்ன குடும்பம்? கொஞ்சம் விளங்கச் சொல்லு?

இரெய்னு: (சிறிது சினத்துடன்)...என்னவா... இந்த நக ரிலேயே பெரிய செல்வமும் புகழ் பெற்றவருமாகிய பெட்காஃப் குடும்பத்தைச் சேர்ந்தவள் நான் என்று சொல்கிறேன்.

அவன்: ... ஆமாம்... சரிதான்... சரிதான்... மன்னிக்க வேண்டும்... ஓ... பெட்காஃப் குடும்பம்,... சரி சரி... இதைக் கூட மறந்துவிட்டேனே... முட்டாள் நான்!

இரெய்னு: இதற்குமுன் இந்தக் குடும்பத்தைப் பற்றி நீர் கேள்விப்பட்டே இருக்கமாட்டீர். இஃது உமக்கு நன்றாகத் தெரியும். அப்படியிருந்தும் ஏன் தெரிந்ததுபோல் பாசாங்கு செய்கிறீர்?...

அவன்: மன்னித்து விடு... எனக்கு எதையும் எண்ண முடியவில்லை; ஒரே களைப்பு... நீ பேச்சை மாற்றியது என்னைக் குழப்பிவிட்டது .. திட்டாதே ..

இரெய்னா: மறந்துவிட்டேன் ... திட்டினால் அழுதுவிடப் போகிறீர்... (அவன் சரிஎன்பதுபோல் தலையை அசைக்கின்றான் அவள் உதட்டைப் பிதுக்குகின்றாள். மீண்டும் பெரியவள்போல் தொடர்கின்றாள்.) பட்டாளத்தில் உள்ள பல்கேரியர்களுள் என் தந்தையார் தாம் தலைமையான இடம் பெற்றுள்ளார். அவர் ஒரு ...(பெருமையோடு) படையாள்நர் (Major)...

அவன்: (அது கேட்டு வியப்பதுபோல் பாசாங்குடன்) ஒரு படையாள்நரா! மகிழ்ச்சி! மகிழ்ச்சி! ஆமாம்!

இரெய்னா: தட்டொட்டிக்குத் தூம்பு வழியாக ஏறித்தான் வரவேண்டும் என்று நீர் நினைத்தது உம் அறியாமையைக்காட்டு கின்றது. எங்கள் வீட்டில் மட்டும்தான் இரண்டு வரிசைப் பல கணிகள் உண்டு. வீட்டுக்குள்ளே ஏறி இறங்குவதற்குப் படிக் கட்டுகள் இருக்கின்றனவாக்கும்!

அவன்: படிக்கட்டுகளா! ஆகா! நீங்கள் மிகவும் நாகரிக மான செல்வ வாழ்க்கை நடத்துகிறீர்கள்!

இரெய்னா: நூல் நிலையம் என்றால் என்ன என்று தெரியுமா உமக்கு?

அவன்: நூல் நிலையமா...அதாவது பொத்தகங்கள் நிறைந்த அறையா?...

இரெய்னா: ஆமாம்... எங்கள் வீட்டில் இருக்கிறது! இந்த பல்கேரியாவிலேயே எங்கள் வீட்டில் மட்டும்தான் இருக்கிறது.

அவன்: அப்படியா! அடடா!...அடடா! அதைப் பார்க்க லாமா நான்?

இரெய்னா: (வருவித்துக்கொண்ட பெருமித உணர்வுடன்) நான் ஏன் இதையெல்லாம் உமக்குச் சொல்கிறேன் தெரியுமா? நாங்களெல்லாரும் நாட்டுப்புற ஆட்களல்லர், உம்மைக் கண்ட வுடனே பிடித்து அடித்துக் கொல்வதற்கு... நாங்கள் ஒவ்வொரு முறையும் இசை நாடகங்கள் (Opera) நடக்கும் பொழுது புகாரத்துக்(Bucharest)குப் போவதுண்டு... நான் வியன்னாவி லேயே ஒரு மாதம் தங்கியிருக்கிறேன்.

அவன்: எனக்குத் தெரியாதா, உன்னைப் பார்த்தவுடனே தெரிந்து கொண்டேனே. நீ உலகமறிந்தவள் என்று.

இரெய்னா: எரணானி (Ernani) இசை நாடகத்தை நீர் பார்த்திருக்கிறீரா?

அவன்: ...சிவப்புச் சட்டை மாட்டிக்கொண்டு பிசாசு... வந்து பேசுகிறதே, ... போர் மறவர்களெல்லாரும் சேர்ந்து பாட்டுப் பாடுகிறார்களே... அதுவா?...

இரெய்னு: (வெறுப்புடன்) ...அய்ய!

அவன்: (களைப்பால் எழுந்த பெருமூச்சை அடக்கிக் கொண்டு) இல்லையா? அப்படியானுல் அதைநான் பார்த்ததில்லை.

இரெய்னு: அந்த நாடகத்தில் எரனுனி என்பவன் இது போல்தான் தப்பி ஓடி அவனுடைய பகைவன் கோட்டையி லேயே மாட்டிக் கொள்கிருன்... ஆனுலும் அக் கோட்டைக் குரியவர் அவனைப் பிடித்துக் கொடுக்க மறுக்கிருர்... தன் வீட்டு விருந்தினனுகி விட்டானல்லவா!—ஒரு வேளை இந்தக் காட்சி உமக்கு நினைவிருக்குமோ என்றுதான் கேட்டேன்.

அவன்: (உறக்கக் கலக்கம் சிறிது நீங்கி) ...... ஓஃகோ அதைப் பின்பற்றித்தான்... நீயும்...

இரெய்னு: (பெருமிதத்துடன்) அதெல்லாம் இல்லை. எனக்கும் அம்மாவுக்கும் இதெல்லாம் நன்ருகத் தெரியும்...... யாரும் சொல்ல வேண்டியதில்லை. நீர் என்னை அச்சுறுத்தியது போல, அச்சுறுத்தாமல் எங்களிடம் அடைக்கலம் கேட்டிருந் தாலே போதும். உம்மை உம் சொந்த வீட்டில் இருப்பதுபோல் காப்பாய் வைத்திருப்போம்.

அவன்: அப்படியா!

இரெய்னு: (வெறுப்புடன், அப்பால் திரும்பி)...சேச்சே உமக்கு என்ன சொன்னுலும் நம்பிக்கையில்லையே...

அவன்: சினம் கொள்ளாதே... ஒரு வேளை ஏதாவது தவறு நடந்துவிட்டால்? நான் மாட்டிக்கொள்ள வேண்டியிருக்கு மல்லவா? என் தந்தை விருந்தோம்பும் பண்பில் தலை சிறந்தவர் தாம்... ஆறு உணவு விடுதிகள் நடத்துகிருர்... அதற்காக அவரை நம்பிவிட முடியுமா?... அது சரி,... உன் தந்தை எப் படிப்பட்டவர்?

இரெய்னு: அவர் இப்பொழுது தாயகத்துக்காக சிலிவி நித்துசாவில் போரிட்டுக் கொண்டிருக்கின்ருர்... உம் பாதுகாப் புக்கு நான் உறுதி கூறுகிறேன். இதோ கையடித்து வேண்டு மானுலும் தருகிறேன்... போதுமா? (கையை நீட்டுகின்ருள்)

அவன்: (தயக்கத்துடன் தன் கையை நோக்கிக் கொண்டே)...... என் கையை நீ தொடவேண்டா அம்மா...... முதலில் நான் குளிக்க வேண்டும்...

இரெய்னு: (உணர்வுடன்)... நீர் ஒரு பெருமகன் என்று தெரிந்துகொண்டேன்...

அவன்: (புரியாமல்)... ஊம்?

இரெய்ளு: நான் வியப்படைந்து விட்டேனே என்று நினைத்துவிடாதீர். உண்மையில் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பல்கேரியர்கள்—அதாவது எங்களைப் போன்றவர்கள் பெரும்பாலும் நாள்தோறும் கைகழுவி விடுவோம்... அதனால்தான், நீர் சொன்னதை நான் மதித்தேன்... போகட்டும்... நீர் என்னுடன் கை குலுக்கலாம். (கையை நீட்டுகின்றாள்)

அவன்: (தொடாமல், தன் கைகளைப் பின்புறமாகக் கட்டிக்கொண்டு அவள் கையை மதிப்புடன் முத்தமிடுகின்றான்) நன்றி; இப்பொழுதுதான் என் அச்சம் தீர்ந்தது... சரி, இப்பொழுதுபோய் உன்அம்மாவிடம் சொல்லிவிட்டு வந்துவிடேன்; ... தேவையில்லாமல் நான் இங்கே கமுக்கமாய் உட்கார்ந்திருப்பது தப்பு.

இரெய்ளு: நான் திரும்பி வருமட்டும் பேசாமல், அசையாமல் உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டும். தெரிகிறதா?

அவன்: ஓ! (இருக்கையில் அமர்கிறான்)

இரெய்ளு படுக்கையருகிற்சென்று மேலாடையை அணிந்து கொள்கின்றாள். அவன் கண்கள் மூடுகின்றன. அவள் கதவருகில் செல்கிறாள்...... அவனைத் திரும்பிப் பார்த்தால், அவன் உறங்கி வழியத் தொடங்குகிறான்.

இரெய்ளு; (கதவருகில் நின்று)...உறங்கக்கூடாது; தெரிகிறதா? (அவன் ஏதோ முணுமுணுக்கிறான்; அவள் அவன் அருகில் ஓடிச்சென்று அவனை உலுக்குகிறாள்.) காதில் விழுகிறதா? எழுந்திரும்... உறங்குகிறீரே...!

அவன்: ஊம்... உறங்குகிறேனு...இல்லையே... இல்லவே இல்லை... ஏதோ எண்ணிக் கொண்டிருந்தேன்... வேறு ஒன்றுமில்லை... நான் விழித்துக் கொண்டுதான் இருக்கிறேன்...

இரெய்ளு: (கடுமையாக) நான் வருமட்டும் எழுந்துநின்று கொண்டிரும்... (அவன் தயக்கத்தோடு எழுகின்றான்...) வருமட்டும் தெரிகிறதா?

அவன்: (தள்ளாடிக்கொண்டே) ஓ... கட்டாயமாக...... என்னை நம்பு ..

(அவள் ஐயத்தோடு அவனை நோக்குகின்றாள். அவன் களைப்போடு புன்னகை புரிகிறான்... தயங்கித் தயங்கியே கதவருகில் செல்கின்றாள். மீண்டும் திரும்பிப் பார்க்க, அவன் கொட்டாவி விடுவதை அடக்கிக் கொள்கின்றான்... அவள் போகின்றாள்)

– தொடரும்

அறிவு, பகுத்தறிவு, மெய்யறிவு

- மெய்ம்மைப்பித்தன் -

முன்னுரை (தொடர்ச்சி)

அற நூற்கள் எனப்படுபவை எவை? அவற்றைக் கற்க வேண்டுவதன் தேவை நமக்கு ஏன் வந்தது? கல்வியறிவும் ஒழுகலாறும் இல்லாத மாந்தர் அந் நூற்களின் கருத்துகளை எவ்வாறு அறிந்து கொள்கின்றனர்? அவர்கள் அவற்றை அறிந்து கொள்கின்ற வாய்ப்பையே இழந்து போவாரெனில், அந்நூல்கள் சாற்றும் அற வாழ்க்கை என்பதே அவர்கள்பால் இல்லாமற் போய்விடுமா என்ன? அவ்வாறு போய்விடும் எனின் அவ்வற வாழ்வு எவரால் எவர் பொருட்டு அமைத்துக் கொடுக்கப்பெற்றது? தீங்கு செய்வான் ஒருவனுக்கும், அறம் பிறழ்வான் ஒருவனுக்கும் காப்பாக நின்று அற நூற்களின் கருத்துகளை உணர்த்திக் கொண்டிருப்பது யார்? அற நூற்கள் சட்டங்களாகுமா? சட்டங்களும் அறநூற்களும் வேறுபட்டவையெனின் அவ்வாறு எதிரெதிராக அமைந்த இரண்டு அமைப்புகளின் தேவை நமக்கு ஏன்? சட்டம் ஏன் அறநூற்களுக்குக் கட்டுப்பட்டு நடத்தப்பெறவில்லை? அஃது அற நூற்களின் கருத்துக்கொப்பவே அமைக்கப் பெற்றதெனின், அச் சட்டங்கள் நாட்டுக்கு நாடு, மக்களுக்கு மக்கள், இனத்துக்கு இனம் வேறுபடுவானேன்? அக்கால் அறமும் மாறுபடுவதாகாதே? ஆம் அறமும் ஒரு சிறிது மாறுபாடுடையதே எனின் அவ்வற நிலைக்குச் சான்று என்ன? எந்த நாட்டு அறநூல் எந்த நாட்டு அற நூலினும் உயர்வுடையது, அல்லது தாழ்வுடையது என்று எவர் நடுநிலை நின்று கூறுவது? அவ்வாறு பலர் நடுநின்று கூற முன்வரினும் அக் கூற்று வேறு பலர்க்கு உடன்பாடில்லாமற் போவதன் கருத்து என்னை? மாறுபாடுடைய அறங்களாகக் கூறப்பெறுபவை ஒருபாலிருக்க மாறுபாட்டிற்கே இடமில்லாதனவாகக் கருதப்பெறும் ஒரு சில அறங்கள் எல்லா மக்களினத்துக்கும் பொதுவாக நின்று இயங்குவதில் உள்ள உண்மை என்ன?—என்பனபற்றியெல்லாம் படிப்படியாக இக் கட்டுரைத் தொடரில் ஆய இருக்கின்றேன்.

வல்லவர்களால் வரையறுக்கப்படுவதே சட்டமெனின் அச் சட்டங்களினின்றும் தெள்ளி எடுக்கப்பெற்ற மாறுபடா உண்மைகளையே-ஒழுகலாறுகளையே ஒருவாறு அறங்கள் எனக்கூறலாம். மாந்தப் பிறப்பிற்கும் அதன் இறப்பிற்கும் இடை அமைந்த வாழ்வில் அதற்கு நற்றுணையாக நிற்பது அறம். இவ்வறமும் வலிந்தவர்களால் வரையறுக்கப்படுபவையே. வலிமை என்பது

காலத்தாலும், இடத்தாலும், வினையாலும் மாறுபடுவனவே இவ்வாறு காலத்தானும், இடத்தானும், வினையானும் மாறுபடும் தன்மையவாக அமைந்த சட்டங்களையும், அச் சட்டங்களின்று தேர்ந்து கைக்கொள்ளப்பெறும் அறமுறைகளையும்கூட காலமும் இடமும் வினையும் மாற்றியமைக்கின்றன—என்று உணர்க. ஆனால் இம் மூவகை கரணப் பொருள்களாலும் மாற்றப் பெருதனவாய் நின்று, என்றும் மக்கள் இனத்துக்கே அன்றி உலக உயிர்கள் அனைத்திற்கும் நன்மை பயப்பவாகிய அமைப்பு முறைகள் சில உள. அவையே எல்லா உயிர்களின் நல்லியக்கங்களுக்கும் பொதுவாக நிலைநின்று அறமுறைகளாகச் சுடர் விட்டு வழிகாட்டிக் கொண்டிருக்கின்றன. இவற்றின் விரிவுகளெல்லாம் நூலுள் விளக்கப்பெறும் அதன்முன் ஒரு சில கூறுவேன். 'கல்வியறிவு பெறுதல் வேண்டும்' என்பதோர் அறமெனின் அதனைப் பெறத் தடையாக நிற்கும் சிற்சில மாந்த அமைப்புகள் அறத்திற்கு மாறுபட்டனவாக அமைகின்றன. ஆனால் அவையும் ஒரு காலத்தே அறமாகக் கருதப்பட்டனவேயாகும்.

நம்மிடையுள்ள 'மநு நூல்' ஒரு காலத்தே பெரிய அறநூலாகத் திகழ்ந்தது. அதில் வருண முறைகளும் குல முறைகளும் வலியுறுத்தப் பெற்று, அவ்வவ் வினங்களுக்கான இயக்கங்களும் கல்வி முறைகளும் வரையறுக்கப் பெற்றுள்ளன. இனக்கலப்பு ஏற்படாமல் இருப்பதற்குக் காப்பாக சில முறைகள் அதில் வலியுறுத்தப் பெறுகின்றன. நான்காம் பிரிவினனாகிய ஒருவன் கல்வி கற்றலை நினைத்தலும், வாயால் கற்றவற்றை ஓதுதலும் கூடாவென்று எச்சரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு செய்யின் அவன்றன் செவிகளில்காய்ந்து நீரோடிய ஈயத்தை ஊற்றி ஊரைவிட்டு விரட்டல் வேண்டும் என்று கூறப் பெற்றுள்ளது. மேற்குலத்துள் பத்தே ஆண்டுகள் முதிரப் பெற்ற சிறுவன், ஒருவன் அதற்கடுத்த குலத்துள்ள நூறுஆண்டுகள் முதிரப்பெற்ற முதியோனுக்கு ஈடானவன் என்று வலியுறுத்தப் பெற்றுள்ளது. மேற்குலத்தான் பார்வையிலும் கீழ்க் குலத்தான் ஒருவன் படாதொழிதல் வேண்டுமென்றும், அவன் அமர்கின்ற இடத்தினும் இவன் அறியாமலும் அமர்தல் கூடாதென்றும் கடுந்தண்டங்களால் வரையறுக்கப் பெற்றுள்ளன.இத்தகு முறைகளை யெல்லாம் அற முறைகள் என்று இக்கால் மக்களினம் ஏற்கா எனினும் அந்நூல் போன்ற ஓரிரண்டு முறை நூற்களின் அமைப்புகளே, இன்றைய சட்ட அமைப்பிலும் கையாளப் பெற்று வருகின்றன. இப் பிறழ்ச்சிகளையெல்லாம் நாம் அறமென்று கொள்வோமாகில் அவ்வற வாழ்க்கை நாம் எதிர்நோக்கி யிருக்கின்ற அற வாழ்வினும் மிக மிகக் கீழானதே ஆகும். என்றும் பிறழ்ச்சியற்றதும், எவர்க்கும் பொருந்தி வருவதும், எவ்விடத்தும் ஊடுருவும் மெய்ம்மை சான்றதுமான அறங்கள் இன்னும் கனியவில்லை

என்றே கூறலாம். பூவாகவும், பிஞ்சாகவும், காயாகவும் இருக்கின்ற அறங்களே இன்றைய அறநூல்களாக நம்முன் வைக்கப் பெற்றிருக்கின்றன.

சமயங்களும், அறிவியல்களும் போலவே அற அமைப்புகளும் போலித்தனமான நிலைக்கே இன்று வளர்ந்துள்ளன. ஒரு பொறியோ, பொருளோ செய்யும் வினைவல்லான் ஒருவன் எவ்வாறு அவன் செய்யவிருக்கும் பொருளுக்குப் போலியாக ஒன்றை முதற்கண் செய்துகொள்வானோ அவ்வாறே சமயமும், அறிவியல்களும், அற அமைப்புகளும் நாம் அடையப்போகும் உண்மையானவற்றின் போலி உருவங்களாகவே இன்று நிலவி வருகின்றன. இவற்றில் காலமும், இடமும், வினையும் கருதி மக்களினம் செய்துகொள்ள வேண்டிய திருத்தங்கள் பல உள. அத் திருத்தங்களைச் செய்து அவற்றை உண்மை உருவினவாக ஆக்கு முன்னரே, அவற்றின் முழு உருவத்தையும் நாம் கண்டு கொண்டதுபோலப் பிதற்றுவதும்,கடைப்பிடிப்பதும், பேதைமையினும் பேதைமையாகும். பின் இவற்றில் ஈடுபட்டாலன்றி அத் திருத்தங்கள் எய்தப் பெருவே எனின், ஈடுபடுதலை எவரும் குற்றமாகக் கருதமாட்டார்கள் என்பதையும், ஈடுபட்டவுடனேயே உவை திருத்தங்கள் அடைந்து விடமாட்டா என்பதையும், அந்நிலைக்குமுன் அத் திருத்தங்கள் எய்தப் பெற்றன போலும் முழுமை காட்டிப் பேசுதலும், அவையே உண்மையென்று மக்களைக் கடைப்பிடிக்கச் செய்வதுமே குற்றம் என்பதையும் அப் போலியறிவினர் உணர்ந்து கொள்ளல் வேண்டும். குரங்கு முக அமைப்பினின்று இக்கால் மாந்தர்க்கிருக்கும் திருந்திய முகவடிவம் உண்டாதற்கு எவ்வளவு காலம் செல்லல் வேண்டியிருந்த தென்பதையும், இனிப் பருப்பொருளாகிய முக வடிவம் திருந்துதற்கே இத்துணைக் காலம் செல்லல் வேண்டியிருப்பின் நுண்பொருள்களாய சமயமும், அறிவியலும், அறமும் திருந்து வடிவம் பெறுதற்கு எத்துணைக் காலம் செல்லல் வேண்டும் என்பதையும் உணர்ந்தார் ஓர்ந்து கொள்க.

முழுமையாக-மலராத மொக்குகளை வலிந்து மலர்த்துவிப்பினும் அவ் விளையா இதழ்களுள் நாற்றமெழாமல் இருப்பது போலும், முழுமையாகக் கனிந்து வராத பிஞ்சுகளையும், வடுக்களையும் வலிந்து கனிவிப்பினும், அம் முதிரா சதைத்திரட்சியுள் மணமும் சுவையும் பயனும் விளையாமலிருத்தல் போலும், முழுமையடையாத சமயங்களையும் அறிவியல் உண்மைகளையும் அற முறைகளையும் அவரவர் கண்டுகொண்ட அளவிலேயே உண்மையான வடிவங்களாகக் கருதி இறுமாந்திருக்கும் இவர்தம் அறியாமையை என்னென்பது? இனி, நாம் இக்கால் உணர்ந்திருக்கும் இவ்வளவே உண்மையன்று என்றும், இதனினும் ஒரு பேரளவை உண்டு என்றும் நாம் எவ்வாறு அறிந்துகொள்வதோ எனின் ஈண்டு அதனையும் விளக்குவேன்.

நன்முக மலர்ந்த மல்லிகை மலரை நுகர்வான் எவனும் அம் மலர் தீநாற்றம் வீசுகின்றது என்று கூற முற்படாமையும், நன்முகக் கனிந்த பலாக் கனியை உண்ணுவான் எவனும் அக் கனி கசக்கின்றது என்றுகூற முனையாமையையும் நாம் கண்டுள்ளமா அல்லமா? இவ்வேது நோக்கிப் பார்க்குங்கால், இக்கால் நமக்கென அமைந்து கிடக்கும் சமயங்களும், அறிவியல் உண்மைகளும், அறமுறைகளும் மாந்த இனப் பிறப்பிலுள்ள எல்லார்க்கும் ஒப்புதலையா யிருத்தல் வேண்டுமன்றே? அவ்வாறின்றி நம்மில் சமயப்பொருதல்களும், அறிவியல்வேறுபாடுகளும், அறமுறைப் போராட்டங்களும் நடப்பதன் உண்மைப் பொருள் என்ன? சமய குரவர்தாம் கூறிவருவதையே கூருது மாறி மாறி உரைப்பதன் உண்மையும், அறிவியல் நூல்வல்லார் தாம் கண்டு பிடித்த உண்மைகளே சாலுமென்றமையாமல் மேலும் மேலும் அவரவர் போக்குகளில் வலிந்துஈடுபடுவதன் மெய்ம்மையும், அறநூற்கள் காலத்திற்குக் காலம் அழித்தெழுதப்பெறும் போக்கினையும் நாம் ஆழ்ந்து பார்க்கின், நாம் எய்தப்போகும் உண்மை இவ்வளவில் நிற்பதன்று என்பதும். அதன் முழுமையான வடிவம் இக்கால் நாம் கண்டு கொண்டுள்ள வடிவம் மட்டுமே அன்று என்பதும், அதனை அடையப்போகும் பயனின் அடிமுனையாகவே நாம் இக்கால் நுகர்ந்து வருகின்ற பயனும் உள்ளது என்பதும் நமக்குத் தெள்ளிதின் விளங்கவில்லையா?

நம்மில் எல்லார்க்கும் ஒப்புவதான ஒரு சமயம் என்று தோன்றுகின்றதோ அன்றே நம் சமயப்போராட்டங்கள் ஒழிந்துபோம்; கட்டுப்பாடுகள் அழிந்துபோம்; நம் போலிப் புற ஒழுக்கங்கள் மாய்ந்து போம்; நம் உள்ளங்கள் காரண முழுமை எய்தாமற் போயினும் கரும முழுமை எய்தியிருக்கும். இதுபோலவே நம்மில் எல்லார்க்கும் முடிவுற்றதும், தெளிவுற்றதும், போதுமானதுமான அறிவியல் உண்மைகள் எக்காலத்தே கண்டுபிடிக்கப் பெற்று முடிவுறுகின்றனவோ அக் காலத்தேயே அறிவியல் வல்லுநர் தம் கைகள் ஓய்ந்து போம்; அவர்தம் வலிந்த ஆற்றல் பொருந்திய மூளை அமைவுடையதாகும். அதன் புறக் கரும அறிவடங்கி அகக் கரண அறிவு கால்கோலும்! அக்கால் அவர்தாம் கண்டறியும் உண்மைகளைக் கருவியால் நிலைப்படுத்துவாரல்லர்; கூற்றுகளால் உணர்த்த முற்படுவாரல்லர். அமைதியாகப் பாய்ந்து வரும் உணர்வலைகளால் இவ்வுலகெங்கணும் வாழ்கின்ற மக்கட்கு அவற்றைப் பரப்புவர். தொட்டும் தொடாமலும் நிற்கும் பிற மாந்தர்தம் அகக்கரண அறிவு, அவ்வறிவியலார்தம் வல்லுணர்வால் நன்கு கொளுத்தப் பெற்று ஒளிவிடத் தொடங்கும். நாம் இன்று கொண்டுள்ள, ஆனல் இவற்றினும் வளர்ந்து சிறந்துள்ள அற முறைகளும் அன்று தவறெனக் கொள்ளப்பெற்றுத் திருந்திய வடிவம் பெறும். அக்கால் அறமுறைகள் என்பதன் உண்மைப் பொருளும் உண்மைத் தேவை

யும் எல்லார்க்கும் எந்நிலையிலும் விளங்குவனவாக இருக்கும். அவ்விரிந்து புடைதிரண்ட நிலைக்குநாம் அடியெடுத்து வைத்துக் கொண்டுள்ளோம். தவழ்ந்து நெளிந்து கொண்டிருக்கும் நாம் பறப்பதாக எண்ணிக்கொண்டு உண்மைகளைத் தாறுமாருக உணர்கின்றோம். கருத்துகளைத் தாறுமாருகப் பிதற்றுகின்றோம். நாம் அறிந்த அவ்வளவே உண்மையின் முழு வடிவம் என்ப தாக எண்ணிப் பெருமிதம் அடைகின்றோம்.

ஆனாலும் அத்தகைய எண்ணமும், பிதற்றலும், பெருமித மும் நமக்கு இருக்க வேண்டுவனவே! அவை தாம் நம் உள் ளுணர்வுகளைக் கட்டி யிழுத்துக் கொண்டு போகும் வலிந்த குதிரைகளாக நம்மை முன்னேற்ற வழியில் கொண்டு செல்கின் றன. அக் குதிரைகளின் விரைவு நம்மை நிலைதடுமாறச் செய்யா மல் நம்மை நம் வழியில் நேராகப் போய்க்கொண்டிருக்கச்செய்ய வேண்டும். அல்லாக்கால் நம் போக்குத் திசைமாறும்; காலத் தாழ்வு ஏற்படும்; நமக்கு ஊறுகள் பல நேரும்; நம் செலவே நிலை குத்திப் போகும். எவ்வெவ் வகையான மாற்றங்களுக்கு நாம் உட்படுவோம் என்பதையெல்லாம் நாம் ஒருவாறு முன்பே அறிந்திருத்தல் வேண்டும் அல்லாக்கால் நம் போக்கில் ஓர் ஒழுங்கு ஏற்படுவதற்கு வழியில்லை. இத்தகைய போக்குகளைப் பற்றியெல்லாம் ஒருவாறு இந் நூலுள் விளக்க இருக்கின்றேன். அதற்கு அடிப்படையாகத்தான் நான் முன்பே அறிவியல்கள் பற்றியும், சமயங்கள்பற்றியும், அற நூல்கள்பற்றியும் உங்கட்கு ஒரு சில கூறினேன். அவை யாவும் பின்னர் நன்கு விரிவாகக் கூறப்பெறும்.

இதற்குள் நாம் இன்னும் புறப்பட்ட இடத்திலேயே நின்று கொண்டிருப்பதாகச் சிலர் கூறலாம்; கருத்துகளில் தெளிவில்லை என்றும் சிலர்எள்ளலாம்; இக்கட்டுரையினுல் கிடைக்கப்போகும் பயன் ஒன்றுமில்லை என்பதாகச் சிலர் பிதற்றலாம். இவர் தம்மைப்பற்றியும் ஒரு சில கூறி மேற்செல்லுவேன். இங்குரைக் கப் பெற்றுரில் முன்னதாகச் சொல்லப்பட்டவர் பதற்றக்காரர்; இரண்டாவதாகக் கூறப்பெற்றவர் குழப்பக்காரர்; மூன்ருவதாகக் கூறப்பெற்றவர் பசிகாரர். இவர் எல்லார்க்கும் ஒன்றுகூறுவேன். நாம் எடுத்துக்கொண்ட பொருள் எளிதன்று. வலிது; ஆழமா னது; அகற்சி சான்றது; நுண்மையானது. மலையைப் போன்ற வலிவும், கடலைப்போன்ற ஆழமும், விசும்பைப் போன்ற அகற் சியும், ஊசியைப்போன்ற கூர்மையும் உடைய ஒரு மெய்ப் பொருளை நமக்கிருக்கின்ற பருமையான புறக் கருவிகள் வழி உள்நுழைந்து, அகப் புலன்களால் தேடி, அறிவுத் துடுப்பால் துழாவி, உணர்வுக் கைகளால் தடவிப் பார்க்க வேண்டியிருப்ப தால் பதற்றக்காரர் தம் பதற்றத்தை விட்டொழித்தல் வேண்டும்; குழப்பக்காரர் தாம் நின்றுள்ள சூழ்நிலையை மறத்தல் வேண்டும்;

நாங்கள் மட்டும் சொல்லவில்லை...!

இந்தியின் பயன்...!

(இக்கட்டுரை 'தினமணி' எழுதிய 7-10-64-ஆம் நாளைய ஆசிரிய உரையாகும். இடித்திடித்துக் கட்டுரை கூறியும் செவிகொளாது, நெட்டுயிர்ப் போடுள்ள பிணங்களின் பார்வைக்கு...)

நடுவண் அரசுப் பணிகளில் இந்தியின் பயனை முடுக்கி விரைவு படுத்தும் முறையில் நடந்துவரும் செயல்களைப் பொறுத்தமட்டில், மீண்டும் எச்சரிக்கை செய்தாக வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. எச்சரிக்கப்பட வேண்டியவர்கள் இந்தி தாய்மொழியாக இல்லாதவர்கள் மட்டும் அல்லர்; இந்திய அரசு, மாநில அரசுகள், சிறப்பாகத் தென்பகுதி மாநிலங்களின் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநில சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் காலந் தாழாது, சுறு சுறுப்புடன் கூடிய கவனம் செலுத்தியாக வேண்டும். போதிய விழிப்புடன் செயலாற்ருவிடில் இந்தி தாய்மொழியாக அல்லாதவர்களுக்கு முறை பிறழ்ந்த கொடுமை அஞ்சத்தகும் வகையில் வளர்ந்துவிடும். அதைத் தவிர்த்தாக வேண்டியது முதற் கடமை என்பதை உணரவேண்டும்.

பிற மொழியாளரின் எதிர்ப்பையும், அச்சத்தையும், ஐயப்பாடுகளையும் பொருட்படுத்தாமல், தடலடியாகத், தான்தோன்றித்தனமாக இந்தியின் பயனை விரிவாக்கிக்கொண்டே போனால், உறுதியாகத் 'தேசிய ஒருமை'ப்பாட்டு உணர்வு பெரிய அளவில் தாக்கப்பட்டுவிடும். தவிர, இந்தியின் ஆட்சித்துறைப் பணியை இப்பொழுதே விரித்துப பரப்பிக்

(முன் பக்கத் தொடர்ச்சி)

பசிகாரர் நொறுவைத் தீனி தின்று தம் பசியைத் தணித்துக் கொள்ள விரும்பும் விளையாட்டுப் பிள்ளையாக இராமல், விருந்துண்ணப்போகும் பெருமகன்போல் அமைந்திருத்தல்வேண்டும். அவ்வாறு நில்லாவழி நாம் காட்டிக்கொண்டு போகும் வழி முறைகள் அறியாது மயக்கமுற்று, பருத்த எலியொன்றைத் தூக்க முயன்று முயன்று இழிய விடும் காக்கைக் குஞ்சைப்போல் ஏக்கமும், துயரும், ஏமாற்றமும் அவரடைய நேரும். எனவே அன்னவர் தம் ஐயப்பாடுகளை அமைந்திருந்து களைந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளுகின்றேன்.

இனி, நூலுள் புகுமுன் இவ்வுலகப் பொது நிகழ்வுகள் குறித்தும் ஒரு சில கூற வேண்டியிருப்பதால் அவற்றையும் இம் முன்னுரையில் கூறிவிடுகின்றேன். அறிவு அவாவி வருகின்ற உண்மை நாடும் உள்ளங்கள் அவற்றைப்பற்றியும் சிலவற்றை அறிந்து கொள்ளுதல் நலம் பயக்கும்.

(-தொடரும்.)

கொண்டு போகும் முறை நாட்டுமக்களின் நல்லிணக்கத்துக்கு உலை வைப்பதுடன், நல்லாட்சியையும் விரைவில் இயலாததாக்கிவிடும். எப்படிப் பார்த்தாலும், நன்மையை விடத் தீமைதான் அதிகம் விளையு மெனத் தெரிகிறது. எனவே, தேசம் முழுவதையும் அரவணைத்துக் கொண்டு, எல்லா மாநிலங்களுடனும் தீரப் பேசி, அவை ஒருசேரத் தருகின்ற உருப்படியான இசைவின் அடிப்படையில்தான் இப்பணி நடைபெறச் செய்ய வேண்டும்.

இந்தியின் அனைத்திந்திய ஆட்சிப் பணியின் போக்கை அறுதியிட வேண்டியவர்கள் இந்தி பேசாத மாநிலங்கள்தாம் என்று நேரு அறுதியிட்டுக் கூறினர். இந்த வாக்குறுதிப்படி செயலாற்றுவதற்காக எல்லா மாநிலங்களையும் கொண்ட அமைப்பு எதுவும் இதுவரையில் உருவாக வில்லை. அத்தகைய அமைப்பு இந்தியா அனைத்துக்குமாக மட்டுமின்றி மாநிலங்களிலும் உருவாகிப் பணியாற்ற வேண்டும். அவற்றில் எதிர்க் கட்சியினரும், பல்கலைக் கழகத்தினரும், ஆசிரிய நிறுவனங்களால் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ள பொறுப்பானவர்களும் இடம் பெறுவதாக இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் நிலைமை துல்லியமாக மதிப்பிடப்பட்டு எதை எப்படிச் செய்தால் நல்லது, என்ற மனத்தெளிவு எல்லா நிலைகளிலும் ஏற்படும். பிற மாநிலங்கள் ஒழுங்காக, முறைப்படி இந்திக் கொள்கையை உருவாக்குவதில் செல்வாக்குப் பெருத எந்த ஏற்பாட்டையும் மக்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். இந்தி தம்மீது கொடுமையான முறையில் திணிக்கப் படுவதாகத்தான் அவர்கள் கருதுவர்.

இந்தியின் பயன் விரிவு காண்பது; உள்துறைப் பிரிவிலுள்ள இந்தி முடுக்கிகளின் தனிப் பொறுப்பாக இருந்துவரும் நிலைமைக்குக் காலந் தாழாது முடிவு கட்டியாகவேண்டும். இதுவரை இந்தி மாநிலங்களிலும் நடுவண் அரசிலும் இந்தியின் ஆட்சிமொழிப் பணி காரணமாக எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகள், புரிந்த வினைப்பாடுகள் முதலியன பற்றிய செய்திகளை ஓரகமில்லாதவர்களைக் கொண்ட ஒரு நிறுவனம் வழி உசாவி அறிதல் வேண்டும். அந்த நிறுவனத்தின் முடிவுகள் கிடைக்கும்வரை நடுவணரசுப் பணிகளில் இந்தியின் பரப் புதலை நிறுத்தி வைத்தாக வேண்டும். நிறுவனத்தின் ஏற்பாடுகளைப் பாராளுமன்றமும், மாநில சட்ட மன்றங்களும் முடிவெடுத்து, அரசின் ஆட்சிமொழிக் கொள்கைகள் நடைமுறைகளை அறுதியிடுவதற்காக நாம் மேலே கூறியது போன்ற நிறுவனங்களை ஏற்படுத்தி, ஒழுங்காகச் செயலாற்றுவதுதான் முறையான ஏற்பாடாக இருக்கும்.

விற்பனையாளர் தேவை...!

திருச்சி நகர் முழுவதற்கும் தென்மொழி விற்பனை செய்வதற்கான தமிழ்ப் பற்றும், விடாமுயற்சியும், நாநயமும், பொறுப்பும், படி யொன்றுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக்கூடிய தகுதியும் வாய்ந்த விற்பனையாளர் ஒருவர் தேவை. முன்வருவார் உடனே விண்ணப்பிக்க வேண்டுகின்றோம். விற்பனையாளர்க்கு 25 விழுக்காடு கழிவு கொடுக்கப்பெறும். — அமைச்சர்.

தென்மொழி, கடலூர்.

விழிப்பு நிலையில் மூளை அறுவைப் பண்டுவம்.

Awake Through A Brain Operation.

ஆங்கிலத்தில்: Annette Anselmo.

தமிழில்: செம்பியன்.

(அறுவை மருத்துவர் ஒருவரின் (Surgeon) நுண் ஆற்றலையும் பிணியாளி (Patient) ஒருத்தியின் நம்பிக்கையையும் பற்றிய உள்ளத்தைத் தொடும் நிகழ்ச்சி)

['அன்னெட்டு அல்செல்மோ' என்பாள் 1953-ஆம் ஆண்டில் ஒரு புகழ்பெற்ற அமெரிக்க மூளை அறுவை மருத்துவர் 'சோன்சு' (Jhones) என்பாரின் உதவியை நாடிப் பெயர் பெற்ற நரம்பறுவைக் களரி (Neurological Institute) ஒன்றுக்குச் சென்றாள். நான்காம் அகவையிலிருந்தே அவள் முப்பது ஆண்டுகளாக, அடிக்கடி நிகழ்ந்து, பெருந் துன்பத்துக்குள்ளாக்கும் காக்கை வலிப்பு நோயின் தாக்குதலுக் காளாகித் துன்புற்றுழன்றாள். உள்ளூர் அறுவை மருத்துவரிடம் செய்து கொண்ட மூளை அறுவைப் பண்டுவமும்; வலிப்புநோய் தடுப்பு மருந்தும் அவளை மிகக் கடுமையான வலிப்பு நோயினின்றும் விடுவித்தன. ஆயினும், அவள் சிறிய வலிப்பினால், சில நேரங்களில் ஒரு மணியில் 65 முறைக்கு மேலும் ஆட்பட்டிருந்தாள்.

மருத்துவர் 'சோன்சு', அவளுடைய பிணியின் வரலாற்றினாலும், நரம்பைப் பற்றிய ஆய்வுகளினாலும், மூளையின் புதிர்க்கதிர் (X-Ray) பட உதவியாலும், மூளையைச் சார்ந்த மின் வரைவு (Electroence phalographs) விளக்கத்தாலும், அவருடைய முடிவை அறிவித்தார். "ஓர் அறுவைப் பண்டுவம் உனக்குத் துணை செய்யும் என்று நாங்கள் கருதுகின்றோம். ஆனால் முற்றிலும் நலமடைதலைப்பற்றி என்னால் உறுதி யளிக்க வியலாது. நீ, செயலிழக்கும் ஏதத்திற்கும் (Risk) ஆளாகக் கூடும் என்பதையும் உணர்ந்து கொள்" என்று கூறினார். 'அன்னெட் டின்' உடல் நலம் அவளுடைய இடர்துணி முயற்சியின் விலைவாக அமைந்தது. அறுவை நிகழ்ச்சியின் விளக்கமாக அவள் பட்டறிந்த உணர்வுகளின் தொகுப்பே இங்குக் கொடுக்கப் பெற்றுள்ளது.]

அன்று வைகறைப்பொழுதில் மயிர் வினைஞன் ஒருவன் என் அறைக்கு வந்து என்னுடைய தலையை மழித்தான் அஃது ஒரு பெரிய 'பில்லியர்டு' பந்தை ஒத்திருந்தது. என்னுடைய கட்டிற் படுக்கையானது கூடத்திற்குள் கொண்டு செல்லப்பெற்றது. அங்கு என்னுடைய தந்தையும், உடன் பிறந்தாளும் பொங்கி யெழும் அழுகையை அடக்கிக்கொண்டு என்னை முத்தமிட்டனர் "நீங்கள் வருத்தப்பட வேண்டா; நான் நலமுடன் திரும்பு வேன்" என்று அவர்கட்கு ஆறுதல் கூறினேன். என்னுடைய

உணர்வெல்லாம் நான் முப்பது ஆண்டுகளாகக் காக்கை வலிப்புடன் போரிட்டுக் கொண்டிருந்ததின் முடிவின் தொடக்கமாக இந்நாள் அமைந்திருந்தது. 'எக்சு' கதிராய்வு அறையில் மருத்துவர் ஒருவர் "இன்று உன் வாழ்வில் ஒரு சிறந்த நாள்" என்ற, புன்முறுவல் இழைந்தோடிய சொற்களைக் கூறினார் அவர் ஒரு கையில் ஒவ்வொன்றும் இரண்டுமுழ நீளமுள்ள இரண்டு இளகுகம்பியும் மற்றொரு கையில் ஒரு குவளைத்தண்ணீரையும் வைத்திருந்தார். "உன்னுடைய ஒவ்வொரு மூக்குத் துளையின் வழியேயும் இக் கம்பிகளை உட்செலுத்தப் போகின்றேன். நான் கூறும்பொழுது தண்ணீரைக் குடித்துக் கொண்டே அவற்றை விழுங்கவேண்டும்" என்று கூறினார் அக் கம்பிகள் இரண்டும் என்னுடைய வயிற்றினுள் செல்லல் வேண்டும். ஒவ்வொரு முறையும், அந்த மருத்துவர் விழுங்கு என்று கூறும் பொழுதெல்லாம் சில விரற்கடை நீளம் உட்சென்று மறையும். ஒன்றரை அடி நீளமுள்ள கம்பிகள் வெளியில் தெரிந்தன பிறகு அம் மருத்துவர் அக் கம்பிகள் இரண்டும் சரியான இடத்தில் அமைந்துள்ளனவா என்று அறிய புதிர்க் கதிர்ப்படம் எடுத்தார். மும்முறையும் அக் கம்பிகள் சரியான இடத்தில் அமையாமல் "மீண்டும் நாம் தொடங்குவோம்" என்று கூறி, அப் பணியினைத் தொடர்ந்து முடித்தார். கடைசியில் அக் கம்பிகள் சரியான இடத்தில் அமைந்தன. இரு முனைகளையும் என்னுடைய மார்பில் கட்டினார். அம் மின்னோட்டக் கம்பிகள் (Electrodes) வயிற்றினுடைய இயக்கத்தையும், நான் கடுமையான தாக்குதலுக்கு அடிக்கடி ஆட்படும் பொழுது ஏற்படும் உணர்வுகளையும், அவர்கள் அறிந்து கொள்ளத் துணை செய்யும் என்று அவர் விளக்கிக் கூறினார். எவ்விடத்திலிருந்து கடும் தாக்குதலையுடைய காக்கை வலிப்பு நோய் உற்பத்தியாகின்றதோ அவ்விடத்தில் மூளையின் மின் உணர்வுத் தூண்டுதல் முடிவுறும்பொழுது வயிற்றின் உணர்வு உண்டாக்கப் பெறுகின்றது.

இப்பொழுது என்னுடைய கட்டிற்படுக்கை உணர் விழக்கச் செய்யும்(Anaesthesia)அறைக்குள் கொண்டு செல்லப்பெற்றது. அறுவை நிகழ்ச்சி நான் நன்கு உணர்ந்து கொள்வதற்காக விழிப்பு நிலையிலேயே நடைபெறும் என்பது எனக்குத் தெரியும். ஏனெனில் இந்நிலை எனக்கேற்படும் பின் விளைவுகளைப் பற்றி மருத்துவர் 'சோன்சு' என்னைக் கேட்டறிந்து மேற்செல்ல அவர்க்குத் துணையாயிருக்கும். உணர்விழக்கச் செய்வார் (Anaesthetist) என்னுடை முகமும், தலையின் மேற்பகுதியும், உணர்விழந்து மரத்துப் போக ஊசிகள் ஏற்றவேண்டும். அவர் என்னுடைய வாயைத் திறக்கச் சொல்லித் தம்முடைய கட்டை விரலினால் கீழ் அல்லது மூட்டு போன்ற ஓர் எலும்பை கீழ்மேல் தாடை எலும்புகட்கிடையில் அமைத்தார். அதனுள் அவர் ஒரு ஊசியைச் செலுத்தினார். அது மேற்புறம் மிக்கத் தொலைவு

சென்று, மண்டையோட்டின் அடிப் பகுதியை அடைந்ததை உணர்ந்தேன் பழுக்கக் காய்ச்சிய கம்பியை நுழைப்பது போன்ற துன்ப உணர்வினைப் பெற்றேன். ஆனால் இவ்வூசி மருந்துகள்தாம், என்னுடைய தலையின் மேற் பகுதியையும் உணர்விழக்கச் செய்து மரத்துப்போகச் செய்யும் கருவிகளாக இருந்தன. ஒவ்வொரு முறையும் அவர் வேறோர் ஊசியைப் பொறுக்கி எடுத்தார் நான் மிகுந்திருக்கும் ஊசிக் குவியலைப் பார்த்தேன். அது முன்னையினும் குறைவதைவிட மிகுந்திருப்ப தாகவே எனக்குத் தோன்றியது.

மருத்துவர் 'சோன்சு' அறைக்குள் நுழைந்தார். என் தலை யின் மேற்புறத்தில் அளவுக்கோடுகள் வரைவதை உணர்ந்தேன் அவர் உடனிருந்த மற்ற மருத்துவர்களிடம் ''இதுதான் நான் திறக்கப் போகும் மண்டையோடு'' என்று கூற, அவர்களில் ஒருவர் ''ஆம் ஒரு வண்ணாத்திப் பூச்சியின் முழு வடிவத்தை ஒத்துள்ள ஓடு'' என்று கூறினர். உணர்விழக்கச் செய்வார் ''இவள், அறுவை நிகழ்த்தும் அறைக்குச் செல்ல அணியமா யுள்ளாள்'' என்று கூறினர். ''நான் அச்சங் கொள்ளவில்லை. ஆனால் என்னுடைய மண்டை யோட்டைத் திறக்கும் பொழுது உங்களில் ஒருவர் நகைச்சுவை அளிக்குமாறு என்னிடம் சில சொற்களைக் கூறுவீர்களா?'' என்று கேட்டுக் கொண்டேன். ஏனெனில், அந்நேரத்தில் நான் எதிர்பார்த்த மிகக் கடுமையான வலியை மறைப்பதற்கு அவை துணை செய்யும் என்று எண்ணி னேன்.

கூடத்திற்கு வெளியேவுள்ள, அறுவை நிகழ்த்தும் அறை யின் கதவுகள், என்னுடைய கட்டிற் படுக்கையை உள்ளே கொண்டு செல்வதற்குத் திறக்கப்பெற்றன. சரியான இடத்தை அடைந்தேன். உள்ளே இருந்த சுவர் மணிப் பொறியினால் 8–05 என நேரத்தை அறிந்தேன். கண்ணாடியால் மூடப்பெற்ற காட்சிக் கூடத்தில் (Gallery) மருத்துவர்களும், செவிலிகளும் (Nurses), மாணவர்களும், உற்று நோக்கி யறிந்து கொள்வதற் காகக் காத்திருப்பதை அறிய முடிந்தது. அறுவை நிகழ்ச்சியில் பங்கு கொண்ட, அம் மருத்துவர் அறுவரில் ஒருவர்மேனி முழு தும் சிறப்புக் கண்ணாடிகள் அணிந்திருந்தார். அறை கண் கூசச் செய்கின்ற மேலே தொங்குகின்ற விளக்குக்குப் பதில் புறவூதாக் கதிரொளி அமைப்பைப் பெற்றிருந்தது. ஒரு மருத் துவர் ''நாம் பகலுணவு கொள்ளும் நேரத்தில் இவ்வறையை விட்டு வெளியேறினால் நற்பேறு பெற்றவராவோம்'' என்று கூறினார். என் தலைக்குப் பின்புறமிருந்து மருத்துவர் ஒருவர் ''உன்னுடைய தலையில் கறையத்தைத் (Iodine) தடவப் போகின்றேன்'' என்று கூறினர். உணர்விழக்கச் செய்வார், என்னை மேல்நோக்கிப் படுத்துத் தலையை இடப்புறம்திருப்புமாறு

கூறினர். தலையானது சரியான இடத்தில் அமைய, தலையைச் சுற்றிலும் துண்டுத் துணியை வைத்தனர். அஃது அசையா வண்ணமும், நலக் குறைவு ஏற்படா வண்ணமும் அமைக்கப் பெற்றது உண்மையாகவே ஒரு சில மணித்துளி கட்குப் பின்னர் இவற்றை நான் உணரவேயில்லை

இப்பொழுது மருத்துவர் 'சோன்சு' என்னுடைய தலையருகில் நின்று கொண்டிருந்தார். சிறு தொட்டி (Tray) நிறைய அறுவைக் கருவிகள் அவர்க்குப் பக்கலில் வைக்கப் பெற்றிருந்தன. அவர், கால் அல்லது கையால் இயக்கக் கூடிய கட்டுப்பாட்டு அமைப்பினால் என்னுடைய தலையைச் சற்று உயர்த்தி சரியான நிலையில் அமைத்தார். நான் அசையாமல் இருக்க வேண்டியது என்னுடைய பொறுப்பு. என்னைக் கீழேவிழாமல் காப்பதற்காகப் பொறுத்தப் பெற்றிருந்த அமைப்பைத் தவிர, மணல் பைகளோ, தோல் பட்டைகளோ எனக்கு ஊறு செய்ய வில்லை. அவர், ''நலமாக இருக்கின்றதா'' எனக் கேட்டார். நான், ''ஆம்; ஆனால் மிகக்குளிரால் உறைந்து போகின்றேன்'' என்று கூறினேன். ஒரு கம்பளி என்னைச்சுற்றி வைக்கப்பெற்றிருந்தது. அதனுடைய அழுத்தமானதிணிப்பே என்னைக்குளிர்மை உணர்வைப் பெறச்செய்தது. மருத்துவர் 'சோன்சு', ''அன்னெட்! உன்னுடைய மண்டையோட்டின் அடித்தளத்தில் பல ஊசிகள் ஏற்றப் போகின்றேன். இவை எவ்வளவு மிகையான வலியைக் குறைக்குமோ அவ்வளவையும் குறைக்கும். ஆனால், முழுமையும் மரத்துப் போகுமாறு செய்ய என்னால் இயலாது என்பது உனக்குத் தெரியும்'' என்று கூறினர். அவர் ஊசிகளை ஏற்றத் தொடங்கினர். அவ்வாறு பணியாற்றும்பொழுது மருத்துவர் 'சோன்சு' சிலகால் உடனுழைப்பாளர்களுடன் கலந்துரையாடியும், சிலகால் காட்சிக் கூடத்திற்குள் அமர்ந்திருந்த செயலாளருக்குக் குறிப்புகளை இடைச் செய்தித் தொடர்பு வழி அறிவித்தும் வந்தார்.

அவர் ஒவ்வோர் ஊசிக்கும் செலுத்த வேண்டிய மருந்தின் வகை, அளவு, இவற்றை விரித்துரைத்தும், என்னுடைய நோய் வரலாற்றைப் பார்வையிட்டும், வலிப்பு நோய்க்கு யாது பொருட்டாயிருக்க வேண்டும் என்று அவர் எண்ணியதை விளக்கிக் கூறியும், என்னுடைய பிறப்புக்காலத்தில் உண்டாகிய பிறப்புப் புண்ணால் ஏற்பட்ட ஊறுபாடு, மூளையின் ஒரு பகுதிக்கு உயிர் வளியைக் கொண்டுசெல்லும் குருதிச் சுழற்சிக்குக் குறுக்கீடாக அமைந்தது என்பது பற்றி அறிவித்தும், அவர் ஆற்றிய பணியினை நான் நினைக்கும்பொழுது அவருடைய மிகவும் நுண்மை வாய்ந்த இத்தகு அறுவையும், அதே நேரத்தில் அவர் கட்டுறுத்திக் கூறுகின்ற (Dictate) முறையும் மிக்க வியப்பையளித்தன. ஒவ்வோர் ஊசியும் என் வாயின் வழியாக வெளி வருவது போன்ற உணர்வைப் பெற்றேன். நான் ஊசிகளை எண்ணுவதை

இழந்துவிட்டேன். ''இன்னும் எவ்வளவு இருக்கின்றன''? என்று கேட்டுக் கொண்டிருப்பேன். ''மிகுதியாக இல்லை சிறிது நேரம் பொறுத்துக்கொள்ள முயற்சி செய்'' என்று அந்த மருத்துவர் விடையிறுப்பார். நான் அந்த மணிப்பொறியை நோட்டம் விட்டேன். எனக்கு அஃது இயலாத செயலாகத் தோன்றியது. ஆனால் அப்பொழுது மணி 11-30 ஆகியிருந்தது. இப்பொழுது, தலையின் மேற்பகுதியில் அழுக்கம் நிறைந்த உணர்வைப் பெற்றேன். அஃது அறுவை மருத்துவரின் சிறிய மிகக் கூர்மை வாய்ந்த கத்தியின் அழுத்தத்தினால் ஏற்பட்டது என்பது தெரிந்தது. வலியில்லை; திடுமெனக் கதகதப்புள்ள நீர்மப் பொருள் என்னுடைய கன்னத்திற்குக் கீழே பெருக்கெடுத்து வழிந்தது. நான் அறிந்தபொழுது அஃது என்னுடைய குருதியே என்பதும் தெரிந்தது. ''நான் மேல்நோக்கி எறியப் படுகின்றேன்'' என்று கூறினேன். என்னுடைய முகத்திற்கு மிக அருகில் ஒரு கோப்பை வைக்கப் பெற்றது. வாய் உலர்ந்து விட்டது. ஒரு துண்டு பனிக்கட்டி உதடுகட்கிடையில் வைக்கப்பெற்றது.

'' 'அன்னெட்' நாங்கள் உன்னுடைய மண்டையோட்டில் சில தொளைகளைப் போடப் போகின்றோம்'' என்று மருத்துவர் 'சோன்சு' கூறினார். தொளையிடுதல் தொடங்கப்பெற்றது. சிறிது நேரம் மங்கலான அரைப்பொலியும், மிகக் குறைந்த வலியும் இருந்தன. நான் அறிந்த வரையில், அவை ஐந்திலிருந்து ஏழு பெரிய தொளைகளாக இருக்கவேண்டும். முடிவுறு இடைவேளைக்குப் பிறகு, எலும்பை அறுக்கும் ஒலியைக் கேட்டேன். நான் நோய்த் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருந்தேன். இரண்டரை ஆண்டுகட்கு முன்னர் நடந்த அறுவையின்பொழுது என்னுடைய மண்டையோடு திறக்கப்பட்ட நிகழ்ச்சியானது என்னுடைய நினைவில் அவ்வளவு பசுமை மாறாமல் இருந்தது. ''மண்டையோடு பிளந்து திறக்கப்பட இன்னும் எவ்வளவு நேரம் ஆகும்'' என்று நான் வினவினேன். யாரோ ஒருவர் என்னுடைய கையில் அன்போடு தட்டிக் கொடுத்து ''அது முன்பாகவே முடிந்துவிட்டது அன்னெட்'' என்று கூறினார். அந்த மணிப்பொறி நண்பகல் 12-00-ஐக் காட்டியது. ஒரு பணிப் பெண் ஒரு கோப்பையில் ஆவியுடன் கூடிய ஒன்றை வைத்திருந்தாள். ஒருவேளை அஃது எலும்புச் சாறாக (Soup) இருக்கவேண்டும். மருத்துவர் 'சோன்சு' தாட்குழலின் (Straw) வழியே அதைப் பருகினார். நான் உணர்ந்ததை விட அதிகம் கேட்க முடிந்தது. அஃது என்னுடைய மூளையின்மீது நீர்மத்தைப் பீச்சப் பெற்றபொழுது ஏற்பட்ட பொறுக்க முடியாத உணர்வுதான். மூளையானது திறந்துவைக்கப் பெற்றிருப்பதால், காற்று அதன் மேற்புறத்தை உலர வைத்தது. அதனால் அதைத் தொடர்ந்து ஈரமாக்க வேண்டியிருந்தது.

1-30 மணிக்கு மருத்துவர் 'சோன்சு' ''அப்பொறியை இக் கோணத்தில் திருப்புக'' என்று கூறினார். அவர் அப்படிக்

கூறியதிலிருந்து என்னுடைய மூளையின் உயிரணுக்களின் மின் இயக்கச் செயலைத் தூண்டுவதற்கு அவர் பயன்படுத்தப் போகும் பொறி அஃது என்று கண்டுகொண்டேன். வெண்மை-கருப்பு நிறங்களிலும், வண்ணத்திலும் படங்கள் எடுக்கப் பெற்றன. பிறகு, மருத்துவர் 'சோன்சு' என்னிடம் மெதுவாகப் பேசினார் "'அன்னெட்!' இப்பொழுதிலிருந்து உன்னுடைய முழுமையான ஒத்துழைப்பு எனக்குத் தேவைப் படுகின்றது. நாங்கள் இப்பொழுது உன்னுடைய மூளையின் உணர்வைத் தூண்டப் போகின்றோம். நீ எதை எங்கே, எவ்வாறு உணர்கின்றாய் என்பதைச் சரியாக எங்களுக்குச்சொல்லல் வேண்டும். அணியமாக உள்ளாயா?" என்று கேட்டார். நான் அவ்வாறே உள்ளதாகக் கூறினேன். ஒருசில மணித் துளிகட்குப் பிறகு மிக மெல்லிய மின்னோட்டம் என் உடல் வழியே செல்வதை உணர்ந்தேன். மிசைப் பலகையின் மீதிருந்து இடப்புறமாக விழப்போவது போன்று உணர்வதாக அறிவித்தேன். அவர், "மிக நன்று; மீண்டும் ஒரு முறை அதைச் செய்கின்றோம்" என்று கூறினார். இம்முறை மின்னோட்டமானது மிகையாக இருந்தது நான் என்னுடைய இடது காலானது மிசைப் பலகையின் மீதிருந்து கீழே விழுந்துவிடும் போல் தோன்றுவதாக அறிவித்தேன். சிறிது நேரத்திற்குப் பின், யாரோ ஒருவர் என்னுடைய காலை மீண்டும் தூக்கி மிசைப் பலகையின் மீது வைத்தார். பிறகு "இன்னும் சில வண்ணப் படங்களை அருள்கூர்ந்து எடுங்கள்" என்று மருத்துவர் கூறியதை நான் கேட்டேன்.

மீண்டும் மூளையின் உணர்வுத் தூண்டுதல், என்னுடைய இடப்பக்க முன் விரல்கள் உள் நோக்கித் திரும்பின போன்ற உணர்வு மருத்துவர் 'சோன்சு' அவ்வாய்வை மீண்டும் நிகழ்த்தினார். "உணர்வோட்டத்தின் பொழுது 'அன்னெட்' சொல்வதை நான் கேட்க வேண்டும்" என்று கூறினார். என்னுடைய குரலை நான் உணர முடிந்தது. நான் கூறுகின்ற சொற்கள் யாவும் பதிந்துகொள்ளப் பெறுவதை நான் அறிந்தேன். அதன் பிறகு உடனடியாக மருத்துவர் 'சோன்சு', "அன்னெட்'! உனக்குச் சில வகைகளில் துன்பம் கொடுத்து வந்த உன்னுடைய மூளையின் மிகச்சிறு பகுதியை நான் நீக்கப் போகின்றேன்" என்றார். அதற்குப் பிறகு கேள்வியுற்ற "அன்னெட்! நினைவில் வைத்துக் கொள். உன்னுடைய மூளையின் ஒருசிறு பகுதி என்னுடைய கைகளில் இருக்கின்றது" என்ற சொற்களை நான் எப்பொழுதும் மறத்தல் ஒல்லாது. சில மணித்துளிகட்குப்பின் ஒரு மாழைப் பொருள் (Metal) கிறீச்சிடும் ஒலி கேட்டது. அஃது அவர் பயன்படுத்திய கருவியைக் கீழே எறிந்தமையால் ஏற்பட்ட ஒலிதான். மூளையின் சிறுபகுதி துண்டிக்கப் பட்டதென அறிந்துகொண்டேன். நான் மணிப்பொறியைப் பார்த்தேன். மணி 2-30 ஆக இருந்தது.

மருத்துவர் சோன்சு, ''அன்னெட்! நான் மீண்டும் உணர்வெழுப்பப் போகின்றேன். அருள் கனிந்து நீ உணர்வதை எனக்குக் கூறு.'' என்று கேட்டுக் கொண்டார். நான் மின்னோட்டத்தை உணர்ந்தேன். அப்பொழுதே என்னுடைய இடக்கண் உள்நோக்கிச் செருகியதை உணர்ந்தேன். அது மீண்டும் மீண்டும் நிகழ்த்தப் பெற்றது மீண்டும் மருத்துவர் ''நான் உன்னுடைய மூளையின் மற்றொரு சிறிய துண்டொன்றை அகற்றப் போகின்றேன்'' என்றார். அப்படிப்பட்ட நெருக்கடியான நிலையில் ''மருத்துவர் அவர்களே! எனக்கு இதுவரையில் ஏற்பட்டிராத வேடிக்கையான உணர்வுகளைப் பெறுகின்றேன். நான் வலிப்பு நோயைப் பெறக்கூடும் என்று மிக அஞ்சுகின்றேன்.'' என்று கூறினேன். மாழைக் கருவி கிறீச்சிட்டது. அவர் அக்கருவியைப் பக்கலில் வைத்தார். சிறிது நேரத்தில் எனக்கு வலிப்புநோய் வந்தது. ஆனால் அது மிகச்சிறு அளவினதாகவே இருந்தது. மீண்டும் ஒரு முறை தூண்டப்பெற்ற மின்னோட்டம் என் உடல் வழியே செல்வதை உணர்ந்தேன். இம்முறை புதுமையான, நோய்த் தன்மையுள்ள, உணர்வை என்னுடைய வயிற்றின் பள்ளத்தில் பெற்றேன்.

மீண்டும் ஒரு முறை மருத்துவர் '' 'அன்னெட்டு'! நான் மூளையினுடைய பழுதுற்ற மற்றொரு சிறு துண்டையும் அகற்றப் போகின்றேன்'' என்று கூறினர். அவருடைய துணைப் பணியாளர்களிடத்தில் கூறுமுகத்தான் அவர் எவ்வளவு ஆழ்ந்து மூளைக்குள் பண்டுவம் செய்கின்றார் என்பதை விளக்கினர். மேலும் அவர், முன்பு அறுவை நிகழ்த்திய மருத்துவர் மிகத் துல்லியமாகச் சரியான இடத்தைப் பயன் படுத்தியதையும், எனக்குச் செயலிழந்த நிலை ஏற்பட்டுவிடக்கூடும் என்ற அச்சத்தினால் மிகவும் ஆழ்ந்து செல்லாமையையும் சுட்டிக் காட்டினர். முதன்முறையாக நான் துண்டிப்பது போன்ற வலியைச் சற்று நேரத்திற்குப் பெற்றேன். அது மறைந்த பொழுது நான் ''யாராகிலும் எப்பொழுதாவது மூளையின் உட்பகுதியில் உணர்வில்லை என்று மீண்டும் கூறுவாராகில், மருத்துவர் 'சோன்சு' அவர்களே! அவற்றை நீங்கள் நம்பாதீர்கள்'' என்று கூறினேன். ''நான் மிகவும் களைப்புற்றிருக்கின்றேன். என்னைத் தூங்க விடுங்கள்'' என்று கூறிக் கொண்டிருந்தேன். ''அன்னெட்டு! நான் உனக்குக் கால் மணி நேரம் தருகின்றேன் அதற்குள் நீ உறங்கிவிடு'' என்று அவர் விடையிறுத்தார்.

அப்பொழுது அவர் மூன்றும் முறையாக துண்டிப்பு நிகழ்த்தப் போவதாக அறிவித்தார். பின், கண்பார்வையைக் கட்டுப் படுத்துகின்ற மூளையின் ஒரு பகுதியைத் தொட்டார். முதன் முறையாக நான், மருத்துவர் 'சோன்சின்' கைக்கு உறுதியைத் தரவேண்டும் என்று மனதிற்குள் இறைவனை வேண்டினேன்.

பிறகு அவர் அறுவை நிகழ்த்தும் கத்தியைக் ஜீழே போடும் ஒலியைக் கேட்டேன். நான் உணர்விழக்கச் செய்வாரை நன்ரு கக் காணும் நிலையில் இன்னுமிருந்தேன். இறைவனுக்கு நன்றி யறிதலை தெரிவித்தேன். மருத்துவர் 'சோன்சு' ''இன்னும் விழித்துக் கொண்டிருக்கின்ருயா? நான் உனக்குக் கால் மணி நேரம் கொடுத்ததாக நினைவிருக்கின்றது'' என்று கூறினுர். நான் மிகவும் வலிவிழந்த நிலையில் ''அதை என்னுடைய பட்டி யலில் கழித்துக் கொள்ளுங்கள்'' என்று கூறியதாக குறிப்புகள் அறிவித்தன. நான் மிக மிகக் களைப்புற்றிருந்தேன். என்னைச் சுற்றியிருந்தவர்களின் ஒலியைக் கூடக் கேட்க இயலவில்லை. சிறிது நேரத்திற்குப் பிறகு மருத்துவர்கள் என்னுடைய கை களும், கால்களும் தன்னுணர்வால் இயங்குகின்றனவா என்பதை ஆய்ந்தறிய முற்பட்டனர். அவர்கள் ''கை கால் இவற்றின் நான்கு முனைகளும் தன்னியக்கத்தைப் பெற்றிருக் கின்றன செயலிழந்த நிலை இல்லை'' என்று கூறியதைத் தெளி வற்ற ஒலியில் நான் கேட்டேன்.

''அன்னெட்! உன்னுடைய கையை உறுதியாகப் பிடித்துக் கொள், நாங்கள் தூய்மையிழந்த தகுதியோடு நின்ற நரம்பைக் (Vein) காணவேண்டும்'' என்று நினைவிழக்கச் செய்வார் கூறி னுர். அஃது, அறுவைப் பண்டுவம் முடிவுற்றது என்பதைக் காட்டுகின்றது. இப்பொழுது அவர்கள் என்னுடைய மண்டை யோட்டைப் பொறுத்தி மூடுவதற்காக என்னைத் தூங்கச் செய் வார்கள். முற்றும் சோர்வடைந்த நிலையில் நான், என் பார்வையை மணிப் பொறியின் மீது செலுத்தினேன். ஊசி என் கையில் செலுத்தப் பெறுவதை ஊர்ந்தேன். நேரம் 4-30. செய லிழந்த நிலை இல்லை. எல்லாம் இனிதே முடிவுற்றது.

[திருவாட்டி 'அன்செல்மோ' வுக்கு நிகழ்த்தப் பெற்ற அறுவைப் பண்டுவத்தின் இனம் முற்றிலும் வழக்கத்திற்கு மாருனது. அது சில குறிப்பிட்ட அரிய நோய்களில் மட்டும் கையாளப் பெறுகின்றது. ஆனல் எல்லா வகைக் காக்கை வலிப்பு நோய்கட்கும் இது முழு அளவில் பொறுத்த முடையதாகவோ நன்மை தரத் தக்கதாகவோ இல்லை. அவள் விளக்கிக் கூறிய நுண் செயல்கள் யாவும், பத்து ஆண்டுகட்கு மேலாக நரம்பறுவை மறுத்துவத்துறையின் (Neurosurgery) முன் னேற்றத்தினல் மாற்றியமைக்கப் பெற்றுள்ளன என்பது இங்குக் குறிப் பிடத் தக்கது. அன்னெட்டு அன்செல்மோவின் நிகழ்ச்சியில் அறுவைப் பண்டுவம் வெற்றியளித்தது. மிகக் குறைந்த அளவு மருந்து கொள் வதன்மூலம் அவளுடைய நடவடிக்கைகளில் எவ்வகைக் கட்டுப்பாடு மின்றி ஒரு முழுமையான வாழ்க்கையை நடத்துகின்ருள். அவளுக்கு இன்னும் வலிப்பு நோய் வருகின்றது. ஆனல் மிக மிகக் குறைந்த அளவையும், குறுகிய நேரத்தையும் கொண்டு, இரவுக் காலங்களில் ஆண்டிற்கு இரண்டு மூன்று முறைகள்தாம் வருகின்றது. அவளுடைய இச் சிறப்பு மிக்க நிகழ்ச்சியின் நினைவுகள் அவள் உள்ளத்தில் என்றுமே மங்காமல் தங்கி யிருக்கும்.]

அப்பங்களைப் பங்கிட்ட குரங்கின் கதை!

அமைச்சர் திரு. மசீது அவர்கள் அண்மையில் திருச்சி அருகில் ஒரு சிற்றூரில் உயர்நிலைப் பள்ளி யொன்றின் புதிய கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டச் சென்றிருந்தார். பள்ளியின் சார்பாக அவர்க்களிக்கப்பெற்ற வரவேற்பிதழில், ''பள்ளியினின்று 30 அடித் தொலைவிற்குள் அரிசி ஆலை ஒன்றிருப்பதாகவும், அதன் இரைச்சல் பள்ளி வேலைகட்கு மிகவும் இடையூறாக இருப்பதாகவும், அவ்வாலைக்கு அம்பகம் அளிக்குமுன்பே தடுத்துரைத்தும், அதனைப் புறக்கணித்துவிட்டனர் என்றும், இனியேனும் அவ்வாலையை அங்கிருந்து அகற்றிவிட அமைச்சர் ஆவன செய்தல் வேண்டும்'' என்றும் கேட்டுக் கொள்ளப் பெற்றது. அடுத்தபடியாக ஊராட்சி மன்றச் சார்பாக அளித்த வரவேற்புரையில், அரிசி ஆலையின்மேலுள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்துமாறும், மக்கள் தேவை கருதிப் பகல் முழுவதும் அது வேலைசெய்ய இசைவு தருமாறும் கேட்டுக் கொள்ளப் பெற்றிருந்தது. பள்ளி வேலைக்கு ஆலை தடையாக இல்லை என்றும் தெரிவிக்கப் பெற்றது. இவ்விரு வரவேற்பிதழ்களையும் முகமலர ஏற்றுக்கொண்ட அமைச்சர், ஊராட்சி மன்றத் தேர்தல் விரைவில் நடக்கவிருக்கும் பொழுது மக்களிடையே இத்தகைய பூசல்கள் கூடாது'' என்று அமைவு கூறினாராம்!

இன்றைய ஆட்சியில் மக்களின் தேவைகள் எப்படி எப்படி முரண்பாட்டுக் குரியவாக உள்ளன என்பதையும், அரசினர், சிக்கலை அணுகாமல் மக்களை எப்படித் தட்டிக் கொடுத்துத் தங்கள் நோக்கத்தைமட்டும் பார்த்துக்கொண்டு சென்றுவிடுகின்றனர் என்பதையும் விளக்க இஃதோர் எடுத்துக்காட்டு!

'கொய்யாக்கனி' எனும் இப்பனுவல் எல்லாத் தமிழர்க்கும் கொய்யுங் கனியாகுக! —பாவாணர்.

'வெள்ளம் எப்படி அப்படிச் செந்தமிழ்ச் சொற்பெருக் கேற, மேன்மை எப்படி அப்படிப் பட்டதோர் நடையில், தம் நல்ல உள்ளம் எப்படி அப்படித் தந்ததோர் உயர் தமிழ் நூல்தான், உலகம் எப்படி அப்படிப்பட்டதோர் நிலைகொள் கொய்யாக்கனியே! —பாவேந்தர்.

நீங்கள் சுவைத்தீர்களா?

துரை. மாணிக்கம் எழுதிய

கொய்யாக்கனி

தென்மொழி உறுப்பினர்கட்கு மட்டும் விலை 1-50.

அஞ்சல் செலவு தனி.

Chakram Radio Services

36 Sanjeevi Naidu St. Cuddalore-2.

—o—

- Your Radio is your proud possession. You will not entrust it to an unqualified man for repairs.
- For prompt and efficient servicing of your Radios,
- Entrust them to -

C. R. NARAYANAN B. Sc.,
(Qualified Engineer.)



- உங்கள் வானொலிப் பெட்டிகளைச் சிறந்த முறையில் பழுதுபார்க்க நம்பிக்கையான இடம் அதுதான்...!

மித்திரா அச்சகம், கடலூர்-2